# ஏ. கே. செட்டியார்

சா. கந்தசாமி



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

ஏ. கே. செட்டியார்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# ஏ. கே. செட்டியார்

சா. கந்தசாமி

சாகித்திய அக்காதெமி

**A.K. CHETTIAR** - Monograph in Tamil by Sa. Kandasamy.
Sahitya Akademi, New Delhi. 2000. Rs. 25/-

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு : 2000
ISBN-81-260-0898-9

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்:
'ரவீந்திர பவன்',
35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி – 110 001.

விற்பனை:
'ஸ்வாதி' மந்திர் சாலை,
புது தில்லி – 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம்,
பல்கலைக்கழக நூலகக் கட்டிடம்,
டாக்டர் அம்பேத்கார் வீதி,
பெங்களூர் – 560 001.

சி.ஐ.டி. வளாகம்,
தரமணி, சென்னை – 600 113.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி
டைமண்ட் ஹார்பர் சாலை,
கல்கத்தா – 700 053.

172, சாரதா சினிமா பில்டிங்
தாதர், மும்பை – 400 014.

விலை ரூ. 25/–

அச்சிட்டோர் : மணி ஆப்செட், சென்னை.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | முன்னுரை | --- | 7 |
| 1. | வாழ்க்கைக் குறிப்புகள் | --- | 9 |
| 2. | பயண நூல்கள் | -- | 16 |
| 3. | குமரி மலர் | --- | 57 |
| 4. | மகாத்மா காந்தி டாக்குமெண்டரி | --- | 66 |
| 5. | முடிவுரை | --- | 90 |

# முன்னுரை

ஏ.கே. செட்டியார் என்று அன்புடன் அழைக்கப்படும் அ. கருப்பன் செட்டியார் பிரபலமான பயணநூல் எழுத்தாளர். உலகத்தில் உள்ள பல கண்டங்களுக்கும் — சின்னஞ்சிறிய தீவுகளுக்கும் பயணம் செய்து அது பற்றி சுவாரசியமாக எழுதி, பயணம் செய்யவும் — எழுதவும் தூண்டிய எழுத்தாளர். நாற்பதாண்டுகளுக்கு மேலாக குமரிமலர் என்ற மாத இதழை பயண கட்டுரைகள், சிறுகதைகள், வாழ்க்கைச் சித்திரம் — என்பதற்காகவே நடத்தியவர். அரிய கட்டுரைகளைத் தேடி சிறந்த கருத்துக் கோவைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டவர். எல்லாவற்றுக்கு மேலாக 1940ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியைப் பற்றி ஒரு டாக்குமெண்டரி தயாரித்து வெளியிட்டவர். மகாத்மா காந்தி பற்றி தயாரிக்கப்பட்ட முதல் சினிமா படம் அதுவே. சிறந்த புகைப்படக் கலைஞர். ஆஸ்திரியாவில் சுபாஷ் சந்திரபோஸ் தங்கி இருந்தபோது செட்டியார் எடுத்த புகைப்படம் ஒன்றை நேஷனல் ஜாக்ரபிக்கல் மேகஸீன் வெளியிட்டது.

இனிய பண்பாளர். உற்சாகமான மனிதர். கலைஞன் மாசிலாமணி மூலமாக அவர் எனக்குப் பழக்கமானார். ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அவருடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அது ஒரு பாக்கியம் என்றே கருதுகிறேன்.

கலைஞன் பதிப்பகம் மாசிலாமணி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக மேலாண்மை இயக்குநர் முத்துக் குமாரசுவாமி ஆகியோர் உதவியாலே இந்த நூல் எழுதுவது சாத்தியமாகியது. அவர்களுக்கு இதயபூர்வமான நன்றி.

**சா. கந்தசாமி**

2, அக்டோபர் 1998
சென்னை.

# 1. வாழ்க்கைக் குறிப்புகள்

தமிழில் மிகச்சிறந்த பயண நூல்கள் எழுதியவர். மகாத்மா காந்தி பற்றி முதன் முதலாக டாக்குமெண்ட்ரி படம் தயாரித்து வெளியிட்டவர், நாற்பது ஆண்டுகளுக்கு மேல் குமரிமலர் என்ற மாத இதழ் பதிப்பாசிரியர், அதோடு தொகுப்பு நூல் ஆசிரியர் ஏ. கே. செட்டியார் என்று அறியப்படும் அ. கருப்பன் செட்டியார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கோட்டையூரில் 3.11.1911 ஆண்டில் பிறந்தார். திருவண்ணாமலையில் உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்து படித்தார். படிக்கும் போதே விவேகாந்தர் போன்ற தத்துவஞானிகளால் கவரப்பட்டார். சுதந்திர போராட்டம் அவரை வெகுவாகக் கவர்ந்தது. கூட்டங்களில் பேசுவது எழுதுவது அவருக்கு இளம் வயதிலேயே பிடித்தமான வேலையாயிற்று. எழுதியும் பேசியும் தேர்ச்சி பெற்றார்.

பர்மாவின் தலைநகரான ரங்கூனில் நாட்டுக்கோட்டை நகரத்தார் தன வைசியருக்காக நிறுவியிருந்த சங்கத்தின் சார்பில் தனவணிகன் என்ற பத்திரிகை நடத்திக் கொண்டு இருந்தார்கள். அதற்கு ஆசிரியராக தம் இருபதாவது வயதில் போய்ச் சேர்ந்தார் செட்டியார். சில ஆண்டுகள் அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். பத்திரிகையில் இருந்ததால் புகைப்படக் கலையில் அவருக்கு ஆர்வம் வந்தது. எனவே 1936ஆம் ஆண்டில் ஜப்பான் சென்றார். இம்பீரியல் ஆர்ட்ஸ் கலாசாலையில் சேர்ந்து போட்டோகிராபி பயின்றார்.

ஜப்பானில் போட்டோகிராபி கற்றுக்கொண்டிருந்த போதே அங்கு கண்டதையும் கேட்டதையும் தன் சொந்த

அனுபவத்தையும் ஒன்றாகச் சேர்த்து தனவணிகன் பத்திரிகைக்கு கட்டுரையாக அனுப்பி வைத்தார். அவரது கட்டுரைகள் பலருக்குப் பிடித்திருந்தன. எனவே தனவணிகனில் அவர் எழுதிய கட்டுகரைகள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு ரங்கூனில் இருந்து 'ஜப்பான் கட்டுரைகள்' என்ற தலைப்பில் வெளிவந்தது. அதுதான் ஏ.கே. செட்டியாரின் முதல் நூல்.

ஜப்பானில் போட்டோகிராபி படிப்பை முடித்துக் கொண்ட ஏ.கே. செட்டியார் மேல் பயிற்சிக்காக அமெரிக்கா சென்று நியூயார்க் நகரில் உள்ள போட்டோகிராபிக்கல் இன்ஸ்டிட்டியூட்டில் சேர்ந்து படித்து டிப்ளமா வாங்கினார். படிப்பு முடிந்து இந்தியாவுக்கு 1937 ஆம் ஆண்டில் திரும்பும் வழியில் இங்கிலாந்து, அயர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார். இந்தப் பயணத்தின் போது ஏற்பட்ட அனுபவங்களை கட்டுரையாக எழுதினார். பின்னர் அது, உலகம் சுற்றும் தமிழன் - என்ற பெயரில் சக்தி வெளியீடாக 1940 ஆண்டில் வெளிவந்தது. அதன் பின்னர் ஏ.கே. செட்டியார் 'உலகம் சுற்றும் தமிழன்' என்றே அழைக்கப்பட்டார். அதற்கு அவர் முற்றிலும் பொருத்த மானவர். அவர் காலத்தில் அவரைத் தவிர வேறுயாரும் - அவர் சென்ற நாடுகளுக்கெல்லாம் சென்றதில்லை. அவர் சுமார் நான்கு லட்சம் மைல்களுக்கு மேல் பயணம் செய்து இருக்கிறார்.

அவர் எழுத்துக்களில் தமிழின் அடிப்படை அம்சங்களைக் காணலாம். அதாவது சுருக்கமாகச் சொல்வது. சொல்ல வேண்டிய அளவிற்குச் சொல்வது என்பதுதான். அதோடு சுற்றி வளைக்காமல் சுவாரசியம் என்பது பிரதான அம்சம் என்பது மாதிரியும் எழுதி இருக்கிறார். பயணநூல் எப்படி எழுதவேண்டும் என்பதற்கு இன்று வரையில் அவர் ஓர் எடுத்துக்காட்டாகவும் இருந்து வருகிறார்.

அவரது பயணநூல்களில் முக்கியமானவை உலகம் சுற்றும் தமிழன், பிரயாண நினைவுகள், கயானா முதல் காஸ்பியன் கடல் வரை, அமெரிக்க நாட்டிலே, ஐரோப்பா வழியாக, குடகு - ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

உள்நாட்டு பயணமானாலுஞ்சரி, வெளிநாட்டுப் பயணமானாலுஞ்சரி அதை ஏ.கே. செட்டியார் சுற்றி வளைத்து

அலங்காரப் படுத்திச் சொல்லவில்லை என்பதைச் சிறப்பான அம்சமாகக் குறிப்பிடவேண்டும். அதற்காக அவர் எதையும் மறைமுகமாக, சொல்லாமல் விட்டுவிட்டார் என்பதில்லை. எவ்வளவு தூரம் சொன்னால் ஒரு நிகழ்ச்சியை உணரமுடியுமோ அந்த அளவிற்கு அளந்து நிறுத்துச் சொன்னார். கட்டுரைகளில், தொடங்கும் இடம் தெரிந்து இருந்தது போலவே அவருக்கு நிறுத்தும் இடமும் தெரிந்திருந்தது. அவர் எழுத்துக்களில் குறிப்பிடவேண்டிய இன்னொரு சிறப்பு அம்சம் சுவாரசியமான தகவல். மிக முக்கியமான தகவல்களை முக்கியத்துவம் வாய்ந்தது என்று அறிந்து கொள்ளும் தொனியிலும் எழுதினார்.

ஏ.கே. செட்டியார் தன்னுடைய சொந்தப் பயண அனுபவத்தைப் படிக்கிறவர்கள் முழுமையாகவும் சிரமம் ஏதுமின்றியும் ஏற்கும் படியான விதமாக எழுதினார். எந்த அம்சத்தை வாசகர்கள் பெறவேண்டும் என்று கருதினாரோ - அதை அப்படியே - முழுமையாகப் பெற்றார்கள். அதுவும் செட்டியாரைப் பற்றிய சிறப்பான அம்சம் என்று குறிப்பிட வேண்டும்.

அவர் ஏற்கனவே இந்தியாவில் இருந்து பர்மாவில் ரங்கூன், ரங்கூனில் இருந்து ஜப்பான், ஜப்பானில் இருந்து அமெரிக்கா - என்று பல நாடுகளுக்குச் சென்று இருந்தாலும், அவரை ஒரு சுற்றுலாப் பயணியாக்கியது, மகாத்மா காந்தி பற்றி அவர் டாக்குமெண்டரி படம் எடுக்க முனைந்ததுதான். தொழில் முறையில் தொடங்கிய பயண அனுபவங்களை, அவர் நேர்த்தியாகப் பதிவு செய்து 'உலகம் சுற்றும் தமிழன்' என்று சிறப்புப் பெற்றுவிட்டார்.

1937 ஆம் ஆண்டில் எஸ்.எஸ். சமரியா என்ற கப்பலில் ஏ.கே.செட்டியாரின் மகாத்மா காந்தி டாக்குமெண்டரி எடுக்கும் பயணம் தொடங்கியது. அவர் தென்னாப் பிரிக்காவுக்குச் சென்றார். நேடால், டர்பன் சென்று பார்த்தார். அதுதான் மகாத்மா காந்தியை உருவாக்கிய பகுதி. வக்கீல் வேலை பார்க்கச் சென்ற காந்தி, தனக்கு தென்னாப்பிரிக்காவில் இழைக்கப்பட்ட கொடுமைகளைச் சகிக்க முடியாமல் போராட்டத்தில் இறங்கினார். ஏற்கனவே தென்னாப் பிரிக்காவில் வெள்ளையர் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த இந்தியர்கள், குறிப்பாக

தமிழர்கள், குஜராத்திகள், சிந்திகள், வங்காளிகள் என்று பலரும் அவர் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். காந்தி தனது வக்கீல் வேலையை விட்டுவிட்டு சமூகத்திற்கு முழு மூச்சுடன் உழைக்க ஆரம்பித்தார். அதற்காகப் பத்திரிகைகள் நடத்தினார். ஆசிரம் அமைத்தார். அதற்கு டால்ஸ்டாய் பண்ணை என்று பெயரிட்டார். தென்னாப்பிரிக்கா சென்ற ஏ.கே.செட்டியார், மகாத்மா காந்தியின் நினைவுச் சின்னங்களாக இதை எல்லாம் படம் பிடித்துக் கொண்டார். அவருக்கு காந்தி என்பது ஒரு மந்திரச் சொல் மாதிரி. அதை நிலைநிறுத்தும் விதமாக உலகமெங்கும் ஒலிக்கும் ஒரு பெயர் என்று ஒரு கட்டுரையும் எழுதி இருக்கிறார்.

ஏ.கே.செட்டியார் மகாத்மா காந்தி டாக்குமெண்டரிக்கு நிறைய உழைத்தார் என்றுதான் குறிப்பிட வேண்டும். போக்குவரத்து வசதிகள் அவ்வளவாக இல்லாத உலக மகா யுத்த காலத்தில் 10,000 மைல்களுக்கு மேல் பயணம் செய்தார். அப்புறம் 200க்கு மேற்பட்ட புத்தகங்களில் இருந்து மகாத்மா காந்தி பற்றி எழுதப்பட்டு இருப்பதை எல்லாம் படித்து அதில் எது பயன்படுமோ - அதையெல்லாம் தனியாகக் குறித்துக் கொண்டார். அதோடு இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, - என்று பல நாடுகளில் மகாத்மா காந்தி பற்றி செய்தி நிறுவனங்களும் தனியார் சினிமா தயாரிப்பாளர்களும் எடுத்த டாக்குமெண்டரியில் இருந்து, தனக்குத் தேவையான பகுதிகளை வாங்கிக் கொண்டார். மகாத்மா காந்தியிடம் பழகியவர்களைத் தேடிக் கண்டுபிடித்து - படம் பிடித்து வைத்துக் கொண்டார். இந்த வகையில் 50,000 அடி படம் சேர்ந்துவிட்டது. எடிட்டிங் ஹாலிவுட்டில் நடைபெற்றது. 50,000 அடி கொண்ட படத்தை 12,000 அடிக்குக் கொண்டு வந்தார். 1940ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி சினிமா தமிழ் விளக்க உரையுடன் திரையிடப்பட்டது.

மகாத்மா காந்தி படத்தை, இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் நல்ல விலைக்கு வாங்கிக் கொள்ளப் பலர் முன் வந்தார்கள். 1952ஆம் ஆண்டில் அதற்கு ஓர் ஆங்கில விளக்க உரையும் இணைக்கப்பட்டது. ஆனால் மகாத்மா காந்தி அரசாங்கத்தின் சொத்தாகவே இருக்க வேண்டுமென்று கொடுத்துவிட்டார்.

மகாத்மா காந்திக்கு அடுத்தபடியாக ராஜாஜி மேல் அவருக்கு அபிமானம் இருந்தது. ராஜாஜியும் செட்டியார் மீது இணையற்ற அன்பு பாராட்டி வந்தார். குமரிமலர் வெளி வந்ததும், அதற்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் இருந்து கடைசிக் காலம் வரையில் ஏதாவது ஒரு வகையில் குமரி மலர் பத்திரிகையோடு தொடர்பு வைத்துக் கொண்டு இருந்தார்.

ராஜாஜி பற்றிய ஒரு சம்பவத்தை ஏ.கே.செட்டியார் ஒரு முறை நினைவு கூர்ந்து சொன்னார்.

ராஜாஜி முதலமைச்சராகப் பதவியில் இருந்த போது ஒரு முறை நாகர்கோயில் சென்றார். அவர் நண்பரான கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை பக்கத்துக் கிராமத்தில் வசித்து வந்தார். கவிமணியைப் பார்க்க ஆசைப்பட்ட ராஜாஜி அதற்கு வேண்டிய பாதுகாப்புக்கு ஏற்பாடுகளைச் செய்யும்படி போலீஸ் அதிகாரியிடம் கூறினார்.

" நீங்கள் ஏன் ஐயா அவ்வளவு தூரம் போக வேண்டும். நாங்கள் போய் அவரை அழைத்துக் கொண்டு வந்து விடுகிறோம்" என்றார் போலீஸ் அதிகாரி.

ராஜாஜி பதறிப் போய்விட்டார். "தேசியவிநாயகம் பிள்ளை என் நண்பர். நான் முதலமைச்சர் பதவியில் இருக்கிறேன். அவர் பதவி எதுவும் வகிக்கவில்லை. அதனால் நான் போய் அவரைப் பார்ப்பதுதான் எனக்கே பெருமை. நீங்கள் இரண்டு எலுமிச்சம் பழத்திற்கும் பயணத்திற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்று செல்லியனுப்பினார்.

பிறகு எலுமிச்சம் பழம் வந்ததும் ராஜாஜி கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்புப் பற்றி, எளிய இனிய இரண்டு கனி கொண்டு என்னை வந்து பார்த்த இராசகோபால - என்று கவிமணி ஒரு வெண்பா பாடியிருக்கிறார், என்றார்.

ராஜாஜி பற்றி ஒரு டாக்குமெண்டரி படம் வெளிவந்தது. அது அவருக்குப் பிடிக்கவே இல்லை. கடுமையான முறையில் ஒரு விமர்சனம் எழுதினார்.

ஏ.கே.செட்டியார், புத்தகம் என்பது பயன் தரக்கூடியது என்று நம்பியவர். அது அதேமாதிரிதான் சொந்தமாகக்

கட்டுரைகள் எழுதினார். அதைப் பற்றி தான் படித்ததில் இருந்து நல்ல கருத்துக்களை திரட்டி தொகுப்பு நூல்கள் கொண்டு வந்தார். கருத்து மாதிரியே உடல் வளமும் முக்கியம் என்று கருதினார். அதன் அடிப்படையில் உணவு பற்றி ஒரு தொகுப்பு நூலையும் கொண்டு வந்தார். உணவு தொகுப்பு நூலில் நாற்பது வகையான கீரை வகைகள் இருப்பதைப் பற்றி பட்டியல் இட்டுக் காட்டி இருக்கிறார்.

ஏ.கே.செட்டியார் தனக்குப் பிடித்தமானவர்களுக்கு கைவசம் இருக்கும் தன் நூல்களை அன்பளிப்பாகக் கொடுப்பார். கொடுக்கும் போது பெயர் எழுதி குடும்பத்தினருக்கும் அன்புடன் என்று கையெழுத்திட்டுக் கொடுப்பார். புத்தகம் என்பது தனிப்பட்ட ஆள் படிப்பது இல்லை, ஒரு குடும்பமே படிப்பது என்று அவர் நினைத்துதான் செய்தார் என்று குறிப்பிட வேண்டும்.

சுபாஷ் சந்திரபோஸ் ஆஸ்திரியாவில் பட்காஸ்டீன் என்ற ஊரில் தங்கியிருந்த போது - ஜெர்மனி சென்ற ஏ.கே.செட்டியார் அங்கு சென்று சுபாஷ் சந்திரபோஸுடன் நான்கு நாட்கள் தங்கி இருந்தார். அப்போது அவர் எடுத்த புகைப்படம் ஒன்று பின்னால் அமெரிக்காவில் இருந்து வெளியாகும் புகழ்பெற்ற நேஷனல் ஜாக்ரபிக்கல் மேகஸினில் வெளிவந்தது. அவர் குமரிமலர் பத்திரிகையில் வெளிவந்த படங்களில் பல அவர் எடுத்த படங்களே. படம் எடுப்பதில் தேர்ந்த ஏ.கே.செட்டியார் பிறர் தன்னைப் படம் பிடிப்பதைத் தவிர்த்துக் கொண்டே வந்தார். உலகம் சுற்றும் தமிழன் முதல் பதிப்பில் கோட்டுப் போட்ட செட்டியார் படம் ஒன்று இடம் பெற்று இருக்கிறது. ஆனால் பின்னால் வந்த பதிப்புக்களில் அந்தப் படத்தை நீக்கிவிட்டார்.

ஏ.கே.செட்டியார் கையில் ஒரு காக்கி பையும், கருப்புக்குடையும் எப்பொழுதும் இருக்கும். அந்த இரண்டும் இல்லாமல் அவர் வெளியில் புறப்படுவதே இல்லை என்று கூடச் சொல்லிவிடலாம். பையில் சாக்லெட் வைத்துக் கொண்டு இருப்பார். குழந்தைகளிடம் அவருக்கு ஆசை அதிகம். நண்பர் வீடுகளுக்கு வந்தால் குழந்தைகளுக்கு சாக்லெட் எடுத்துக் கொடுப்பார்.

தனது எழுபத்திரண்டாவது வயதில் அதாவது 10.9.1983 ஆம் ஆண்டில் சென்னையில் காலமானார்.

ஏ.கே.செட்டியாரின் குமரிமலர் மாத இதழ் விற்பனையில் சாதனை படைத்தில்லை என்றாலும், பாதுகாக்கக் கூடிய மதிப்பு மிகுந்த பத்திரிகையாகவே இருந்து வந்தது. அதில் அவர் சமரசமே செய்து கொள்ளவில்லை. தரமானதை மட்டுமே கடைசி வரையில் வெளியிட்டு வந்தார்.

ஏ.கே.செட்டியார் புத்தகங்களைப் படிப்பது சுவாரசியமானது மட்டுமல்ல, ஒரு பயண அனுபவத்தையே தரக்கூடியது. நேராகச் சொல்லும் சொல்லுக்குச் சக்தியும் - சொல்லும் முறைக்கு ஓர் ஒழுங்கும் உண்டு என்பதை எழுத்தில் சாதித்துக் காட்டியவர் ஏ.கே.செட்டியார் என்று குறிப்பிட வேண்டும்.

# 2. பயண நூல்கள்

உலகம் சுற்றும் தமிழன் - ஏ.கே.செட்டியாரின் புகழ் பெற்ற பயணநூல். ஆனால் அதில் உலகம் சுற்றும் தமிழன் என்று ஒரு கட்டுரையும் இல்லை. 1937ஆம் ஆண்டில் இருந்து 1939 ஆம் ஆண்டு வரையில் உலகத்தின் பல நாடுகளில் குறிப்பாக இங்கிலாந்தில் லண்டன், ஹாவாய்த் தீவுகள், அமெரிக்கா, சிவப்பு இந்தியா, பாரீஸ், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் ரோமன் ரோலந்து, ஜப்பானிய கவிஞர் நோகுச்சி, ஜெர்மனி, பின்லாந்து, தென்னாப்பிரிக்கா, கப்பல் பயணம், பிரயாண நினைவுகள் என்று பல கட்டுரைகளைக் கெண்டது.

ஏ.கே.செட்டியாரின் பயணநூல்களின் முக்கியமான அம்சம் எளிமையும் தெளிவுந்தான். அவர் அனாவசியமாக ஒன்றுமே எழுதுவதில்லை. தேவைக்கு மேல் எதுவும் சொல்வதில்லை. உலகம் சுற்றும் தமிழன் கட்டுரைத் தொகுப்பில் முதல் கட்டுரை மகாத்மா காந்தியைப் பற்றியது. அதைச் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே சொல்கிறது. ஜப்பான் பயணத்தின்போது நடந்தது இது; அவரே சொல்கிறார்:-

......ஜப்பானில், ஒவ்னா என்னும் சிறிய ரயில் நிலையத்தில் ரயிலுக்காகக் காத்துக் கொண்டு நின்றேன். முன் பின் அறியாத இரு ஜப்பானிய வாலிபர்கள் வேகமாக வந்தனர்.

அவர்களில் ஒருவன் என் கையைப் பிடித்துக் குலுக்கி, “நீங்கள் காந்தியடிகளின் நாட்டிலிருந்து வந்தவர்தானே?” என்றான்.

“ஆம்” என்று தலையசைத்தேன்.

“உலகத்தில் காந்தியடிகளைப் போன்ற மனிதர் யாரும் கிடையாது. ஜப்பானில் எத்தனையோ வீரர் பிறந்திருக்

கிறார்கள். சக்கிரவர்த்திகள் பிறந்திருக்கிறார்கள். ஆனால் காந்தியடிகளைப் போன்ற சிறந்த மனிதர் பிறந்ததேயில்லை" என்றான்.

சக்கரவர்த்தியையே கண்கண்ட தெய்வமாகக் கொண்டாடும் ஜப்பானியர் காந்தியடிகளைப் பாராட்டுவதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன்" என்று குறிப்பிடும் ஏ.கே. செட்டியார், தன் பயண அனுபவம் முழுவதையும் அதே ஆச்சரியத்தோடுதான் எழுதி இருக்கிறார். குன்றா அவரின் அளப்பறிய ஆர்வமும் ஆச்சரியமும் ஒவ்வொரு சொல்லிலும் பிரதிபலிக்கிறது.

ஏ.கே.செட்டியார் அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரத்தில் போட்டோ பிடிக்கும் தொழில் கற்றுக் கொடுக்கும் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தார். நியூயார்க் நகருக்கு பிரபலமான நாட்டிய கலைஞர் உதயசங்கர் வருகை தந்தார். மாணவராக இருந்த செட்டியாருக்கு உதயசங்கரைப் படம் பிடிக்க வேண்டுமென்று ஆசை. அவருக்கு இந்திய நண்பர்கள் சங்கத்தார் இந்திய உணவுச்சாலை ஒன்றில் விருந்து கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். விவரம் தெரிந்ததும் விருந்து கொடுக்கும் இந்திய நண்பர்கள் சங்கக் காரியதரிசியிடம் ஓட்டல் விருந்துக்கு வரவும், படப்பிடிப்பிற்கும் அனுமதி பெற்றுக் கொண்டார். இரவு எட்டு மணிக்கு விருந்து. தனது பள்ளிக்கூடத்தில் இருந்து மாலை ஆறு மணிக்கெல்லாம் பெரிய காமிரா ஒன்றையும் அதைச் சேர்ந்த உபகரணங்களையும், இரவு படம் பிடிப்பதற்காக மூன்று ப்ளாஷ் பல்புகளையும் வாங்கிக் கொண்டார். விருந்து நடைபெற்ற உணவுச்சாலையோ மிகச் சிறிய இடம். ஆனால் நல்ல கூட்டம். சாப்பாடு பரிமாறுவதற்குக் கூட வழியில்லை. உதயசங்கரை கூட்டம் மொய்த்துக் கொண்டு அவரோடு பேசிக் கொண்டு இருந்தார்கள். செட்டியாரைப் போல இன்னும் ஐந்து கேமிராக்காரர்கள் அவரைப் படம் பிடிக்க வந்திருந்தார்கள். ஆனால் எப்படி இந்தக் கூட்டத்தில் படம் பிடிப்பது என்பதுதான் எல்லோருக்கும் பிரச்சினையாக இருந்தது.

அதுதான் ஏ.கே.செட்டியார் தனியாக முதன் முதலாக எடுக்கும் படம். தனியாக எப்படிப் படம் எடுப்பது என்று ஆசிரியர் சொல்லிக் கொடுத்தது எல்லாம் அப்பொழுது மறந்து

போய்விட்டது. சாப்பிடக் கூட உட்காராமல், எப்படி உதயசங்கரை நன்றாகப் படம்பிடிப்பது என்ற ஆவலோடு இப்படியும் அப்படியும் காமிராவை வைத்து - எப்படி எடுப்பது என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

ஒரு மேசையருகே உதயசங்கர் அமர்ந்திருந்தார். அவருக்குப் பின்னால் சுவர். பக்கத்தில் இறகு குல்லாய் அணிந்த இரண்டு அமெரிக்க பெண்கள். இறகு குல்லாய்களுக்கு இடையில் உதயசங்கர் முகம் தெரிந்து கொண்டிருந்தது. எப்படியாவது உதயசங்கரைப் படம் பிடித்துவிடவேண்டும் என்று முடிவு பண்ணி, காமிராவை மிகவும் தாழ்வான ஓரிடத்தில் வைத்து போக்ஸ் செய்துவிட்டு - போட்டோ பிடிப்பதற்குப் பயன்படுத்தும் பிளேட்டை எடுத்துவர பக்கத்து அறைக்குச் சென்றார்.

இன்னொரு அறையில் இருந்து விருந்து பரிமாற வந்த பெண்ணுக்கு காமிரா இருப்பது இடைஞ்சாலக இருந்தது. அதை எடுத்து வேறு இடத்தில் வைத்துவிட்டு தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்துவிட்டாள். செட்டியார் போட்டோ பிடிக்கும் பிளேட்டோடு வந்து பார்த்தார். காமிரா வைத்த இடத்தில் இல்லை. விருந்து வேறு ஆரம்பமாகிவிட்டது. படம் பிடிக்க முடியாமல் போய்விடுமோ என்ற பயம் கூட வந்து விட்டது.

காமிராவை எடுத்துக் கொண்டு முன்னே சென்றார். உதயசங்கருக்கு இவர் படுகின்ற சிரமங்களைப் பார்த்து அனுதாபத்தோடு சிரித்தார். அதுவே போதுமானது மாதிரி இருந்தது. ஒருவாறு சாமாளித்துக் கொண்டு உதயசங்கரைப் படம் பிடித்து முடித்தார். மறுநாள், கழுவிப் பார்த்த போது படம் நன்றாக வந்திருப்பது மாதிரிதான் இருந்தது. எனவே அதை பெரிதாக்கி இந்தியாவில் உள்ள பிரபலமான பத்திரிகைக்கு பிரசுரத்திற்கு அனுப்பி வைத்தார், மிகுந்த மகிழ்ச்சியோடு.

தான் அதிகமாகச் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியைக் கூட அதிகமாக சம்பந்தப்படாதவர் மாதிரி எழுதுவதில், தேர்ச்சி பெற்றவர் செட்டியார். அதனால்தான் உலக நாடுகள் பலவற்றுக்குச் சென்ற போதெல்லாம் தனக்கு நேர்ந்த சிரமங்களையும், சிறப்புக்களையும் ஒதுங்கி இருந்து -

இன்னொருவர் நிகழ்ச்சியைச் சொல்வது மாதிரி சொல்லி இருக்கிறார். அதுவே அவர் கட்டுரைகள் – பிரயாணக்கட்டுரை என்றுதான் இல்லை – அவர் எழுதிய எல்லாவற்றையும் படிக்க வைக்கிறது. லேசாகத் தன்னையே கிண்டல் பண்ணிக் கொள்ளவும் அவருக்குப் பிடித்திருந்தது. அதனை அவர் பிரயாணம் செய்து பெற்றார் என்றாலும் சரிதான் – அந்த மனநிலையை அடைந்த பின்னர்தான் பிரயாணமே செய்தார் என்று குறிப்பிட்டாலும் சரி. அவர் கட்டுரைகளின் அடிநாதமாகவும் தன்னை மூன்றாவது மனிதன் மாதிரி பார்க்கவும் – அப்படி பார்த்து சொல்லவும் முடிந்தது. அதற்கு உதயசங்கர் பற்றிய கட்டுரையையும் குறிப்பிட வேண்டும்.

உதயசங்கர் பற்றிய கட்டுரையை ஏ.கே.செட்டியார் இப்படியாக முடிக்கிறார்: "எதற்கும் ஓர் எல்லை உண்டு. இரண்டு மாதங்களுக்குப் பிறகு நான் அனுப்பிய அதே படம் ஆசிரியர் வந்தனத்தோடு என்னிடமே திரும்பி வந்து சேர்ந்தது."

ஏ.கே.செட்டியார் எழுத்துக்களில் மகாத்மா காந்தி எப்படியும் வெளிப்பட்டுவிடுவார். காந்தி இல்லாமல் அவரால் ஒன்றுமே எழுத முடியாது என்று கூடச் சொல்லிவிடலாம். குடகு பற்றி எழுதினால் காந்தி யாத்திரை மேற் கொண்டது பற்றிய ஒரு குறிப்பு வந்துவிடும். ஆனால் இந்த அம்சம் அவர் கட்டுரைகளுக்குச் சுவை சேர்த்தது என்று சொல்ல வேண்டும். காந்தியை அவர் ஒரு விசேஷமான ஆத்மாவாகக் கண்டு அந்த விதமாகவே பிறரும் புரிந்து கொண்டார்கள் என்ற தொனியோடே எழுதினார்.

உலகம் சுற்றும் தமிழன் கட்டுரைகளில் பல இடங்களில் மகாத்மா காந்தி தாராளமாக – ஒரு பெரிய தலைவராகவோ – ஞானியாகவோ போராட்ட வீரராகவோ இன்றி சாதாரண மனிதர் போலவே – அசாதாரணமான தன்மைகளோடு வந்து போகிறார்.

லண்டனில் நடைபெற்ற இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிய போது காந்திஜி பாரிஸ் நகரில் சில தினங்கள் தங்கினார். அப்பொழுது பிரஞ்சு காமிராக்காரர்கள் அவரைப் படம் பிடிக்க பெருமுயற்சி செய்தார்கள். காந்திஜியைப் படம் பிடிப்பது மிகவும் கஷ்டமான காரியம். காந்திஜி நடந்தால் மற்றவர்கள் அவரை

ஓடித்தான் பின் தொடர வேண்டும். படம் பிடித்துக் கொள்வதற்காக நின்று புன்முறுவல் பூக்கும் வழக்கம் காந்திஜிடம் கிடையாது. வேகமாக நடக்கும் போது முகம் பெரிதாகவும் நன்றாகவும் தெரியும்படி படம் பிடிப்பது இயலாத காரியம்.

எனவே பிரஞ்சுச் செய்திப் படக் கம்பெனியார், பாரிஸில் படித்துக் கொண்டிருந்த இந்திய மாணவர் ஒருவரைக் கூப்பிட்டு "காந்திஜி ஒரு குறிப்பிட்ட வீட்டில் தங்கியிருக்கிறார். அவர் நாளைக் காலையில் அவ்வீட்டிலிருந்து வெளியில் வரும் போது, நீங்கள் வழி மறித்து அவரிடம் ஏதாவது பேசுங்கள். இரண்டு நிமிஷம் அவர் நின்ற இடத்திலேயே நின்றால் போதும். நாங்கள் படம் பிடித்துக் கொள்கிறோம். உங்களுடைய சிரமத்திற்கு ஐயாயிரம் பிராங் பரிசு கொடுக்கிறோம்" என்று கூறினார்கள்.

அந்த மாணவர்க்கு பணத்தேவை இருந்தது. ஆனால் காந்திஜி எதிரே சென்று ஒரு காரியமில்லாமல் பேசத் தைரியம் வரவில்லை. அவ்வாறு செய்தால் காந்திஜியின் அதிருப்திக்கு ஆளாக வேண்டுமே என்று அவர் எண்ணிய போது அவர் உள்ளம் துடித்தது.

எனது தேசத்தலைவருக்கு அதிருப்தியை உண்டாக்கக் கூடிய எந்தக் காரியத்தையும் நான் செய்ய முடியாது என்று அந்த மாணவர் பதில் கூறிவிட்டார்.

இப்படி பல ரசமான சம்பவங்களைச் சொல்லும் ஏ.கே.செட்டியாரின் உலகம் சுற்றும் தமிழன் கட்டுரைகள் முதலில் சக்தி பத்திரிகையில் வெளிவந்தன. பின்னர் அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிட்டார். அதன் முதல் பதிப்பில் செட்டியார் கோட்டுப் போட்டுக் கொண்டு இருக்கும் படம் உண்டு.

அவர் நூல்களிலேயே அதிகமான பதிப்பு வெளி வந்தது உலகம் சுற்றும் தமிழன்தான். அதனுடைய எளிமைக்கும், விசேஷத் தன்மை காரணமாகவும் மாணவர்களுக்கு பாட நூலாகக் கூட வைக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டிற்குள் உலகம் சுற்றும் தமிழன் பத்து பதிப்புக்களைக் கண்டுவிட்டது. பதிப்புத்துறையில் ஒரு சாதனை புரிந்தது உலகம் சுற்றும் தமிழன் என்று குறிப்பிடவேண்டும்.

## ஐரோப்பா வழியாக

ஏ.கே.செட்டியாரின் முக்கியமான பயண நூல்களில் ஒன்று ஐரோப்பா வழியாக. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த பின்னர் அவர் ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து, ஸ்காண்டிநேவியா, ஹாலந்து, ஜெர்மனி வழியாகக் கப்பலில் ஏறி பம்பாய், கொச்சி, இலங்கை வழியாக தாய்லாந்து, மலேசியா, பர்மா சென்று இரங்கூனிலிருந்து விமானம் ஏறி கல்கத்தா வரும் வரையில் தனக்கு நேர்ந்த பலவிதமான அனுபவங்களை ஒரு விதமான சுவாரசியத்தோடு சொல்லும், கட்டுரைகளின் தொகுப்பு.

ஐரோப்பா வழியாக என்பது 1961ஆம் ஆண்டில் வெளிவந்தது. அதில் முதல் கட்டுரை இங்கிலாந்து. இங்கிலாந்தின் தலைநகரான லண்டனைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஏ.கே.செட்டியார், "சென்ற முறை சென்ற போது லண்டன் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் தலைநகராக இருந்தது. ஆங்கிலேயர்கள் நம்மை ஆளுவோராக இருந்தனர்" என்று சொல்லி, "பிரிட்டிஷார் தங்கள் ஏகாதிபத்தியத்தை இழந்தாலும் தங்கள் மன உறுதியையும் ஒழுங்கு முறையையும் இழக்கவில்லை" என்று சொல்லும் அவர் மேலும் இன்னொரு காட்சியையும் பற்றியும் குறிப்பிடுகிறார்.

"பிரிட்டனிலுள்ள மக்களின் பொருளாதார நெருக்கடி லண்டனில் நன்றாகத் தெரிந்தது. பரிமாறி வைத்தவர்களுக்கு இனாம் கொடுக்கும் வழக்கம், பிரிட்டிஷாருக்கு உடன் பிறந்தது. ஆனால் பொருளாதார நிலையின் காரணமாக அதை எல்லோரும் செய்ய முடியவில்லை. லண்டனில் மூலைக்கு மூலை காணப்பெற்ற எண்ணற்ற சிற்றுண்டிச் சாலைகளில் மக்கள் நின்று கொண்டே உணவு முழுதும் வாங்கிச் சாப்பிட்டனர். அங்கு உணவு பரிமாறுவதில்லை; உணவு விற்கும் இடத்திற்குச் சென்று கையில் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டார்கள்.

"நடுத்தரமான உணவுச்சாலைகளில், நாற்காலியில் உட்கார்ந்து சாப்பிட்டனர். அம்மாதிரியான உணவுச்

சாலையொன்றில் சாப்பிட்டேன். உணவின் விலை சுமார் ஒன்னரை ரூபாய். பரிமாறிய பெண்ணுக்கு மூன்று பென்ஸ் - மூன்றரை அணாவுக்கு குறைவான தொகையை இனமாக மேஜை மீது வைத்துவிட்டு எழுந்தேன். அந்தப் பெண் என்னிடம் வந்து, 'நான் உங்களுக்கு வந்தனம் செலுத்துகிறேன்' என்றாள். அங்கே சாப்பிட்டவர்களில் பலர் இனாம் கொடுக்காமல் சென்றதையும் கவனித்தேன்."

இப்படிப்பட்ட சாதாரண சம்பவம் மாதிரியான சுவாரசியமன காட்சிகள் - எளிய மக்களின் பண்புகள் - மரபு ரீதியாக தேசத்தின் பண்பாக மிளர்வதை லேசான ஒரு தொனியில் செட்டியார் சொல்லிக் கொண்டே போகிறார். இந்தப் பண்பை அவரது வெளிநாட்டுப் பயணக் கட்டுரைகளில் என்றுதான் இல்லை, உள்நாட்டுப் பயணக் கட்டுரைகளிலும் காணமுடிகிறது. கதை எழுதுகின்ற ஒரு பாணியிலேயே - சுருக்கமாகவும் - சொல்லியும் சொல்லாமலும் விட்டுவிட்டுப் போகிறார். சில வரிகளில் சொன்னாலும் முழு சித்திரமும் - சம்பவத்தின் அடிப்படையான அம்சம் படிக்கின்றவர் மனத்தில் முழுமையாக இடம் பெற்று விடுகிறது. அவரின் கவனிப்பும் காணுகிற தோரணையும் - கண்டதை மறுபடியும் சொல்லும் தொனியும் பொதுத்தன்மையோடு தனித்தன்மையும் பெற்று இருக்கிறது. ஒரு காட்சியில் எது முக்கியமோ அதை - அதன் அடிப்படையான அம்சத்தை - எளிய ஒரு ரூபத்தில் கொண்டு வந்துவிடுகிறார். அதனை பிரயாணம் என்பதோடு சேர்த்து - பயணமே மேற்கொள்ளாதவர்கள் ரசிக்கும் படியாகவும் - அனுபவிக்கும்படியாகவும் செய்துவிடுகிறார்.

நாட்டுக்கு நாடு; இடத்திற்கு இடம் சில வியாபார அம்சங்கள் வித்தியாசப்படுகின்றன. அதனை சட்டென்று புரிந்து கொண்டு, செயல்பட்டால் விலை மதிப்புள்ள நேரம் மிச்சமாகிறது. பணம் செலவானால் கூட. அதில் எதைத் தேர்ந்தெடுப்பது. அதையும் அனுபவமே கற்றுக் கொடுக்கிறது. அதனால் தான் அனுபவத்திற்கு மிஞ்சிய ஆசான் இல்லையென்று காலம் காலமாகச் சொல்லி வருகிறார்கள். ஆனால் பட்டால்தால் அனுபவம் வருகிறது. அது எப்போதும் மறந்து போவதில்லை. தடுமாறும் போது சட்டென்று நினைவுக்கு வந்து சரியான வழியைக் காட்டுகிறது.

புத்தகப் பிரியரான செட்டியார், லண்டன் புத்தகக் கடையொன்றில் புத்தகம் வாங்கச் சென்றதை - முந்திய அனுபவத்தோடு சேர்த்து பார்த்து சொல்கிறார்:

"சில புத்தங்கள் விலைக்கு வாங்க எண்ணினார். சென்ற முறை லண்டனில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் நினைவுக்கு வந்தது.

"குறிப்பிட்ட புத்தகமொன்றை - அதன் விலை இருபத்தைந்து ரூபாய் - வாங்குவதற்காகச் சென்றேன். நமது நாட்டில் புத்தக வியபாரிகள் கழிவு கொடுப்பது வழக்கம். எனவே லண்டனிலும் இந்த வழக்கத்தை ஆரம்பித்தேன். பல கடைகளுக்குச் சென்றேன். எல்லா கடைகளிலும் அந்தப் புத்தகம் இருந்தது. ஆனால் கழிவு தர எவரும் முன்வரவில்லை. முழு விலை கொடுத்துத்தான் புத்தகம் வாங்கினேன். இந்த முறை பழைய அனுபவத்தின் காரணமாக அரை நாள் அலைச்சல் மீதமாயிற்று.

"லண்டனிலுள்ள பெரிய புத்தகக்கடையின் பெயர் பாயில்ஸ் (Foyles) இது பெரிய புத்தகக்கடை மட்டுமன்று. புத்தகசாலை என்றுகூடச் சொல்லலாம். நீங்கள் எந்தப் புத்தகத்தை வேண்டுமானாலும் எடுத்துப் படிக்கலாம். யாருமே, 'ஏன் படிக்கிறாய்?' என்று கேட்க மாட்டார்கள். அந்தப் புத்தகக்கடை ஒரே கட்டிடமன்று. பல கட்டிடங்கள் கொண்டது. லட்சக்கணக்கான புத்தகங்கள் அங்கே இருந்தன. அபூர்வமான கிடைத்தற்கரிய புத்தகங்களைத் தனிப்பகுதியில் வைத்திருந்தார்கள். உலகத்திலேயே அதுதான் சிறந்த பெரிய புத்தகக்கடை என்று சொல்கிறார்கள்."

பயண நூல்கள் தனிப்பட்ட ஒரு மனிதரின் அனுபவமாக மட்டும் இருப்பதில்லை. அது அவரின் தனித்தன்மைகளையும் - பயணம் செய்யும் நாடுகளின் அரசியல் பொருளாதார - கலை இலக்கிய வாழ்க்கையை - அதன் அடிநாதமாக ஒலிக்கும் பண்புகளையும் - எது அவர்களின் தேசிய குணமாக பல ஆண்டுகளாக தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை அறிந்து சொல்லும் பாங்கிலும் இருக்கிறது. அப்படிப்பட்ட பயண எழுத்தாளர்களின் நூல்கள் சரித்திர சமூக முக்கியத்துவம் பெற்றுவிடுகின்றன. இவ்வகையைச் சேர்ந்த எழுத்தாளர்களை - முதல் தரமான பயண எழுத்தாளர்கள் என்று குறிப்பிட

வேண்டும். இவர்கள் ஒரு நாட்டின் அடிப்படைத் தன்மைகளை தங்களின் சூட்சமமான அறிவால் அறிந்து - அதனை சில மனிதர்களின் வெளிப்பாட்டின் வாயிலாகச் சொல்லி விடுகிறார்கள்.

இங்கிலாந்து நாட்டின் தேசிய குணம் என்பது என்ன? அதனை சரித்திர, பொருளாதார, சமூகவியல் ஆசிரியர்கள் நிறைய ஆராய்ந்து சொல்லலாம். பதினாறாவது நூற்றாண்டில், வியாபாரம் செய்ய சிறிய கப்பல்களில் இந்தியா போன்ற நாடுகளுக்கு வந்து, பின்னர் வியாபாரத்தை விட்டுவிட்டு ஆட்சியாளராகி ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்ததை தேசிய குணம் என்பதா? இல்லை? எதற்கும் நீதியும் சட்டமும் உண்டு என்பதைச் சொல்வதா? இப்படிப்பட்ட கேள்விளைக் கேட்கத் தூண்டும் விதமாகப் பயண நூல்கள் அமைவது உண்டு என்பது ஏ.கே.செட்டியார் கட்டுரைகளைப் படிக்கையில் தெரிகிறது. அவர் எதையும் சமூக விஞ்ஞானி மாதிரி காரண காரியங்களை ஆராய்ந்து புள்ளி விவரங்களைச் சொல்லி தனது கண்டு பிடிப்புகளை நிலை நிறுத்துவது இல்லை. ஆனால் தன்னுடைய முடிவுகளை மிகவும் எளிய - தர்க்க ரீதிக்கு முரண்படாத அம்சங்களைக் கொண்டு வந்து - சொல்ல வேண்டியதைத் தவிர்க்கவே முடியாத விதத்தில் சொல்லிவிடுகிறார். அதற்கு அவரின் பரந்த அனுபவம், படிப்பு, தீர்மானமான எண்ணங்கள், நாடுகளைப் பற்றியும், மக்களைப் பற்றி அறிந்து இருப்பதும் காரணமாகிறது. சொல்வதற்கு மேலாக, அவரிடம் ஏராளமான கருத்துக்களும், விஷயங்களும் இருக்கிறது என்பது கட்டுரைகளைப் படிக்கையில் சட்டென்று புலனாகிறது. இதனை ஏ.கே.செட்டியாரின் தனித்தன்மை என்று குறிப்பிட வேண்டும். இந்தத் தனித்தன்மையை அவர் தன் எழுத்து முழுவதற்கும் ஒரு பொதுத்தன்மையாகவே பாவிக்கும் விதமாக எழுதி இருக்கிறார்.

'ஐரோப்பா வழியாக' கட்டுரைத் தொகுப்பில் முதல் கட்டுரையாக இங்கிலாந்து இருந்தாலும் - அது மிகச்சிறிய ஒரு கட்டுரைதான். ஆனால் இங்கிலாந்து என்பதின் பல அம்சங்களை அவர்களின் ஆசை அபிலாஷைகள் - ஈடுபாடு இங்கிலாந்தில் குடியேறி உள்ள இந்தியர்கள், மற்றும் ஆசிய மக்கள், இந்திய ஹைகமிஷனர் அலுவலக ஊழியர்களின் செயல்பாடுகள் - எனப் பலவித அம்சங்களைப் பற்றியும்

சுருக்கமாகச் சொல்லும் - அதிகமாக எதும் மாறிவிடாது என்று தீர்மானிக்கக் கூடிய விதத்திலும் எழுதி இருக்கிறார். இந்த அம்சமே முப்பதாண்டுகள், நாற்பதாண்டுகள் சென்ற பின்னால் கூட அவர் கட்டுரைகளைப் படிக்கத் தக்கக் கூடியதாக்கி இருக்கிறது.

'பிரிட்டிஷார்' காலத்துக்கேற்ப நடந்து கொள்வதில் நிபுணர்கள். உலகத்திலுள்ள எல்லா முக்கிய நாடுகளுக்கும் அவை கம்யூனிஸ்டு நாடாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பிரிட்டிஷ் நல்லெண்ணத் தூது கோஷ்டிகள் சென்று வருவதை நாம் பார்க்கிறோம். சமீபத்தில், முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் அட்லியின் தலைமையில் ஒரு நல்லெண்ணத் தூது கோஷ்டி கம்யூனிஸ்டு சீனாவுக்குச் சென்று திரும்பிற்று.'

''சீனாவைப் பற்றிய தங்கள் அபிப்பிராயங்களை அட்லியும் மற்றவர்களும் பத்திரிகைகளில் எழுதினார்கள்.

"ஆனால் பிரிட்டிஷ் நல்லெண்ணத் தூது கோஷ்டியைப் பற்றிச் சீனர்களின் அபிப்பிராயம் என்ன என்பதைப் பற்றி, அந்தச் சமயத்தில் சீனாவிலிருந்த இந்திய பத்திரிகை நிருபர் ஒருவர் பின் வருமாறு எழுதியிருந்தார்.

"சீனர்கள் தங்களுக்குள்ளாகப் பேசிக் கொள்ளும் போது, பிரிட்டிஷ் நல்லெண்ண தூது கோஷ்டியைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் தெரியுமா? பிரிட்டிஷாருக்கு நிரந்தரமான சிநேகிதர்களும் கிடையாது; நிரந்தரமான விரோதிகளும் கிடையாது; நிரந்தரமான வியாபாரம் ஒன்றுதான் அவர்களின் நோக்கம்"

விமர்சனம் மாதிரி இல்லாத ஒரு விமர்சனத்தோடு இங்கிலாந்து பற்றிய கட்டுரையை முடித்துக் கொண்டு ஏ.கே. செட்டியார் அடுத்த பயணமான ஸ்காண்டிநேவியாவிற்குச் செல்கிறார். ஸ்காண்டிநேவியா தனிநாடா? அதற்கு பூகோள ரீதியில் சிறிய விளக்கமும் கொடுக்கிறார். நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் கொண்டது ஸ்காண்டிநேவியா - என்று சொல்லிவிட்டு, கப்பலில் இங்கிலாந்தில் இருந்து நார்வேயின் இரண்டாவது பெரிய நகரமான பெர்கன் செல்லுகிறார்.

பெர்கனில் இருந்து பத்து மைல் தொலைவில் வசிக்கும் ஜான் ஹோரயம் என்பவரைச் சந்திக்கிறார். 1937ஆம் ஆண்டில் அமெரிக்காவில் மோட்டாரில் பதினைந்தாயிரம் மைல், சுற்றுப்பயணம். ஜான் ஹோரயமும், செட்டியாரும் சென்றனர். அவர் கூட இன்னும் இரண்டு மாணவர்கள். பழைய நண்பர் ஜான் அவர் மனைவி, குழந்தைகளை 1939ஆம் ஆண்டிற்குப் பிறகு மறுபடியும் சந்திக்கிறார். ஒரு வயது பையனாக இருந்த ஜான் மகன் பதினைந்து வயதுப் உடைய மாணவனாக இருக்கிறான். பேச்சுக்கு இடையில் அவன் ஏ.கே. செட்டியாரிடம், " உங்கள் ஊரில் எந்தவிதமான சாப்பாடு? எத்தனை கோர்ஸ்?" என்று கேட்கிறான்,

"எங்கள் ஊரில் மூன்று 'கோர்ஸ்' கள்.

முதலாவது கோர்ஸ் சோறு

இரண்டாவது கோர்ஸ் சோறு

மூன்றாவது கோர்ஸ் சோறு" என்றேன்.

அவன் வயிறு குலுங்கச் சிரித்தான். நெய், சாம்பார், மோர், காய்கறி முதலியன பற்றி அவனுக்கு விவரித்துக் கூறினேன் என்று குறிப்புத் தருகிறார்.

மகாத்மா காந்தியின் பக்தரான ஏ.கே.செட்டியார் உலகத்தின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், காந்தியோடு சம்பந்தப் பட்டவர்களை எளிதாகவே சந்தித்துவிடுகிறார். நார்வேயில் தான் சந்தித்த பழைய நண்பர் திருமதி.பொக்கன் லாஸன் அவர்களைப் பற்றி நினைவு கூர்ந்து இப்படி எழுதி இருக்கிறார்:

"என் பழைய நண்பர் ஸ்ரீமதி. பொக்கன் லாஸன். அவருக்கு வயது எண்பது இருக்கும். நார்வேயில் மிகப் பிரசித்திபெற்ற சங்கீத வித்வான். அந்த வயதிலும் அவர் வானொலியில் பாடினார். அம்மையார் புத்தக ஆசிரியையும் கூட. இந்தியாவினிடத்தும் காந்தியடிகளிடத்தும் மாறாத அன்பு கொண்டவர். 1930 ஆம் ஆண்டில் சத்தியாக்கிரகப் போர் நடந்த சமயத்தில் இந்தியாவுக்கு வந்து சில மாதங்கள் தங்கினார். காந்தியடிகளைப் பலமுறை சந்தித்துப் பேசினார். தமது இந்திய யாத்திரை பற்றி நார்வீஜிய மொழியில் சிறந்த நூலொன்று வெளியிட்டார். கடந்த முறை ஒஸ்லோ சென்ற போது

அம்மையாரின் விருந்தினனாகத் தங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது."

பழைய நண்பரைச் சந்தித்தது பற்றி எழுதிய செட்டியார் நார்வேயில் புதிய நண்பர் ஒருவரைப் பற்றி சந்தித்தது பற்றி விவரிக்கிறார்.

"ஒரு நாள் இரவு சாப்பாட்டிற்குப் பின்னர் நகரின் மத்தியில் உலாவிக் கொண்டிருந்தேன். இளைஞர் ஒருவர் என்னிடம் வந்து ஆங்கிலத்தில் பேசினார். சிறிது நேரம் இருவரும் உரையாடினோம். பின்னர் அவரைப் பார்த்து, "நல்ல காப்பி எங்கு கிடைக்கும்?" என்றேன்.

"நல்ல காப்பி மட்டும் வேண்டுமா? அல்லது நல்ல இடமும் வேண்டுமா?" என்றார்.

"இரண்டும் இருந்தால் நலம்" என்றேன்.

"சிறிது தூரம் நடந்து சென்றதும், ஒரு பழைய கட்டிடத்துள் நுழைந்தோம். சில இடங்களில் தலை குனிந்துதான் செல்ல வேண்டும். ஆனால் கட்டிடம் பெரியது. அந்த நேரத்தில் உட்காருவதற்குக் கூட இடமில்லாமல் ஒரே கூட்டம். ஒரு மூலையில் இடம் கிடைத்தது.

"இந்த கட்டிடம் பழமையானது. ஆனால் சரித்திரப் பிரசித்தி பெற்றது. அதோ சுவர்களில் மீது தீட்டியுள்ள உருவங்களையும், பெயர்களையும் பாருங்கள். அவர்கள் எல்லோரும் இந்த நாட்டில் பிறந்த சிறந்த கவிகளும், ஓவியர்களும், பாடகர்களும், நடிகர்களும் ஆவார்கள். அவர்கள் அனைவரும் இந்த இடத்தில் வருஷக்கணக்காக வந்து சாப்பிட்டிருக்கிறார்கள். வெளியூரிலிருந்து வரும் நார்விஜியர் அனைவரும் இங்கு வருவது வழக்கம். இது கலைமணம் கமழ்ந்த இடம்; கமழும் இடம்" என்றார்.

"பணிவுடன் வந்த வேலைக்காரப் பெண்ணிடம் இரண்டு கோப்பை காப்பி கொண்டு வரும்படிக் கூறினோம்.

"நார்வீஜியர்கள் பொதுவாகக் காப்பியில் சர்க்கரை போடுவதில்லை. காபியைச் சிறிது வாயில் ஊற்றிக் கொண்டதும் அதைக் குடிப்பதற்கு முன் சர்க்கரையையோ அல்லது சர்க்கரைக் கட்டியையோ எடுத்து வாயில் போட்டுக்

கொள்வார்கள். அம்மாதிரி அடிக்கடி செய்வார்கள். ஒவ்வொரு முறையும் நம்மைப் பார்த்து, “இந்த நார்வீஜியப் பழக்கத்தை மன்னித்துவிடுங்கள்” என்று சொல்வார்கள்.”

ஐரோப்பா வழியாக பயணக்கட்டுரைத் தொகுதியில் நீளமான கட்டுரை ஜெர்மனி. இரண்டாகப் பிரிந்து இருந்த ஜெர்மனியைப் பற்றி - இரண்டிலும் மேற்கொண்ட பயணம், பார்த்தது, கேட்டு அனுபவித்த சங்கீதம், என்று பல்வேறு அம்சங்களைப் பற்றி - ஒருவிதமாகவும் சார்பு நிலை கொள்ளாமல் - பொதுமக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை முன்நிறுத்தி எழுதி இருக்கிறார். அந்த சார்பு நிலையே இல்லாது போய்விட்ட பிரிவு பட்ட ஜெர்மனியைப் பற்றி படிக்கக் கூடியதாக இருக்கிறது. பிரிந்து இருந்த நாடுகளைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் போய்விட்ட பின்னர் - அதன் இணைப்பு சங்கிலியின் ஆதாரம் என்ன என்பதையும் தனது பயணத்தின் வாயிலாகவே விவரிக்கிறார். பல நாட்களின் ஜெர்மனி பயணம் முடிந்து செட்டியார் இங்கிலாந்துக்குக் கப்பலில் புறப்படுகிறார். கப்பலில் ஏகக் கூட்டம். படுக்கைக்குப் பணம் கொடுக்க முடியாமல் ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டு பயணம் செய்ய வேண்டிய நிலை. சோபாவிற்குப் பணம் கொடுத்தும் - அதில் படுத்துத் தூங்க முடியாமல் வரும் சக பயணி ஆங்கிலேயர். இப்படியே தொடரும் பயணத்தில் இருவரும் உரையாடல் தொடங்குகிறது.

ஏ.கே.செட்டியார் பயணக்கட்டுரைகளில் பேச்சு என்பது ஒரு தனிப்பட்ட மனிதனின் பேச்சு மாதிரி அமைவதில்லை. அம்மாதிரி தோன்றும் பேச்சுக்களுக்குப் பின்னால் அடிப்படையில் பலம் இருக்கிறது என்பது மாதிரியே பதிவு செய்து கொண்டு வந்து இருக்கிறார். அவர் கட்டுரைகளில் அடிநாதமான தொனி என்றே இதனை குறிப்பிடவேண்டும். இதற்கு ஒரு எடுத்துக்காட்டு ஐரோப்பா வழியாக என்ற கட்டுரைத் தொகுப்பில் காணப்படும் ஜெர்மனி பற்றிய கட்டுரை. ஒரு கப்பல் பயணத்தில் ஆங்கிலேயருக்கும் தனக்கும் இடையே நடைபெறும் உரையாடலை மிகவும் சுருக்கமாக - விவரிப்பு ஏதும் இல்லாமலே நமது சிந்தனைகளுக்கு விட்டுவிட்டார். அது பல ஆண்டுகளுக்கு கவனிப்பு பெறவே இல்லை. இப்படி நிகழும் என்று கூட பெரும்பாலானவர்கள் நினைக்கவே இல்லை. ஆனால் சரித்திரம் என்பது கற்பனைக்குக் கூட எட்டாத விதத்தில் நடைபெறுவது. அது நடைபெற்று முடிந்த பின்னரே

காரண காரியங்கள் ஆராயப்படுகின்றன. அதுவே சரித்திரம் என்பதில் இருந்து, மனிதர்கள் அதிகமாக ஒன்றும் அறிந்து கொள்ளவில்லை. அதுவும் ஒரு சரித்திரமாக இருந்து வருகிறது என்று சொல்ல வைக்கிறது. ஆனால் ஏ.கே.செட்டியார் போன்று உள்ள பயண எழுத்தாளர் எளிய மனிதர்களின் மனதில் இருந்து வரும் சொற்களை - மகத்துவம் பெற்றது என்று தீர்மானிக்க முடியாத ஒரு தொனியில் பதிவு செய்து வைக்கிறார்கள். எளிமையும் - தீர்மானம் இல்லாதது மாதிரியான தீர்மானமான கருத்துக்களும் சமூகம் என்பதில் ஜீவித்துக் கொண்டே இருக்கின்றன. இவர்கள் உணரக் கூடியவர்கள். சாதனையாளர்கள் என்று அறியப்படாத சாதனையாளர்கள். எளிய மனிதர்களாக இருப்பதே இவர்களின் மகத்தான சாதனை. அதன் வழியாகவே சமூதாயத்தின் கண்களாகவும், செவிகளாகவும், மனசாட்சியுமாகக் காலம் காலமாக ஜீவித்துக் கொண்டு வருகிறார்கள். இதனை ஏ.கே.செட்டியார் மிகவும் எளிதாக விளக்குகிறார்.....

“காலை மூன்று மணிக்கு மேல் இருவருக்குமே தூக்கம் வரவில்லை. சிறிது பேச ஆரம்பித்தோம். அவர் வியாபார விஷயமாக அடிக்கடி ஜெர்மனி சென்று வருவதாகவும் - அந்த முறை விமானத்தில் இடம் கிடைக்காததால் கப்பலில் செல்வதாகவும் கூறினார். ஐரோப்பியச் சேனையை சீக்கிரம் அமைக்க வேண்டும் என்றார். ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கொள்கையை வன்மையாகக் கண்டித்தார்.

“ஹிட்லரைத் தோற்கடித்தால் உலகில் அமைதி உண்டாகும் என்று கருதினீர்கள். அவ்வாறு உண்டாகியிருக்கிறதா?” என்றேன்.

“இல்லை” என்றார்.

“ருஷ்யர்கள் கெட்டவர்கள் என்றே வைத்துக் கொள்வோம். அவர்களை எல்லாம் ஒழித்துவிட்டால் உலகில் அமைதி ஏற்பட்டுவிடும் என்று நம்புகிறீர்களா?” என்றேன்.

“இல்லை” என்றார்.

“அப்படியானால் உலகில் அமைதி உண்டாவதற்கு நீங்கள் கூறும் வழிதான் என்ன?” என்று கேட்டேன்.

“ருஷ்யா ஒரே நாடு அன்று; பல நாடுகள் கொண்டது. அவற்றைத் தனித்தனியாகப் பிரித்துவிட்டால் ருஷ்யா

பலமற்றுப் போய்விடும். அதுதான் வழி'' என்ற தமது பிரித்தாளும் திட்டத்தை வெளியிட்டார்."

ஐரோப்பா வழியாக என்ற தொகுப்பில் இடம்பெற்று உள்ள நீண்ட கட்டுரையான ஜெர்மனி பற்றிய கட்டுரை. மேற்கொண்டு ஒரு விளக்கமோ - குறிப்போ இல்லாமல் முடிவடைகிறது. சிறந்த பயணக்கட்டுரைகளுக்கு காலம் என்பது இல்லை என்பது சரியான மதிப்பீடு என்றுதான் குறிப்பிட வேண்டும். அந்த மதிப்பீடுகளை அறிந்து கொள்ளவும். அதனை தன்னுடைய சொந்த மதிப்பீட்டோடு இணைத்துக் கொண்டு மேலும் மேலும் விளக்கம் அளிக்காமல் - சாதுரியமான ஒரு தொனியில் சொல்லவும் - சொல்லமுடியும் என்பதும், ஏ.கே.செட்டியார் கட்டுரையைப் படிக்கிற போது தீர்மானமாகச் சொல்ல முடிகிறது.

ஜெர்மனியில் இருந்து, இங்கிலாந்துக்குக் கப்பலில் சென்று மலேயாவுக்கு கப்பல் ஏறிய ஏ.கே.செட்டியார், எகிப்தில் உள்ள சூயஸ் கால்வாய் வழியாக ஏடன் வந்து, பம்பாய் வழியாக மலேயாவிற்கு செல்கிறார். பெரும்பாலும் அவர் பூகோள, சரித்திர தகவல்களை தன் பயணக்கட்டுரைகளில் கொடுப்பதில்லை. தேவையென்றால் மிகவும் சுருக்கமாகவே விவரங்கள் கொடுக்கிறார். சூயஸ் கால்வாயை கப்பல் கடக்கும் போது, சூயஸ் கால்வாய் பற்றிய தகவல், சூயஸ் கால்வாய் வெட்டி சுமார் நூறு ஆண்டுகள் ஆகின்றன. கால்வாயின் நீளம் 100மைல். அகலம் 200 அடி. ஆழம் 33 அடி. செங்கடலையும், மத்தியத் தரைக் கடலையும் அது இணைக்கிறது. அதனைக் கட்டியவர் பெர்னாண்ட் என்ற பிரஞ்சுக்காரர்.

மலேயா, சிங்கப்பூர், சுற்றிவிட்டு தாய்லாந்து சென்றவர், தப்பும் தவறும் இல்லாமல் தாய்லாந்து பற்றி எழுத வேண்டுமென்பதற்காக, தாய்லாந்து தலைநகரான பாங்காக்கில் சில ஆண்டுகளாக வசித்து வரும் அன்பர் ஒருவர் உதவியை நாடுகிறார். அவர் தாய்லாந்து மக்கள் பற்றிய ஒரு சிறிய குறிப்பைத் தருகிறார். அந்தக் குறிப்பு தாய்லாந்து மக்களின் மனோபாவனையை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது என்று அதனை பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்.

ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியோடு இருந்தால் அதைப் போல ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வருஷமும் மகிழ்ச்சியாக

இருக்கும். பொதுவாக இவர்கள் சுலபமான கவலையற்ற வாழ்க்கை நடத்துகிறார்கள். இதற்கு இந்த நாட்டில் விளையும் அபரிமிதமான உணவுப் பொருட்களே காரணம். 'நீருள்ள இடத்தில் மீன் இருக்கும், நிலமுள்ள இடத்தில் நெல் இருக்கும்' என்பது பழமொழி.

இவர்கள் வரவுக்கு மீறிச் செலவு செய்கிறார்கள். சம்பாதிப்பதற்கு முன்னமேயே செலவு செய்கிறார்கள் என்று கூறலாம். இவர்கள் கையில் சம்பளம் வாங்கிய இரண்டாவது நாள் பணமிராது.

பர்மாவோடு, ஏ.கே.செட்டியார், மூன்றாண்டுகள் ஐரோப்பா வழியாக மேற்கொண்ட பயணம் முடிவடைகிறது.

ஏ.கே.செட்டியார் ஐரோப்பா வழியாக, பர்மா வரையில் மேற்கொண்ட பயணம் முடிந்து நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. பல தேசங்களில் ஆட்சி முறை மாறிவிட்டது. பெரும் வளர்ச்சி, அரசியல், பொருளாதார, சமூக, கல்வி, கலைத்துறையிலும், தகவல் துறையிலும் ஏற்பட்டுவிட்டது. அவர் மேற்கொண்டது மாதிரியான ஒரு பயணத்தை எவ்வளவுதான் விரும்பினாலும் சாத்தியம் இல்லை. சென்ற காலம் என்பதே அவர் பயணத்தின் ஓர் அம்சமாக இருக்கிறது. ஆனாலும் மனித பண்பு, மனித நேயம் என்பது மாறக் கூடியது இல்லை என்பதால் அதை முன்நிறுத்தி சுவாரசியமான தொனியில் எழுதப் பட்டு இருக்கும் அவர் கட்டுரைகள், படிக்கவும், அனுபவிக்கும் கூடிய சம்பத்தாக இருக்கிறது.

## மலேயா முதல் கனடா வரை

ஏ.கே.செட்டியார் நீண்ட ஒரு முன்னுரை, அதுவும் வெகு சுவாரசியமாக எழுதியிருக்கும் நூல் மலேயா முதல் கானடா வரை. அவர் பிரயாண நூல்களில் காணப்படும் பொதுத் தன்மையான எல்லோருக்கும் ஏற்ற மாதிரி சொல்வதை இதிலும் காணலாம். சுவாரசியம் என்பதற்கு மேலான மனித்தன்மை என்பதையும் - அதை அடைவதே ஒரு இலட்சியம் என்பது மாதிரியும் எழுதி இருக்கிறார். அதனை அவர் தனது பயணநூல்களின் சாரம் மாதிரியே கொண்டு

இருந்தார். அவர் பல நாடுகளுக்குப் பயணம் செய்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. அரசியல், பொருளாதார, விஞ்ஞான துறைகளில் எத்தனையோ முன்னேற்றம் ஏற்பட்டு பலநாடுகளில் அபிவிருத்தி ஏற்பட்டு இருக்கின்றன. சில நாடுகள் சுதந்திரம் அடைந்து தன்னை வேறு மாதிரியாக வெளிப்படுத்திக் கொண்டு இருக்கின்றன. தற்போது அவர் பயண குறிப்புகள் ஆவணம் மாதிரி இருக்கிறது. ஆனால் பயணம் என்பது வெறும் புள்ளி விவரம், சொந்த அனுபவம், பார்த்து ரசித்த காட்சிகள் என்பதைத் தாண்டி இருப்பதால் செட்டியார் புத்தகங்கள் ஜீவித்துக் கொண்டு இருக்கின்றன. உதாரணமாக:

"முதல்முதலாக உலகச் சுற்றும் பிரயாணத்திலிருந்து திரும்பும்பொழுது கொழும்புத்துறைமுகம் வந்து சேர்ந்தேன். அதற்கு முந்திய நாள் இரவு, கப்பலின் மேல் தளத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். பிரயாணத்தில் கண்ட அற்புதக் காட்சிகள் மனக்கண் முன் தோன்றி மறைந்தன. அவற்றை எல்லாம் நினைத்த பொழுது பெரு மகிழ்ச்சி உண்டாயிற்று. அதோடு உலகப்பிரயாணம் செய்தோம் என்ற கர்வமும் உண்டாயிற்று.

சகோதரப் பிரயாணிகளில் ஒருவரான ஐரோப்பியர் என்னிடம் விடைபெறுவதற்காக வந்தார். அடக்கமும் அமைதியும் நிறைந்த அவர் அன்புடன் விடைபெற்றார். பிரயாணத்தினால் ஏற்படும் அனுகூலங்களையும், தொடர்ந்து பிரயாணம் செய்ய வேண்டிய அவசியத்தையும் குறித்துக் கூறினார். அவர் மூன்று முறை உலகப் பிரயாணம் செய்திருக்கிறார். ஆப்பிரிக்காவில் மட்டும் எல்லா துறைமுகங்களுக்கும் பல முறை சென்றிருக்கிறார். அவர் இவ்வாறு கூறியதும் என் கர்வம் அடங்கியது.

"இரண்டாவது முறை காந்தியடிகள் சம்பந்தமான பிலிம்களைச் சேகரிப்பதற்காகப் பிரயாணம் செய்தேன். தென்னாப்பிரிக்கா சேர்ந்ததும் இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. உயிருக்குப் பயந்து விழுந்தடித்துக் கொண்டு தாய்நாடு வந்து சேர்ந்தேன். எனவே இம்முறை எத்தகைய கர்வமும் உண்டாக இடமில்லாமல் போய்விட்டது.

"மூன்றாவது பிரயாணத்தில் லண்டனிலிருந்து சூசான் என்னும் கப்பலில் திரும்பி வந்தேன். கப்பல் பம்பாய் வந்து சேர்ந்ததும் எல்லா இந்தியர்களும் இறங்கிவிட்டார்கள். ஆனால்

நான் மட்டும் அதே கப்பலில் கொழும்பு வழியாக மலேயா சென்றேன்.

"கொழும்புத் துறைமுகத்தை அடைவதற்கு முந்திய நாள் இரவு, பதினாறு ஆண்டுகளுக்கு முன் கொழும்புக்கு வந்த போது தோன்றிய எண்ணங்கள் மீண்டும் நினைவுக்கு வந்தன.

"மூன்று முறை உலகப் பிரயாணம் செய்துவிட்டோம். வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்களே நமது பிரயாணத்தைப் பாராட்டுகின்றனர். மூன்று முறை பிரயாணம் செய்வது சுலபமாக யாரும் சாதிக்க முடியாத காரியங்களில் ஒன்று. எனவே இது குறித்து ஓரளவு கர்வம் கொள்வது நியாயந்தானே? இதில் தவறில்லையல்லவா?" என்று யோசித்தபடியே இரவு சாப்பாட்டுக்குச் சென்றேன்.

"எனது சாப்பாட்டு மேஜையில் நான் மட்டுந்தான். மற்ற நண்பர்கள் எல்லாம் பம்பாய் துறைமுகத்தில் இறங்கி விடடார்கள். சாப்பிடும் போது எனக்கு பரிமாறிய கோவா இந்தியரான வேலைக்காரரைப் பார்த்து மிகவும் அலட்சியமாக, அவர் எந்தெந்த ஊர்களுக்குப் பிரயாணம் செய்திருக்கிறார் என்று கேட்டேன். அவர் மிகவும் அடக்கத்துடனும் மரியாதையுடனும் பதில் அளித்தார். அந்தப் பதிலிருந்து நான் சென்ற எல்லா நாடுகளுக்கும் அவர் சென்றிருக்கிறார் என்றும், நான் செல்லாத சில நாடுகளுக்கும் அவர் சென்றிருக்கிறார் என்றும் அறிந்தேன். இம்முறை எனக்குப் பரிமாறிய வேலைக்காரர் மூலமாகவே ஆண்டவன் எனது கர்வத்தை அடக்கினார்" என்று எழுதுகிறார்.

இதனை ஒரு பண்பு போலவே ஏ.கே.செட்டியார் தனது பிரயாண கட்டுரைகளில் எழுதி இருக்கிறார். எங்கு சென்றாலும் சரி; எதைப் பார்த்தாலும் சரி; யாரிடம் பேசினாலும் சரி - அதுவே முக்கியமான தொனியாக இருக்கிறது. அதுவே பல ஆண்டுகள் சென்ற பின்னர் கூட அவர் நூல்களைப் படிக்க வைக்கிறது. எந்த இடத்திலும் அவர் தன்னை பெரிய மனிதராகவோ - பிரமுகராகவோ சொல்லிக் கொள்வது இல்லை. சாதாரணமான மனிதராகவே அடக்கத்தோடு கூடியவராகவே சொல்லிக் கொள்கிறார். அதன் நோக்கம் மிக எளியது. அதாவது எல்லா மனிதரும் எளியவராக - அடக்கமானவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான்.

பிரயாணம் என்பது எப்பொழும் சுவாரசியமானது என்றாலும், அது பணவசதியை மட்டும் பொறுத்தது இல்லை. பிரயாணம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தையும், விரிந்த உள்ளத்தையும் பொறுத்து இருக்கிறது என்பதையும் அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கிறார்.

பலநாடுகளுக்குப் பிரயாணம் சென்று, பலவிதமான மக்களையும், ஆட்சி முறைகளையும், பலவிதமான காட்சிகளையும் கண்ட ஏ.கே. செட்டியார் பயணிகளின் இயல்பு, குணநலம் பற்றியும் அறிந்து மிகவும் சுருக்கமாகச் சொல்கிறார். சுருக்கமாகச் சொல்வது என்பதை ஒரு கலை போலவே அவர் சொல்லிக் கொண்டு வருகிறார். உலகம் சுற்றும் மனிதர்களில் இரண்டு விதமான மனிதர்களை அவர் காணுகிறார். ஒரு ரகத்தவர் வெளிநாடுகளில் காண்பது எல்லாம் குறைபாடு உள்ளவை, மட்டமானவை என்று திடமாக நம்பி சொல்லக் கூடியவர்கள். இன்னொரு வகையினர் நம் நாட்டில் உள்ளவை மட்டுமே உயர்ந்தவை, மேலானவை என்று சொல்லக் கூடியவர்கள். இந்த இரண்டு வகையினரும் நாட்டுக்கு ஒரே வகையில் தீங்குதான் இழைக்கிறார்கள் என்பது உலகம் சுற்றிய ஏ.கே.செட்டியாரின் தீர்ப்பாக இருக்கிறது. இம்மாதிரி தீர்க்கமாகச் சொல்ல, அவர் எந்த நாட்டின் அரசாங்க உதவியையோ - அரசு ஆதரவு பெற்ற நிறுவனங்கள் மூலமாகவோ பயணம் செய்யாமல் - தன் விருப்பப்படி பயணம் செய்ததுதான்.

பிரயாண அனுபவங்களைப் பற்றி - பயணம் செய்கிறவர்கள் - பயணம் செய்யும் நாட்டினர் மனோ பாவனைகளைப் பற்றியும் - தன் பயண அனுபவ வாயிலாக செட்டியார் சொல்கிறார். பல ஆண்டுகள் சென்ற பின்னருங்கூட அது அப்படியே இருக்கிறது. ஏனெனில் மனித மனம் என்பது மாறாமல் இருப்பதுதான். மேலும் அவர் தன் புத்தகத்தை எழுதியது பற்றி, 'எல்லோரையும் சமமாக மதித்து எவரையும் இழிவுபடுத்தும் நோக்கமில்லாமல், விருப்பு வெறுப்பின்றி, நியாயமற்ற கட்டுப்பாடுகளுக்கு ஆளாகாமல், மூன்று ஆண்டுகளுக்கு மேல் பிரயாணம் செய்ய நேர்ந்த அரிய சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி மலேயா முதல் கனடா வரை எழுதி இருக்கிறார். அவர் தன்னைப் பற்றி எப்பொழுதுமே

முன்நிறுத்திப் பேசக் கூடியவர் இல்லை. ஆனாலும் பேசக்கூடிய சந்தர்ப்பத்தில் பேசாமலும் விடுவதில்லை.'

அவர் பிரயாண நூல்களிலேயே மலேயா முதல் கனடா வரை தான் நீண்ட முன்னுரை கொண்டது. அதனை அவரது எல்லா பயண நூல்களுக்கான ஒரு முன்னுரையாகவே கொள்ள வேண்டும். அதில் பயணம் செய்வதில், அந்நிய நாட்டினராய் இருப்பதில் உள்ள சௌகரியத்தைப் பற்றி, சிலர் தங்கள் மனத்தில் இருப்பவற்றை வெளியே சொல்ல முடியாமல் துடித்துக் கொண்டிருப்பார்கள். உள் நாட்டிலுள்ளவர்களிடம் கூற அச்சம். அப்படிக் கூறினால் ஒரு வேளை அவர்கள் அதனைத் தங்களுக்கே பாதகமாக உபயேகித்தால் என்ன செய்வது என்ற பயம். அந்நியர்களைப் பொறுத்தவரையில் அந்த பயம் கிடையாது. ஏனென்றால் அந்நியர்கள் சில மாதங்களில் சொந்த ஊர் திரும்பிவிடுவார்கள். அன்றியும் அவர்களால் ஒரு தீங்கும் நேராது - என்று அனுபவவாயிலாக அறிந்ததையும் சொல்கிறார்.

மலேயா முதல் கனடா வரை - முதல் கட்டுரை மலேயா. பிறகு இந்தோனேஷியா, பாலீத் தீவு, ஜோக்ஜகர்தாகல் செல்லும் கதை என்று இந்தோனேஷியா பொரபுதூர் கற்சிற்பங்கள் பற்றிய ஒரு கட்டுரை, ஆஸ்திரேலியா, பிஜித்தீவுகள், கடைசியாக கனடா.

எல்லா கட்டுரைகளும் ஒரு பொதுத்தன்மை கொண்டு இருக்கின்றன. அது பயணம் செய்த ஏ.கே.செட்டியார் அனுபவம் என்பதை சொல்வதோ- அந்த நாட்டில் அப்போதைய அரசியல், பொருளாதார, வாழ்க்கை நிலைகள். அதில் முக்கியமானது இந்தோனேஷியா பற்றியது. இந்தோனேஷியாவில் டாக்டர்.சுகர்ணோ தலைமையில் சுதந்திரப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த கால கட்டத்தை - குழப்பமான அரசியல் நிகழ்ச்சிகளை - மக்கள் வாழ்க்கை நிலையை குழப்பம் இல்லாமல் சொல்வதுதான்.

இந்தோனேஷியாவில் உள்ள பொரபுதூர் இந்திய புராணங்கள், இதிகாசங்களை கற்களில் சொல்லும் சிற்பங்களைக் கொண்டது. பொரா என்பது விகாரா என்ற வடமொழியின் திரிபு. விகாரா என்பதற்கு மடம் என்பது பொருள். புதூர் என்றால் இந்தோனேஷிய மொழியில் குன்று.

எனவே பொராபுதூர் என்றால் குன்றின் மேலுள்ள மடம் என்பது பொருள்.

பொரபுதூர் சிற்பங்களின் சிறப்பு, கால வெள்ளத்தை அது கடந்து வந்த விதம், பௌத்த மதம் மறைந்து, இஸ்லாம் ஏற்பட்ட போது பொராபுதூர் ஸ்தூபியை பௌத்த சந்நியாசிகள் மணலைக் கொட்டி ஸ்தூபி முழுவதையும் மறைத்துவிட்டதையும். பல ஆண்டுகளுக்கு மணல் மேடாக இருந்தது, கடந்த நூற்றாண்டில் புதை பொருள் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டதையும் சொல்லும் ஏ.கே.செட்டியார் எந்த சுவாரசியமான விஷயத்தையும் விட்டுவிடுவதில்லை.

பொராபுதூரில் கல்லில் ஒரு சிற்பம். இரண்டு ஆட்கள் நின்று கொண்டு இருக்கிறார்கள். எதிரே ஒரு மான். தனது தலையை இருவருக்கும் எதிர்ப்புறமாகத் திருப்பிக் கொண்டு இருக்கிறது. இந்த சிற்பத்திற்கு ஒரு கதை உண்டு.

ஒரு காட்டில் ஒரு வழிப்போக்கன் செல்கிறார். மாலைப் பொழுது. இருட்டிக் கொண்டு வருகிறது. பறவைகள் கிறீச்சிட்டுச் செல்கின்றன. தனியாகச் செல்லும் ஆணுக்குப் பயம் வந்து விடுகிறது. ஒரு மரத்தடியில் நின்று, 'எனக்குக் காட்டில் வழி தெரியவில்லை. வழி காட்ட இங்கு யாரும் இல்லையா?' என்று காடே அதிரும்படி கத்தினார்.

" வழிப்போக்கரே, நேராகக் கிழக்கே சென்றால் ஓர் ஆறு எதிர்ப்படும். ஆற்றைக் கடந்தால் பெரிய நகரம் ஒன்று உண்டு" என்று விநோதமான குரல் கேட்டது.

வழிப்போக்கர் திரும்பிப் பார்த்தார். ஒரு பொன்மான் நின்று கொண்டிருந்தது. இதற்கு முன் பொன்மானை அவர் கண்டதில்லை; அது பேசியும் கேட்டதில்லை.

"பொன்மானே, நீ எனக்கு வழிகாட்டியதற்கு நன்றி. அந்தக் காட்டில் எனக்கு வழிகாட்டிய உனக்கு ஏதாவது கைமாறு செய்ய ஆசைப்படுகிறேன்" என்றார்.

பொன்மான் அதற்கு, "ஐயா, வழிபோக்கரே, மனிதர்கள் மீது எனக்கு நம்பிக்கையே கிடையாது. நீர் எனக்கு எந்த பிரதி உபகாரமும் செய்ய வேண்டாம். இந்தக்காட்டில் பொன் மான்

ஒன்றைப் பார்த்ததாக யாரிடமும் சொல்லாமல் இருந்தால், அதுவே போதும்" என்றது.

"சரி" என்று சொல்லிவிட்டு வழிப்போக்கர் நடந்தார். ஆறு வந்தது. அதைத் தாண்டி நகரத்திற்குள் வந்தார். வந்ததில் இருந்து அவருக்கு ஆகாரம் இல்லை. பசி காதை அடைக்க ஒரு 'மரத்தடியில் படுத்துவிட்டார்.

அந்த ஊர் அரசி ஒரு பொன்மான் வேண்டுமென்று தனது கணவனிடம் வேண்டினாள். அரசியின் வேண்டுகோளை நிறைவேற்றாத அரசன் உண்டா என்ன? அரசன் ஒரு பொன்மானை பிடித்துக் கொண்டு வரும்படி ஆட்களை ஏவிவிட்டான். அவர்கள் பல தேசங்களுக்கும் சென்றார்கள். ஆனால் பொன்மான் கிடைக்கவில்லை. அரசி கோபித்துக் கொண்டாள்.

அரசன்,''பொன்மான் பிடித்துக் கொண்டு வருகிறவர்களுக்கு அல்லது பொன்மான் இருக்குமிடத்தை காட்டுகின்றவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு" என்று நாடு முழுவதும் பறை அறிவித்தான்.

பட்டினியால் சுருண்டு படுத்துக் கிடந்த வழிப் போக்கரின் காதில் மன்னனின் அறிவிப்பு விழுந்தது. எழுந்து உட்கார்ந்து கொண்டு இன்னொரு முறை கேட்டான். அப்புறம் மன்னனிடம் சென்று பொன்மானைக் கண்டது பற்றி கூறினான். ஆனால் மன்னன் வழிப்போக்கர் கூறியதை நம்பவில்லை. வழிப்பேக்கர் பொன்மானைக் காட்டுவதாகச் சத்தியம் பண்ணினான். எனவே மன்னன் காட்டிற்கு வந்தான்.

பொன்மான் காட்டில் இருந்தது. மன்னன் பொன்மான் பக்கம் சென்றான். ஆனால் அது தலையைத் திருப்பிக் கொண்டது.

"பொன்மானே உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன். ஏன் என் முகத்தைப் பார்க்காமல் தலையைத் திருப்பிக் கொள்கிறாய்?" என்று கேட்டான்.

"அரசே, தங்களைப் பார்க்க எனக்கு வெட்கமில்லை. ஆனால் தங்களுடன் நிற்கும் வழிப்போக்கரைப் பார்க்க வெட்கப்படுகிறேன். ஏனென்றால் அவர் சொன்ன சொல்லைக் காப்பாற்றவில்லை" என்றது பொன்மான்.

மன்னன் என்னவென்று வழிப்போக்கரை விசாரித்தான். பிறகு பொன்மானைக் காட்டிலேயே திரியவிட்டு விட்டு நாட்டிற்கு வந்த வழிப்போக்கரை கடுமையாகத் தண்டித்தான்.

ஏ.கே.செட்டியார் தகவல் தரும் பயண எழுத்தாளர் இல்லை. ஒரு நாட்டின் கலை, கலாச்சாரம், பண்பு, மொழி, அரசியல் கோட்பாடுகள், பழைய கதைகள், கவிதை - என்று ஒவ்வொன்றையும் வெகு கவனமாகக் கண்டு அதனைப் படித்து அனுபவிக்கும்படியாகச் சொல்லக் கூடியவர். அதனை அவர் தனது எல்லா நூல்களுக்கு உரிய ஒரு பொதுப் பண்பாகவே கொண்டு சொல்லி இருக்கிறார்.

தனது ஆஸ்திரேலிய பயணத்தை சுவைகுன்றாமலும், சுவாரசியத் தன்மை குறையாமலும் சொல்லும் செட்டியார், ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் இனப் பாகுபாட்டையும் - அதாவது ஐரோப்பியர்கள் அல்லாதவர்கள் குடியேறுவதைத் தடுக்க அவர்கள் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளையும், பூர்வீகக்குடிகள், 1778ஆம் ஆண்டில் மூன்று லட்சமாக இருந்தவர்கள், பாதுகாத்து ரட்சிப்பதற்காக அரசாங்கத்தில் தனியாக ஒரு துறை ஏற்படுத்தப்பட்டதால் எழுபத்தி ரண்டாயிரமாகக் குறைந்து போய்விட்டது பற்றியும் நகைச்சுவை ததும்பக் குறிப்பிடுகிறார்.

செட்டியார் பயணநூல்களில் நகைச்சுவை என்பது தூக்கலாகவே இருக்கிறது. அவர் தனது பயண சிரமங்களையும் - கப்பல்களில் ஏற்படுகின்ற கஷ்டங்களையும், விசா வாங்க தூதுவரகங்களில் காத்துக் கிடக்க நேர்ந்ததையும் - தனது நகைச்சுவை மிளிரும் எழுத்துக்களில் சுவாரசியமாக்கி விடுகிறார்.

மகாத்மா காந்தி படம் தயாரித்துக் கொண்டிருந்த போது மகாகனம் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியை சென்னையில் சந்தித்தது பற்றி சுருக்கமாகவும், ரசமாகவும் சொல்கிறார்.

“எதற்காக வந்தீர்கள்?” என்றார் சாஸ்திரியார்.

“காந்தியடிகளைப் பற்றி ஒரு பிலிம் தாயாரிக்கிறோம்” என்றேன்.

“சாதகமாகவா? பாதகமாகவா?” என்றார்.

“சாதகமாகத்தான்” என்றேன்.

"அப்படியானால் உட்காருங்கள்" என்றார் சாஸ்திரியார்.

மலேயா முதல் கனடா வரை - என்ற பயண நூலில் பலருடைய உரையாடல்கள் வருகின்றன. அவை பெரும்பாலும் குறித்து வைத்துக் கொண்டவை அல்ல என்கிறார் செட்டியார். அதற்கு மேலே போய், வெளிநாடுகளில் ஒருவருடைய பேச்சை குறித்து வைத்துக் கொண்டால் அது பல பிரச்சினைகளுக்குக் காரணமாகிவிடும் என்றும் சொல்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக எது மனதில் தங்குகிறதோ - அதுவே முக்கியமானது பின்னால் எழுதக் கூடியது என்றார். அது பயண எழுத்தில் சிறப்பு சேர்க்கும் அம்சந்தான். இந்த மாதிரியான உரையாடல்கள் ஆடம்பரமோ பெருமிதமோ கொள்வதற்கு இல்லாமல் - இயல்புத் தன்மையைக் கொண்டு இருக்கிறது. இம்மாதிரியான பண்புகளே செட்டியாரது புத்தகத்தை மறுபடியும் படிக்கத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றன.

உலகம் எவ்வளவு பெரியதோ - அவ்வளவு சிறிது. எப்போது வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் நேரலாம். பிஜித் தீவுக்குச் சென்ற ஏ.கே.செட்டியார், சிறுவயதில் திருவண்ணாமலையில் படித்தவர். பிஜித்தீவில் ராம்நாயுடு வீட்டிற்கு ஒரு நாள் செல்கிறார். அவர் ராமராஜு என்பது தனது பெயர் என்றும், அதனை ராம்நாயுடு என்று மாற்றி வைத்துக் கொண்டதாகவும் சொல்கிறார். சொந்தமாக அரிசி இயந்திரசாலையும், கரும்புப் பயிரும் அவருக்கு உண்டு. அவர் செட்டியாரைப் பற்றி விசாரிக்கிறார். அதை செட்டியார் எழுதியபடியே படிப்பதுதான் சரி.

"நான் என்னைப் பற்றி சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே அவர் கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்தது. தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டார். திருவண்ணாமலையில், எனது பெரிய தகப்பனாரிடம் சமையல் வேலை செய்து வந்ததாகவும், எனது தகப்பனாரையும் அவருக்குத் தெரியுமென்றும், நான் சிறு குழந்தையாக இருந்த பொழுது என்னை எடுத்துச் சீராட்டி இருப்பதாகவும், ஒரு நாள் எங்கள் பெரிய தகப்பனார் கோபத்தில் அவரை அடித்ததாகவும், இலை வாங்குவதற்காகச் சொல்லி வெளியே வந்த அவர், திரும்பிச் செல்ல மனமில்லாமல், கங்காணிகளிடம் அகப்பட்டு பிஜிக்கு வந்து சேர்ந்ததாகவும் கூறினார்.

"எனது குடும்பத்தில் எல்லோருடைய பெயரும் அவருக்குத் தெரிந்திருந்தது. அவருடைய சகோதரர்களில் சிலரையும் எனக்குத் தெரியும். எனது பெரிய தகப்பனாருக்குக் கோபம் வந்தது நல்லதாயிற்று. இல்லையானால், பாவம் ராமராஜு தமது வாழ்க்கை முழுவதும் சமையற்காரராகவே இருந்திருக்கக் கூடும்."

ஏ.கே. செட்டியார் சம்பவங்களையும், காட்சிகளையும் பயண நூல்களின் நடுவே ஒன்றாக இணைத்து, தனது பயணம் என்பதை எப்போதும் படித்து அனுபவிக்கும் படியாக செய்துவிடுகிறார்.

வெளிநாட்டுப் பயணம் என்றுதான் இல்லை. உள்நாட்டுப் பயணமாக இருந்தாலும் சரி, படித்து அனுபவிக்கும்படியாகச் செய்துவிடுகிறார். தமிழ்நாட்டின் கடற்கரை ஊர்களில் ஒன்று தரங்கம்பாடி. ஏழாம் நூற்றாண்டில் இருந்து சரித்திரம் கொண்ட ஊர். பூம்புகார், பொறையார் பக்கத்தில். இருப்பது. பதினாறாவது நூற்றாண்டில் டச்சுக்காரர்கள் வந்து தரங்கம்பாடியில் இறங்கி, வாணிகம் புரிய கோட்டை கட்டிக் கொண்ட ஊர். டச்சுக்காரர்களின் பண உதவி பெற்று ஜெர்மனி பாதிரிகள்தான் வந்தார்கள் என்றும் – அவர்களில் சிலர் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் மருத்துவம் என்று பல துறைகளில் ஈடுபட்டு உழைத்தார்கள் என்றும் சரித்திரம் சொல்கிறது.

தரங்கம்பாடியில் தான் முதன் முதலாக தமிழில் பைபிள் அச்சிடப்பட்டது. தஞ்சாவூர் மன்னர் சரபோஜியின் பாதுகாவலராகவும், ஞானத்தந்தையாகவும் இருந்த ஸ்வாட்ஸ் தரங்கம்பாடியைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்ட லூத்தரன் மிஷனைச் சார்ந்தவர். இவர் மீது தஞ்சாவூர் ராஜா சரபோஜி ஆங்கிலத்தில் ஒரு கவிதை பாடி இருக்கிறார். அதுதான் இந்தியர் ஒருவர் ஆங்கிலத்தில் எழுதிய முதல் கவிதை.

இப்படி பலவிதமான சிறப்புக்களுக்குக் காரணமாக இருந்த தரங்கம்பாடிக்கு மகாத்மா காந்தி கூடச் சென்று இருக்கிறார். கோட்டை பக்கத்தில் உள்ள அகன்ற மணற்பரப்பில் மக்கள் அளித்த வரவேற்பையும் பெற்றுக் கொண்டு இருக்கிறார். அது 1915ஆம் ஆண்டில் நடந்தது. அதாவது தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகத்தில் கலந்து

கொண்டு உயிர் நீத்த வள்ளியம்மையின் - மூதாதையர்களின் சொந்த ஊரான தில்லையாடிக்கு அனுபதாபம் தெரிவிக்க வந்த மகாத்மா காந்தி பொறையார், வந்து தரங்கம்பாடியில் மக்கள் வரவேற்பை பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாட்டில் தரங்கம்பாடி ஒரு முக்கிய சுற்றுலா இடமாக இருந்து வருகிறது. மாயவரம் என்று பெயர் பெற்று இருந்த மயிலாடுதுறையில் இருந்து தரங்கம்பாடிக்கு ரயில் ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் தற்போது அந்த ரயில் இல்லை. ரயில் விடுவது லாபகரமாக இல்லையென்பதால், ரயில் நிறுத்தப்பட்டுவிட்டது.

ஏ.கே.செட்டியார் 1954 ஆம் ஆண்டில் ரயில் பயணம் செய்து தரங்கம்பாடி சென்று வந்தது பற்றி ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். பெயர் தரங்கம்பாடி. ஏ.கே.செட்டியார் கட்டுரைகளுக்கு அனாவசியமாக அலங்காரமான பெயர் எதுவும் வைப்பதில்லை. கட்டுரைக்கு எது முக்கியமோ அதுதான் பெயர். தரங்கம்பாடியும் அப்படித்தான். ஒரு வார்த்தை கூட அதிகபட்சம் என்று சொல்ல முடியாத விதத்தில் கட்டுரை தொடங்குகிறது.....

"மாயவரத்திலிருந்து சுமார் பதினெட்டு மைல் தூரத்திலுள்ளது தரங்கம்பாடி. ஆடி அசைந்து செல்லும் ரயிலில் இரண்டே முக்கால் மணி நேரத்தில் தரங்கம்பாடி ரயில் நிலையத்தை அடைவோம்.

"ரயில் நிலையத்திலிருந்து அரை மைல் தூரத்தில் பெரிய கோட்டை. இக்கோட்டைக்குள் இருக்கும் ஊர்தான் தரங்கம்பாடி. கோட்டையை அடைவதற்குள் இரண்டு ஆறுகளைக் கடக்க வேண்டும். ஒன்று உப்பனாறு. பெயரிலிருந்தே தண்ணீர் எப்படி இருக்கும் என்பதை அறியலாம். மற்றொன்று பக்கிங்ஹாம் கால்வாய். சென்னையில் இருக்கிறதே அதே நாற்றம் நிறைந்த பக்கிங்ஹாம் கால்வாய்தான் இது. இந்த இரண்டு ஆறுகளும் தரங்கம்பாடிக்கு அருகே சங்கமம் ஆயின.

"கோட்டைக்குள்ளே ஒரு கோட்டை, குறுக்கிலும் நெடுக்கிலும் ஓடும் அழகான வீதிகள், பாழடைந்த பெரிய கட்டிடங்கள், ஒரு மசூதி, இரண்டு கோயில்கள், மூன்று

கிறிஸ்துவ ஆலயங்கள், சுமார் ஐந்தாறு வீடுகள். இவைதாம் தரங்கம்பாடி" - இப்படி வெகு சுவாரசியமாக போகிறது ஏ.கே. செட்டியாரின் கட்டுரை.

கட்டுரைக்கு மொழி வளமும், சிந்தனை வளமும் உண்டு என்பதை நிலைநிறுத்தக் கூடியது. எளிமையான சொற் பிரயோகங்கள் கட்டுரைக்கு உயிர்த்தன்மை தருகின்றன. காலம் என்பது ஊரை மாற்றி அமைத்துவிட்ட போதிலும் - சொற்களால் கட்டப்பட்டிருக்கும் பயண யாத்திரை சிதைக்க முடியாத ரூபத்திலேயே இருக்கிறது. அதனை தன்னுடைய ஒவ்வொரு கட்டுரையிலும் எளிமையான தொனியில் ஏ.கே. செட்டியார் சாத்தியமாக்கி இருக்கிறார்.

## குடகு

தமிழ்நாட்டு மக்களுக்கு காவிரி ஆற்றோடு வாழ்வும் வளமும் சம்பந்தப்பட்டு இருக்கிறது. அவர்களின் காவியமான சிலப்பதிகாரம் காவிரியைப் புகழ்ந்து பாடுகிறது. ஔவையார் தண்ணீரும் காவிரியே என்று பாடி வைத்துள்ளார். தமிழ்நாட்டில்தான் காவிரி கடலோடு கலக்கிறது. பல நூற்றாண்டுகளாக அவர்களின் வாழ்க்கையோடு காவிரி இரண்டற கலந்துபோய் உள்ளது. கலை, கலாச்சாரம், வாழ்வு, பொருளாதாரம் எல்லாம் காவிரியைச் சார்ந்ததுதான். புராணங்களிலும், இலக்கியங்களிலும் கவிஞர்களின் கவிதையிலும், சங்கீதமணிகளின் இசையிலும் நீக்கமற இடம் பெற்றுள்ள காவிரி குடகு மலையில் தோன்றி 765 கிலோ மீட்டர் பயணம் செய்து பூம்புகார் என்று சிறப்பு பெற்று இருந்த காவிரிப்பூம்பட்டிணத்தில் கடலோடு கலக்கிறது.

காவிரி சமவெளிப் பகுதியில் வாழும் மக்களுக்கு, காவிரி தோன்றும் குடகு மலைப் பகுதி மேல் ஆர்வமும் ஈர்ப்பும் உண்டு. அவர்களால் பயணம் போக முடியாவிட்டாலும், காவிரி தோன்றி ஓடி வரும் வழி நெடுக உள்ள ஊர்களையும் - கோயில்களையும் பார்த்து மகிழ படிப்பு ஒன்றையே சார்ந்து

இருக்கிறார்கள். ஆண்டு தோறும் ஆடிமாதத்தில் காவிரியில் வரும் புதுவெள்ளத்திற்கு பதினெட்டாம் தேதி படைத்து, காணிக்கை செலுத்துகிறார்கள். அதுதான் ஆடிப் பெருக்கு. ஆடியில் பெருக்கெடுக்கும் காவிரிக்கு கரையமைத்தான் கரிகால் சோழன். அது காரணமாகவே அவன் கொண்டாடப்பட்டு வருகிறான். சோழநாட்டில் பெருக்கெடுக்கும் காவிரி மைசூரை அடுத்த குடகு மலையில் உற்பத்தியாகிறது.

பயணம் செய்வதிலும் - அதைப் பற்றி எழுதுவதிலும் அக்கறை கொண்ட ஏ.கே.செட்டியார், குடகு நாட்டில் ஆறு வாரம் பயணம் செய்து, சுமார் 1500 மைல்கள் சுற்றி வந்து, இந்திய ராணுவத்தின் தளபதியாக இருந்த ஜெனரல் கரியப்பா உட்பட சில பெரிய மனிதர்களையும் பல சாதாரணமான மனிதர்களைச் சந்தித்து உரையாடி மகிழ்ந்ததை - குன்றாத ஒருவிதமான சுவையோடு சொல்கிறது. குடகு பற்றிய பயண கட்டுரைகள் குமரிமலரில் வெளிவந்தன. பின்னர் 1967 ஆம் ஆண்டில் அவற்றை எல்லாம் ஒன்றாகத் திரட்டி - ஒரு சிறு முன்னுரையோடு - கருணைபொழியும் காவிரி அன்னையின் திருவடிக்கு காணிக்கை ஆக்கி இருக்கிறார்.

காவிரியைப் பற்றிய புராணம், குடகு நாட்டு சரித்திரம், மக்கள், அனுபவங்கள், அவர்களின் விருந்தோம்பல் - என்று பல இழைகளை ஒன்றாகச் சேர்த்து மலைப் பகுதிகளில் பயணம் என்கிற களைப்பு தோன்றாத விதத்தில் குடகு பற்றி நூல் எழுதப்பட்டிருக்கிறது.

"பாகமண்டலத்திலிருந்து தலைக்காவிரி சுமார் மூன்று மைல். சாலை இல்லாததால் இதுவரை எல்லோரும் நடந்துதான் சென்றார்கள். இப்பொழுது நல்ல தார்ச் சாலை அமைத்திருக்கிறார்கள். தலைக்காவிரி வாயிற்படி வரை கார் செல்லலாம்.

"தலைக்காவிரியை அடைந்த பொழுது மணி பத்தரை. தலைக்காவிரி 4800 அடி உயரத்தில் இருக்கிறது. அதற்கு மேல் 300 அடி உயரத்தில் உள்ள குன்றுதான் பிரமகிரியின் உச்சி. உச்சி மீது நின்று பார்த்தால் மப்பு மந்தாரமில்லாத நாட்களில் அரபிக் கடலைப் பார்க்கலாம் என்று கூறினார்கள்.

"தலைக்காவிரியை அடைந்ததும் ஒரு புனிதமான இடத்தை அடைந்தோம் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. அழகும்,

அமைதியும் நிறைந்திருந்த அவ்விடத்தில் அப்பொழுது எங்களைத் தவிர யாத்திரிகர் நான்கு பேர்தான். அர்ச்சகர்கள் இருவர்.

"நெல்லி மரத்தடியில் ஊற்றாக உற்பத்தியாகிறாள் காவிரி. ஊற்று இரண்டரை அடி சதுரம் இருக்கலாம். தண்ணீர் மூன்றடி ஆழம் இருக்கலாம். ஊற்றின் மீது கரையில் ஒரு கோயில். கோயிலில் விக்கிரகமில்லை. பூசை முழுவதும் ஊற்று நீருக்குத்தான். தண்ணீரில் அர்ச்சகர் குங்குமத்தைப் போடுவார். மலர்களைத் தூவுவார். எடுக்க எடுக்கக் குறையாமல் ஊற்றெடுக்கிறாள் காவிரி.

"சிறு ஊற்றுக்கு முன்னே சில அடிகள் தணிவாக பெரிய ஊற்று ஒன்று இருக்கிறது. அது சுமார் முப்பது அடி சதுரம் இருக்கும். அதிலுள்ள தண்ணீர் சிறிய ஊற்றிலிருந்து வருவதாகக் கூறுகிறார்கள். ஒரே மட்டம்தான் தண்ணீர் இருக்கிறது. பின்னர் காவிரி அங்கிருந்து பூமிக்கு அடியில் மறைந்து பல நூறு அடிகள் சென்ற பின் வெளிப்படுகிறாள். பாகமண்டலத்தில் வெளித்தோன்றும் காவிரியில் தான் மக்கள் முதலில் நீராடுகிறார்கள். பின்னர் அதே ஈர உடையுடன் தலைக்காவிரி சென்று பெரிய ஊற்றில் நீராடி சிறிய ஊற்றுக்குப் பூஜை செய்து, சிறிய ஊற்று நீரை தலையில் தெளித்துக் கொண்டு மூங்கில் குழாய்களில் காவிரி நீரை வீட்டிற்கு எடுத்துச் செல்கின்றனர். சிறிய ஊற்றுதான் மிகப் புனிதமானது.

"ஐப்பசி மாதம் பிறக்கும் போது, காவிரியும் ஆண்டுதோறும் பிறப்பதாக வழக்கு. ஒவ்வொர் ஆண்டும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் காவிரி பிறக்கும் புனித நேரத்தில் நீராடுவதற்காகக் கூடுவார்கள். இரவோ பகலோ எந்த நேரத்தில் மாதம் பிறந்தாலும், அந்த நேரத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களைப் பார்க்கலாம். காவிரி பிறப்பதற்கு அறிகுறி தலைக்காவிரி சிறிய ஊற்றில் அரைஅங்குலம் அல்லது ஓர் அங்குலம் தண்ணீர் பொங்குமாம்" என்று தலைக்காவிரியைப் பற்றி விவரிக்கும் செட்டியார், குடகு தனிநாடாக இருந்ததுப் பற்றியும், அப்பகுதியில் காபி பயிர் வர்த்தகத்தைப் பற்றியும், தனிநாடாக இருந்த குடகு பின்னர் மைசூருடன் இணைந்து, கர்நாடகாவின் ஒரு பகுதியாகிவிட்டதைப் பற்றியும் சொல்கிறார்.

குடகு பற்றிய சரித்திரத்தில் கூட சிறப்பாக வருவது மக்களின் வாழ்க்கைதான். குடகு மக்களின் வீரம், விருந்தோம்பல், யாரையும் அழைக்காமல் - வெளி ஆட்களை அழைக்காமல் கல்யாணம் செய்யும் வழக்கத்தைக் கொண்ட குடகு மக்கள் திருமணம் ஒன்றுக்கு அழைப்பு பெற்று - அதில் கலந்து கொண்டதை - அவர்களின் கல்யாணத்தோடு அரசியல், வீர சைவ மடங்கள், அதன் செயல்பாடுகள் - மக்கள் நம்பிக்கைகள் என்று பலவற்றையும் பற்றி - எப்பொழுதும் சாசுவதமாக உள்ள ஒரு தொனியில் எழுதி இருக்கிறது. பல ஆண்டுகள் சென்றுவிட்டதால் - இப்பொது பயணம் செய்கிறவர்களுக்கு செட்டியார் சொல்லும் காட்சிகளும் விவரங்களும், மாறி போய் இருக்க கூடும். இது தவிர்க்கவே முடியாதது. ஆனால் அவர் சொன்னதில் உள்ள சுவாரசியமும் - காட்சிப்படுத்திய விதமும் - என்றும் நிலைத்திருக்கக் கூடியதாகவே இருக்கிறது. அது குடகு பற்றிய கட்டுரைகளை மறுபடியும் படிக்கத் தூண்டுகிறது. உணர்ச்சியோடு இதயபூர்வமாக எழுதக் கூடிய பயண நூல்கள் பழையதாகி விடுவதில்லை என்பதற்கு தமிழில் ஏ.கே.செட்டியார் நூல்களில் இருந்து குடகு - பற்றியதையும் சேர்த்துச் சொல்ல வேண்டும்.

ஏ.கே.செட்டியாரின் குடகு பற்றிய நூலைப் படிக்கும் போது, தமிழ் மக்கள் மட்டுந்தான் காவிரி ஆற்றைப் புகழ்ந்து பாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல - காவிரி தோன்றும் குடகுப் பகுதியில் வாழ்ந்து வருகின்ற குடகர்களும் தமிழர்களைப் போலவே காவிரி ஆற்றைப் புகழ்ந்து - அதில் ஓடிவரும் நன்னீரைப் பற்றி சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். காவிரி பற்றி குடகுமக்கள் பாடும் பாட்டொன்றையும் அவர் மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார்.

தேன்துளி தின்னத் தின்ன
சிறிதுமே திகட்டாது
தேவர் தந்த பூமாலை
சூடவும் திகட்டாது
மனைவி தந்த வெற்றிலையின்
மகிழ்ச்சியும் திகட்டாது
தாய் ஊட்டும் பால் சோறு

சாப்பிடத் திகட்டாது
தந்தை தந்த பொன்னாடை
தரிக்கவும் திகட்டாது
காவிரித் தேவி புகழ்
பாடத் திகட்டாது.

ஏ.கே.செட்டியார் இளம் பருவத்தில் இருந்தே படிப்பில் ஆர்வங் கொண்டிருந்தார். படிப்பு என்பது கல்லூரியில் படித்து பட்டம் பெறுகின்ற படிப்பு இல்லை. அது வாழ்க்கையை மேலும் மேலும் வளமுரச் செய்யும் படிப்பு. அதன் மூலமாகப் பெற்ற செல்வத்தை அவர் சேர்த்துக் கொண்டு வந்தார். அது அவர் சொந்த வாழ்க்கையைச் செழுமைப்படுத்தியதோடு பிறருக்கும் பயன்படும் விதமாக அமைந்தது. அவருக்கு உத்வேகம் கொடுத்தது விவேகானந்தர் நூல்கள். அதன் காரணமாக அவர் ராமகிருஷ்ண மடத்தோடு நெருங்கிய பழக்கம் கொண்டிருந்தார். சிங்கப்பூர் பயணம் மேற்கொண்ட போது ராமகிருஷ்ண மடத்திற்குச் சென்றது பற்றியும் அவர்களின் சேவை பற்றியும் எழுதி இருக்கிறார். தான் படித்ததில் இருந்து சிறந்த சம்பவங்களையும், கருத்துக்களையும் தொகுத்து வெளியிடும் ஒரு பணியை அவர் சிறப்பாகவே செய்தார்.

பண்பு என்பது அவர் தொகுத்த நூல்களில் ஒன்று. அதன் முதல் பதிப்பு 1976ஆம் ஆண்டில் வெளிவந்தது. வாழ்க்கையின் சாரமென்று கருதிய கருத்துக்களின் கருலம் என்றே அதனைக் குறிப்பிடவேண்டும். அவர் கருத்துப் பிரசாரகர் இல்லை: செயல்படுகின்றவர் என்பது அவர் தொகுப்பு நூல்களைப் பார்க்கும் போதே தெரிந்துவிடும். கொய்த மலர்கள் என்ற தொகுப்பு அதற்கு ஓர் எடுத்துக்காட்டு. உலகத்தின் பல சமயங்களிலும், சான்றோர் உரைகளில் உள்ளுறையாக உள்ள பண்பு பற்றிய கருத்துக்களை ஒன்றாகத் திரட்டி, அதனை பண்பு, வாய்மை, கடமை, மனச்சான்று, அஞ்சாமை, நினைவாற்றல், காலந்தவறாமை - என்று ஏழு தலைப்புக்களில் பிரித்து கொடுத்திருக்கிறார். அதில் புதிதாக ஒன்றுமே எழுதவில்லை. ஆனால் பக்கம் பக்கமாக எழுதுவதைவிட - சில வரிகளில் அவர் எடுத்துக்காட்டாகச்

சொல்லி இருப்பது, படிக்கையில் மனத்தில் நீங்காது இடம் பெற்று வாழ்க்கையில் ஒளியேற்றக் கூடிய விதத்தில் உள்ளது.

பண்பு- தெகுப்பின் இரண்டாவது பெரும் பிரிவு கடவுள்: கடவுள் என்பது பக்தியை வளர்க்கும் விதமாக எழுதப்பட்டு இருக்கவில்லை. கடவுள் பற்றி ஏற்கனவே சொல்லப்பட்டு இருப்பவைகளை - தனக்கு எது தேவையென்று பட்டதோ அதை மட்டுமே சுருக்கமாகத் தொகுத்து கொடுத்து இருக்கிறார். அதில் ஒன்று பொ.திரிகூடசுந்தரம் பிள்ளை சக்தியில் எழுதியது.

நமது தமிழ்நாட்டின் ஒப்பற்ற தலைவரான சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார் அவர்கள் வேதாரண்யத்தில் உப்பு சத்தியாகிரகம் செய்வதற்காகச் செந்தமிழ் வீரர்களுடன் திருச்சியிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

அவர் புறப்படுவதற்கு முன் காந்தியடிகள் அவருக்குத் தம் கையினாலேயே தமது ஆசிர்வாதத்தைத் தமிழில் அனுப்பினார்.

"திக்கற்றவருக்குத் தெய்வமே துணை"

இந்த மொழிகள் என்றும் என் ஞாபகத்தில் இருந்து கொண்டிருப்பது போல, தமிழ் மக்கள் எல்லோருடைய இருதயத்திலும் இருந்து கொண்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

வாழ்க்கைக்கு சுவையூட்டி - அதற்கு அர்த்தம் கற்பிப்பது மாதிரியான கருத்துக்களையும் சம்பவங்களையும் கொண்டது தான் பண்பு தொகுப்பு. அதில் இரண்டுவிதமான அம்சங்களைக் காணலாம். ஒன்று தொகுப்பில் இடம் பெற்று இருக்கும் மேலான அம்சங்கள். அதைத் தொகுத்த மனிதரின் பண்பு. அது காரணமாகவே பண்புத் தொகுப்பு ஒரு பொக்கிஷம் மாதிரி இருக்கிறது. பல ஆண்டு முயற்சியின் விளைவு. மகிழ்ச்சி அளிக்கக் கூடியதும் - நிரந்தரமானதுமான அம்சங்களை அவர் எளிய பாணியில் தொகுத்து இருக்கிறார். கருத்துக்களும் - சம்பவங்களும் மாறி மாறி வருகின்றன.

பண்பு தொகுப்பில் காணப்படும் ரசமான சம்பவங்களில் ஒன்றை நோபல் பரிசு பெற்ற பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் நினைவுக் குறிப்பில் இருந்து செட்டியார் எடுத்துக் காட்டுகிறார்.

"ஒருவிதமான புனிதத்தன்மை வாய்ந்தவர் ஜி.இ.மூர். நாங்கள் கேம்பிரிட்ஜ் சர்வகலா சாலையில் படித்துக் கொண்டிருந்த போது அவரைப் பொய் சொல்லச் செய்யப் பலமுறை முயன்றேன். ஆனால் அதில் ஒரு முறைதான் வெற்றி பெற்றேன். அதுவும் தந்திரமாகப் பேசி.

''மூர், நீங்கள் எப்பொழுதும் உண்மைதான் பேசுவீர்களல்லவா?" என்று கேட்டேன்.

"இல்லை" என்றார்.

"அவர் தம் வாழ்நாளில் கூறிய பொய் இது ஒன்றுதான் என்று நம்புகிறேன்."

ஏ.கே.செட்டியார் ஒரு தொகுப்பாசிரியர் என்ற முறையில் அதிகமாகவே கவனிப்புக்குரியவர் ஆகிறார். அது அவரின் பரந்துபட்ட அறிவின் முதிர்ச்சி என்றே குறிப்பிட வேண்டும். எதைப் படிக்க வேண்டுமோ – எது வாழ்க்கைக்கு உத்வேகம் கொடுக்குமோ அதைக் கண்டுணர்ந்து ஒன்றாகத் திரட்டிக் கொடுத்து இருக்கிறார். அதில் நாடு, இனம், மொழி – என்று ஒன்றுமே அவர் பார்ப்பது இல்லை. அவர் கவனத்தில் கொண்டது எல்லாம் இந்தக் கருத்து, இந்தச் சம்பவம் மனித வாழ்க்கைக்குப் பயன்படுமா என்பதுதான். சாசுவதமான கருத்துக்களை மறுபடியும் – மறுபடியும் மக்கள் படிக்க வேண்டும் என்பதே அவர் நோக்கமாக இருந்தது. அதில் சரித்திர சம்பவங்களும் – பொறுத்தமான ரீதியில் இடம் பெற்றன.

தஞ்சாவூரை ஆண்ட சரபோஜி மன்னர் கலைகளிலும் படிப்பிலும் அதிகமான ஈடுபாடு கொண்டவர். தன் காலத்தில் அவரே பல மொழிகளையும் - அதிகமான புத்தகங்களையும் படித்தவர் என்று குறிப்பிடவேண்டும். அதோடு நடனம், இசை, வைத்தியம், தாவர இயல், என்று பல துறைகள் மீது ஆர்வம் கொண்டவர். அவரைப் பற்றி நிறையவே எழுதப்பட்டு இருக்கிறது. அதில் ஒன்று உ.வே.சாமிநாதையர் எழுதி இருப்பது. சங்கத்தமிழ் இலக்கியத்தை அச்சில் கொண்டு வந்த உ.வே.சாமிநாதையர், தான் கண்ணால் கண்டதையும் – பிறர் சொல்லி காதால் கேட்டதையும் எளிமையாக எழுதி இருக்கிறார். அவையே பதினெட்டாவது, பத்தொன்பதாவது நூற்றாண்டு தமிழகத்தின் சமூக, சரித்திர ஆவணங்கள் போல இருக்கின்றன. அவற்றில் ஒன்று ராஜா சரபோஜி பற்றி

உ.வே.சாமிநாதையர் எழுதி இருக்கும் குறிப்பு. அதன் பின்னால் இருக்கும் திருக்குறள் பற்றிய விவரம்.

சரபோஜி மன்னர் ஒரு முறை காசியாத்திரை சென்றார். அப்பொழுது கல்கத்தா நகரத்திலிருந்த ராஜப் பிரதிநிதியைக் காண எண்ணினார். அதற்குரிய அனுமதியை முன்னரே பெற்று ஏற்ற கையுறைகளுடன் சென்று கண்டார்.

அந்த ராஜப்பிரதிநிதி தமிழ் நாட்டிலுள்ள ஓர் அரசர் தம்மைப் பார்க்க வருவதையறிந்து தமிழ்நாட்டின் சிறப்புக்களை விசாரித்து வைத்துக் கொண்டார். அவர் திருக்குறளின் ஆங்கிலமொழி பெயர்ப்பைப் படித்து இன்புற்றவர். அது தமிழ்நாட்டில் உண்டான சிறந்த நூலாதலின் தமிழ் மூலநூலைப் பற்றி சரபோஜி அரசரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்று எண்ணியிருந்தார்.

சரபோஜியும் ராஜப்பிரதிநிதியும் வழக்கம் போல ஒருவருக்கொருவர் செலுத்த வேண்டிய மரியாதைகளைச் செலுத்திவிட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ராஜப்பிரதிநிதி, தஞ்சையரசரைப் பார்த்து, " தமிழ்நாட்டில் உண்டான திருக்குறளின் ஆங்கில மொழிப்பெயர்ப்பை நான் படித்து இன்புற்றதுண்டு. அதன் தமிழ் மூலத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு இருக்கிறது. ஆதலின் சில செய்யுட்களைச் சொல்ல வேண்டும்" என்றார்.

அரசர் அதுகாறும் தமிழின் பால் கவனம் கொண்டவரல்லர். தம் அரண்மனையில் சில புத்தகங்கள் உள்ள ஒரு சிறிய புத்தகச்சாலை இருப்பதை மட்டும் அறிந்திருந்தவர். பிரயாண காலத்திலும், வடமொழி, மகாராஷ்டிரம் முதலிய பாஷைகளில் தேர்ச்சி பெற்ற வித்துவான்களையே உடன் வைத்திருந்தார். அவருடைய தாய் பாஷை மகாராஷ்டிரம் ஆதலின் திருக்குறளைப் பற்றி அந்த சமயத்தில் தாமாகவேனும், அருகிலுள்ள வித்துவான்கள் வாயிலாகவேனும் அறிந்து சொல்லும் நிலை அவருக்கு இல்லை. இன்னது செய்வது என்று முதலில் அவருக்குத் தோன்றவில்லை.

மிகக்கூரிய அறிவுடையவராதலின் அரசன் அப்பால் ராஜப்பிரதிநிதியை நோக்கி, "என்னுடைய புத்தகசாலையில் இதைப் போல ஆயிரக்காணக்கான தமிழ் நூல்கள் இருக்கின்றன. ஆனால் எல்லாவற்றையும் நான் தெரிந்து வைப்பது முடியாத காரியம். தாங்கள் உத்தரவு கொடுத்தால்

நான் ஊர் போய்ச் சேர்ந்தவுடன் அந்தப் புத்தகத்தை அனுப்புகிறேன்" என்றார்.

ராஜப்பிரதிநிதி, "இதைப் போல எவ்வளவு தமிழ்ப் புத்தகங்கள் இருக்கின்றன?" என்று கேட்டார். "எவ்வளவோ இருக்கின்றன. ஊர் போனவுடன் அவற்றின் நாமாவளியையும் அனுப்புகிறேன்" என்றார் அரசர். ராஜப்பிரதிநிதி அங்ஙனமே செய்யலாமென்று சொல்லி விடை கொடுத்தனுப்பினார்.

தாம் அரசராகவுள்ள நாட்டுக்குரிய மொழியில் கவனம் செலுத்தாதிருந்தமை பெருங்குறையென்பது அதன் பின்னரே சரபோஜி அரசர் மனத்திற்பட்டது. இனி அங்ஙனம் இருத்தல் கூடாது. தமிழ்ச் சுவடிகளைத் தொகுத்துத் தமிழ் புலவர்களையும் ஆதரித்து வரவேண்டும் என்ற உறுதியை அவர் மேற் கொண்டார்.

ஆதலின் தஞ்சாவூருக்கு மீண்டவுடன் எங்கெங்கே தமிழ்ப்புலவர்கள் உள்ளார்கள் என்பதை அறியத் தலைப்பட்டார். தமிழ் எட்டுச் சுவடிகளையும் விலை கொடுத்து வாங்கித் தொகுத்தார். அப்பொழுது ஒவ்வொரு நூலுக்கும் பல பிரதிகள் கிடைத்தன. திருக்குறளில் எத்தனையோ சுவடிகள் வந்து குவிந்தன. தமிழ்வித்துவான்களுடைய பரம்பரையில் பிறந்தவர்கள் பலர் தங்கள் முன்னோரால் சேர்த்து வைக்கப்பட்ட சுவடிகளையும் பயன்படுத்த வகையறியாமல் இருந்தனர். அவை இடத்தை அடைத்துக் கொண்டு கிடப்பது அவர்களுக்கு வெறுப்பைத் தந்தது. அதனால் பலர் பதினெட்டாம் பெருக்கிற்கு காவிரியாற்றிலே சுவடிகளை விட்டும், அவற்றை நெய்யில் தோய்த்து ஆகுதி பண்ணியும் அழித்து வந்தனர். தங்கள் வீட்டிலுள்ள சுவடிக் குவியல்களை வேறு வகையிலே பலர் குறைத்து வந்தனர்.

அத்தகைய சமயத்தில் சரபோஜி அரசர் செய்த முயற்சியால் அச்சுவடிகளுக்கு மதிப்பும் உயிரும் உண்டாக ஆரம்பித்தன. பலர் பல சுவடிகளைக் கொடுத்து விலை பெற்றார்கள். அக்காலத்தில் ஒரு சுவடியை ஏட்டில் எழுத வேண்டுமானால் நூலின் அளவுக்கு ஏற்றபடி ஒரு குறிப்பிட்ட் கூலி உண்டு. தஞ்சை புத்தகசாலைக்கு அரசர் புத்தகங்களை வாங்குகிறாரென்பது தெரிந்தவுடன் அவற்றின் விலைகள் ஏறின.

நான்கு ரூபாய் விலை மதிப்புள்ள புத்தகம் நாற்பது ரூபாய்க்கு விற்கப்பட்டது. தமிழ்ப் புத்தகங்களை வாங்கியதோடன்றி அவற்றிற்கேற்ப மற்ற பாஷைகளிலுள்ள புத்தகங்கள் பலவற்றையும் அரசர் வாங்கித் தொகுத்தார். இதனால் சரஸ்வதி மகால் ஒரு பெரிய புத்தகசாலையாயிற்று.

தொகுப்பாசிரியர் என்ற முறையில் சரித்திரமாகவும், சமூக ரீதியில் சிறப்பு பெறுகின்றவற்றைப் படிப்பது அவசியம் என்ற முறையில் தொகுத்து அளித்து இருக்கிறார். அது அவரின் பன்முகத்தன்மைகளில் ஒன்று என்பது மாதிரியே - தமிழ் மரபு வழியாக வந்தது என்றும் சொல்லிவிடலாம். தமிழ் இலக்கியம் என்பது, தொகுப்பு முறையைக் கொண்டது தான். எனவே தமிழ் மொழியோடும், இலக்கியத்தோடும் தொடர்பு கொள்கிற போது தொகுப்பு என்பது தானாகவே வந்துவிடுகிறது. அதில் ஏ.கே.செட்டியார், நவீன காலத்திற்கு ஏற்ற மாதிரி மனித சிந்தனையையும் வாழ்க்கையையும் மேம்படுத்துகின்ற அம்சங்களைப் பிரமாதப் படுத்துகின்ற மாதிரியாக - எளிய முறையில் மகத்தான விஷயங்களை ஒன்றாகத் திரட்டினார். அவருடைய திரட்டில் வாழ்க்கை என்பதை அர்த்தமுள்ள தாக்கும் ஒவ்வொரு அம்சமும் - மனிதர்களின் வாழ்க்கையில் ஜீவிதமாக உள்ளதும் தொடர்ந்து வருவதையும் காண முடிகிறது. இம்மாதிரியான தொகுப்புக்களுக்கிடையில் ஒரு பயணம் செய்கிற ஆர்வத்தையும் காண முடிகிறது. அவர் பல தேசங்களுக்கும் - மகாத்மா காந்தி பற்றி படம் எடுக்க வேண்டும் என்ற திட்டத்தோடு பயணம் செய்தாலும் - பல தேசங்களுக்குப் பயணம் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கோடு பயணம் செய்தவர். அதன் வெளிப்பாடான அனுபவம், மகிழ்ச்சி, சுவாரசியம், மனிதப் பண்புகள், குணநலங்கள் வாழ்க்கையின் அடிப்படையான தேவை, சுற்றுப்புற சூழல் என்பது எப்படி இருக்கிறது என்பதையும் அவர் நூல்களின் வழியாகவே காணமுடிகிறது. சிரமம் என்பதே இல்லாத ஒரு மனோநிலையில் அவர் பயணம் செய்தது மாதிரியே தொகுப்புக்களையும் செய்து இருக்கிறார். அதன் எளிமையே அதற்கு வலுவும் சிறப்பும் சேர்க்கிறது. முக்கியத்துவம் இல்லாத எதையும் அவர் தன் நூல்களுக்குள் கொண்டு வருவதில்லை. அதோடு எதைச்

சொல்லவேண்டுமோ - அதனை ஒரு அனுபவம் மாதிரி எளிய சொற்களில் - எளிய முறையில் மனத்தில் பதியும் படியாகவும் தேர்ந்தெடுத்துச் சொல்லி இருக்கிறார். இதனை பண்பு தொகுப்பில் மட்டுமின்றி - அவரின் எல்லா தொகுப்புக்களிலும் காண முடிகிறது.

ஏ.கே.செட்டியார் தொகுப்பு நூல்களில் முக்கியமானது தமிழ்நாடு பயணக்கட்டுரைகள். 1968ஆம் ஆண்டில் புத்தகமாக வெளி வந்தது. அவர் தொகுப்பு நூல்களிலேயே அதுதான் பெரியது என்று குறிப்பிட வேண்டும். சுமார் மூன்னூறு பக்கங்கள் கொண்டது. ஒரு நூற்றாண்டிற்கு முன்னால் இருந்து தமிழில், பயணம், பயணக் கும்மி, ஜட்கா சவாரி, பஸ் பயணம். கப்பல் ஏறுதல், அதோடு பல ஊர்களுக்குச் சென்று பார்த்தல் - இப்படி பல்வேறு அம்சங்கள் குறித்து மகாகவி சுப்பிரமணிய பாரதியார் , டி.என்.சேஷாசலம், மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி, உ.வே.சாமிநாதையர், திரு.வி.க., ராஜாஜி, ஆனந்த குண போதிணி ஆசிரியர் எஸ்.ஜி.இராமானுஜலு நாயுடு, ச.ம.நடேச சாஸ்திரி, ஜி.சுப்பிரமணிய ஐயர், சேலம் பகடால நரசிம்மலு நாயுடு, வி.கே. சூரிய நாராயண சாஸ்திரி ஆகியோர் எழுதியவற்றையும், பல பத்திரிகைகள், கும்மிகள், லாவணி போன்ற பாட்டுகளில் பாடப்பட்டதையும் ஒன்றாகத் திரட்டி கொடுத்து இருக்கிறார். இந்தத் தொகுப்பில் ஒரு நூற்றாண்டிற்கு மேற்பட்டக் காலத்தில் தமிழகம் - குறிப்பாக சென்னை மாநகர் எப்படி இருந்தது என்பது தெரிகிறது. அதோடு தமிழ் வசனம் - எழுத்தாளர்களும் வாசகர்களும் எப்படி எழுதினார்கள் என்பதும் தெரிகிறது.

தமிழ்நாடு பயணக்கட்டுரைகளுக்கு ஏ.கே.செட்டியார் எழுதி இருக்கும் முன்னுரையில் இம்மாதிரியான தொகுப்புக்களின் அவசியம் பற்றி, தமிழில் இதுவரை வெளியான எல்லா நூல்களையும், பத்திரிகைகளையும் அச்சேறாத கையெழுத்துப் பிரதிக்ளையுயம், சுவடிகளையும் தமிழ் மொழி, நாடு சம்பந்தமாக மற்ற மொழிகளில் வெளியாகி இருக்கும் எல்லா நூல்களையும், பத்திரிகைக் குறிப்புக்களையும் ஒருங்கே சேர்த்துப் பாதுகாத்து, பயன்படுத்த வகை செய்யாத

வேறெந்த முயற்சியும் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கந் தருவதாகாது என்று எழுதியபடியே தனது தொகுப்பை செய்து இருக்கிறார்.

1874ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் ஜநவிநோதினியில் சென்னப்பட்டணம் அல்லது மதறாஸ் என்ற ஒரு கட்டுரையை - ஒரு நகரத்தின் வளர்ச்சி என்பது மாதிரி எடுத்துக் காட்டுகிறார்.

“தென்னிந்தியாவில் புகழ் பெற்றிருக்கும் இந்த ராஜதானி தற்காலத்தில் சற்றேறக்குறைய 13 பேட்டைகளையும், நான்கு லட்ஷம் ஜனங்களையும் உடையதாய், உலகத்திலுள்ள பட்டணங்களுள் லண்டணை விட்டு மற்றவைகளைப் பார்க்கும் போது மூன்றாவதுதென்று எண்ணத் தக்கதாயிருக்கிறது.

“இந்த பட்டணம் 250 வருடங்களுக்கு முன் சில செம்படவர் குடிசைகள் உள்ள ஒரு மணல் வெளியாய் இருந்ததென்பது சிலருக்குத் தெரிந்திருக்கலாம். இந்த மணல் வெளி பெரிய பட்டணமானதை யோசித்தால் எவருக்கும் ஆச்சரியமுண்டாகாமற் போகாது. நல்லது, இவ்விடம் கப்பல் தங்கத் தக்க இடமா? இல்லாவிட்டால் ஏதாவது பிரபலமான கைத்தொழில் நடக்கும் ஸ்தானமா? யாதொரு யோக்கியதை யுமில்லையே. மேலும், இத்தேசத்தார் பழைமையானவைகளைக் கொண்டாடும் தன்மை உடையவர்களேயன்றி புதிதாய் ஒன்றையும் செய்யும் எண்ணமேயில்லாதவர்கள்- என்பது பிரத்தியஷம். இப்படியிருந்தும் இவ்விடத்தில் நூதனமாய் ஒரு பட்டணமுண்டானதை யோசிக்கின்ற யாவருக்கும் ஆச்சரியமாயிருக்கிறது.

“இந்தப் பட்டணத்தின் பூர்வ ஸ்திதி இன்னதென்று சரியாய் ஒன்றும் வெளிப்படவில்லை. ஆயினும் மைலாப்பூர், திருவல்லிக்கேணி, இந்த இரண்டு ஸ்தலங்களும் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னமே பிரசித்தமான இடங்களா யிருந்தனவென்று அவைகளைப் பற்றிய புராணங்களால் ஒருவாறு தெரிய வருகிறதுமன்றி, பிரஞ்சு தேசத்தார் முதலிய ஐரோப்பியர் வைத்திருக்கும் சாஸனங்களாலும் விசிதமாகின்றது.”

தமிழ்நாடு பிரயாணக்கட்டுரைத் தொகுப்பின் பெரும்பகுதி சென்னைப் பட்டணம் பற்றிதான். அதுவும் ஒரு

வரலாற்று ஆசிரியன் பார்வையிலோ - சமூகவியல் ஆய்வாளர் பார்வையிலோ அன்றி - கிடைக்கும் தகவல்களை - ஏற்கனவே எழுதப்பட்டவைகளை ஒன்று திரட்டி, ஒரு நகரம் உருவாகி, தன்னை ஸ்தாபித்துக் கொண்டதை - அந்த நகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ரயில்விடப் பட்டதை, பூங்கா அமைக்கப்பட்டதை, விமானம் வந்ததை, பஸ், டிராம் ஓடியது பற்றி எல்லாம் ருசியோடு எழுதப்பட்டதை எல்லாம் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு திரட்டி கொடுத்து இருக்கிறார். அதில் தொகுப்பு ஆசிரியர் என்ற வகையில் - ஏ.கே.செட்டியார் உணர்வுகளும், தெளிவும் துல்லியமாகத் தெரிகிறது. இதனை ஒரு சாதனை என்றே குறிப்பிட வேண்டும். பெயர் பெற்றவர்களின் எழுத்தில் இருந்தும், ஊர் பெயரே தெரியாதவர்கள் எழுதியதில் இருந்தும் எது ஜீவித்துக் கொண்டு இருக்கிறதோ, அதை மட்டுமே அவர் தன் தொகுப்பில் சேர்த்துக் கொண்டு இருக்கிறார். வளர்ந்து வந்த சென்னைப் பட்டணம் எப்படி ஒவ்வொருவரையும் கவர்ந்தது என்பதும் தொகுப்பைப் படிக்கையில் தெரிகிறது.

பயணம் என்பது ஒரு தனிப்பட்ட ஒரு மனிதரின் பயணம் என்றாலும் அவர் பெறுகின்ற அனுபவம் என்பதை அவருக்கு மட்டுமே சொந்தமானது இல்லை. அது மனிதர்கள் என்று உள்ள எல்லோருக்கும் பகிர்ந்து கொள்ள பல அம்சங்களை தன்னகத்தே கொண்டு இருப்பது என்ற ஒரு நோக்கிலேயே பயணம் செய்த ஏ.கே.செட்டியார் அந்த நோக்கிலேயே தொகுப்பு நூல்களையும் தொகுத்தார்.

அவர் தொகுப்புக்களில் ஒன்றான பயணக்கட்டுரை தமிழ்நாடு. தமிழ்நாட்டில் பல பகுதிகளிலும் வாழ்ந்தவர்கள் - பயணம் செய்கிறோம் என்று தீர்மானம் இல்லாமல் பயணம் செய்தவர்களின் அனுபவம் - கப்பல் ஏறிய போது இருந்த நிலை, பஸ் பயணம், டிராம் பயணம், கோயில்களுக்கு யாத்திரை சென்றது என்று பல்வேறுதரப்பட்டவர்கள் எழுதிய குறிப்புக்களை எல்லாம் ஒன்றாகத் திரட்டி கொடுத்தார். அது வெறும் பயண நூல் என்பதற்கு அப்பால் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்நாடு வாழ்க்கை, மக்களின் மனோநிலை, சூழ்நிலை என்று பலவற்றையும் தெரிந்து கொள்ள ஏதுவாக உள்ளது. ஆவணங்கள் போல் இல்லாமல் இருக்கின்ற வாழ்க்கைக் குறிப்புகள் அதிகமான செறிவும், நிஜத்தன்மையும்

கொண்டு இருக்கின்றன. அதில் அவர்களின் மனோநிலையைத் தெரிந்து கொள்வது மாதிரி - அவர்கள் கையாண்ட ஒரு மொழியையும், அதன் வளத்தையும், செழுமையையும், கூட அறிந்து கொள்ள முடிகிறது. அவர் தொகுத்த நூலாசிரியர்களில் சிலர் சாதாரணமானவர்கள். அதாவது புலவர்களோ - எழுதி எழுதி பழக்கப்பட்டவர்களோ அல்லர். ஆனால் அனுபவத்தின் அடிப்படையில் எழுதியவர்கள். அதன் காரணமாகவே அவர்களின் மொழியில் வளமும் செழுமையும் கூடியது. இது செட்டியார் தொகுத்த பயண கட்டுரைகளில் இருந்து கிடைக்கும் அரியதொரு அம்சமாகும்.

தமிழ்நாடு - பயணக்கட்டுரைகள் தொகுப்பில் மகாகவி பாரதியாரின் இரண்டு கட்டுரைகள் இடம் பெற்று இருக்கின்றன. ஒன்று இந்தியா வரப்பத்திரிகையில் 1910ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் சென்னை நகரத்திற்கு மேல் விமானம் பறந்தது பற்றி, 'ஆகாய விமானமும் சென்னையும் என்று எழுதி இருக்கிறார். இன்னொன்று ஈரோடு சென்றது பற்றி. கட்டுரையின் தலைப்பு 'என் ஈரோடு யாத்திரை.'

"ஈரோட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். அது கொங்கு நாடு. ஆனால் அதற்கும் தென்பாண்டி நாட்டிற்கும் யாதொரு வேற்றுமையும் தென்படவில்லை. ஸ்வதேசிய நிகழ்ச்சி தோன்றிய காலம் முதலாக தமிழகத்தின் உட்பகுதிகளுக் கிடையில் உள்ள அக வேற்றுமைகள் குறைவுபட்ட காரணத்தாலே புற வேற்றுமைகளும் குறைவுபடுகின்றன. இதற்கு சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகள் பெரிதும் உதவி புரிந்தன என்பது நிச்சயம்.

"கட்டைவண்டி ஒன்று கிடைத்தது. கட்டை வண்டியில் ஒரு மனிதன் நிமிர்ந்து உட்கார இடமில்லை. ஒன்றரை அடி நீளம். மாடு ஒரு சிறு பூனைக்குட்டி போன்று இருந்தது. நான் ஒன்று. வண்டிக்குடையவன் இரண்டு. அவனுக்குக் கீழே கூலிக்கு வண்டி ஓட்டும் சிறுவன் ஒருவன்; எங்கள் மூவரையும் மூன்று பர்வதங்களாக நினைத்து அந்த மாட்டுப் பூனை இழுத்துக் கொண்டு போயிற்று.

"அரை மைல் தூரத்தில் உள்ள கருங்கல் பாளையத்தில் எனக்கு வேலை. அங்கு ஒரு சிநேகிதருடைய அழைப்பிற் கிணங்கிச் சென்றிருந்தேன். கருங்கல் பாளையத்துக்குப் போய்

சேருமுன்னே மாடு வெயர்த்துப் போய்விட்டது. அதன் மேலே குற்றம் சொல்வதில் பயன் இல்லை. அது சிறு ஜந்து. அதன் மேலே நாங்கள் மூன்று தடி மனிதரும் ஒரு கழுத்தளவுக்குச் செய்யப்பட்ட விதானத்தை உடைய வண்டியும் சவாரி பண்ணுகிறோம்.

"ஏறக்குறைய இரண்டு மணி நேரத்துக்குள்ளே கருங்கல் பாளையம் என்ற கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அந்தக் கிராமத்தில் ஆண் மக்கள் எல்லோரும் மஹாயோக்கியர்கள்; மஹா பக்திமான்கள்; புத்திகூர்மையிலும், சுறுசுறுப்பிலும் தேசாபிமானத்திலும் மிகவும் பாராட்டுக்குரியவர்கள். இவர்களுடன் ஸல்லாபம் எனக்கு எல்லா வகையிலும் இன்பமயமாக இருந்தது. அங்கே ஒரு வாசகசாலை இருக்கிறது. வாசகசாலை அதன் காரியதரிசி ஒரு வக்கீல். மிக நல்ல மனிதர். மஹா புத்திமான். தேசபக்தியில் மிகவும் பாராட்டுதற்குரியவர். அந்த வாசகசாலை அவ்வூராரை நாகரிகப்படுத்துவதற்குப் பெரியதோர் சாதனமாக விளங்குகிறது."

சுதேசமித்திரன் 4.8.1928ஆம் ஆண்டில் மகாகவி பாரதியார் எழுதியது.

நாம் எல்லா ஷேத்திரங்களுக்கும் போய் எல்லா புண்ய தீர்த்தங்களிலும் மூழ்கி எழுவதனால் என்ன பயன்? நம் மனம் தூய்மையுறாத வரையில் இவைகளினால் ஒரு பயனும் இல்லை. எல்லாம் வீண் - என்று தேவி பாகவதத்தில் இருந்துதான் தமிழ்நாடு பயணக்கட்டுரைகளே தொடங்குகிறது.

# 3. குமரி மலர்

**1943**ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஏ.கே.செட்டியாரின் குமரி மலர் - மாத இதழாக வெளிவந்தது. அது இரண்டாவது உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். அதனால் பத்திரிகை காகிதம் அச்சு, மை, போன்றவற்றுக்கு கட்டுப்பாடு இருந்தது. அரசாங்கமும் புதிய பத்திரிகைகள் வெளிவருவதை எதிர்த்தது. எனவே செட்டியார் தனது குமரிமலரை ஒரு தொகுப்பு நூலாகவே வெளியிட்டார். அவர் சிறுகதை, நாவல், கவிதை. நாடகம் போன்றவற்றுக்கு குமரி மலரில் அதிகமாக இடம் கொடுக்கவில்லை. அது ஒரு தொகுப்பு நூல் மாதிரியும் - கட்டுரைகளின் கதம்பம் மாதிரியே இருந்தது. ஆனால் ஏ.கே.செட்டியார் சிறுகதை, நாவல் போன்ற படைப்பு இலக்கியத்திற்கு விரோதி இல்லை. அவரே முதலில் சிறுகதைகள் எழுதியவர்தான்.

1928ஆம் ஆண்டில் ஆனந்தவிகடனில் கோட்டையூர் ஏ.கே.செட்டியார் என்ற பெயரில் ஒரு சிறுகதை, நகைச்சுவை கதை எழுதினார். அது வெளிநாட்டு கதை ஒன்றைப் பற்றி எழுதப்பட்டது என்றும், பின்னர் ஆனந்தவிகடனில் கல்கி இருந்த போது மேலும் தமாஷ் கதைகள் எழுதியதாகவும் குமரி மலரில் எழுதி இருக்கிறார். தாம் சம்பந்தப்பட்டவைகளைப் பற்றி அவர் குமரி மலரில் - தன்னை முன்நிறுத்தியது என்பது மாதிரி தெரியாத ஒரு விதத்தில் நிறையவே எழுதி இருக்கிறார். தான் பார்த்த இடங்களை - வெவ்வேறு காலகட்டத்தில் சென்ற போது கண்டதையும் - கேட்டததையும் பற்றி எழுதி இருக்கிறார். அப்படிப்பட்டதில் பர்மாவுக்குச் சென்றது பற்றி - ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் எழுதி இருக்கிறார். ஆனால்

ஒவ்வொரு முறையும் முன்னதின் தொடர்ச்சி இல்லாமல் - அப்பொழுதான் பார்ப்பது மாதிரி புத்தம் புதிய முறையில் எழுதி இருக்கிறார். அவர் பயணம் முழுவதும் அவராக மேற்கொண்டதுதான். அதாவது வேறு ஒரு பத்திரிகை, நிறுவனத்திற்காக அவர் பயணம் போகவில்லை.

குமரிமலர் முதல் இதழில் அக்காலத்தில் பெயர் பெற்று இருந்த பேராசிரியர்கள், கலைவிமர்சனர்கள் எல்லாம் கட்டுரை எழுதி இருக்கிறார்கள். அதில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது பேராசிரியர் எஸ்.வையாபுரி பிள்ளை அவர்கள் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையின் சரித்திர நூல்கள் பற்றி எழுதி உள்ளது. மேலும் ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் கலையும் வாழ்க்கையும் கி.சந்திரசேகரன் கலைவிளக்கம் என்ற கட்டுரையும், வீணை தனம்மாள் பற்றி ஸ்ரீமதி கனகம்மாள் எழுதிய கட்டுரைகளோடு ஏ.கே. செட்டியார் எழுதிய சென்னை நகரம் 1942 என்ற கட்டுரையும் இடம் பெற்றுள்ளன. ஸ்ரீமதி கனகம்மாள் வீணை தனம்மாள் பற்றிய கட்டுரையில் சங்கீதத்தைப் பற்றி மட்டுமல்ல அக்காலத்தில் சமுதாயத்தில் நிலவிய நிலவரங்களைப் பற்றியும் அறிய முடிகிறது. அதில் ஒன்றுதான் பெண்களிடம் சங்கீதம் கேட்பதில்லை என்று சாதாரணமான ஆண்கள் மட்டுமல்ல - பிரபலமான சங்கீத வித்வான்களும் ஒரு கொள்கையைக் கொண்டிருந்தார்கள் என்பது. பெண்களிடம் சங்கீதம் கேட்பதில்லை என்று இருந்த சரபசாஸ்தி' பின்னால் வீணை தனம்மாள் சங்கீதம் கேட்டு இன்புற்றதை சுவாரசியமாக எழுதி இருக்கிறார்.

குமரிமலரில் ஏ.கே. செட்டியார் நிறையவே எழுதி இருக்கிறார். பின்னால் அவர் புத்தகமாகப் போட்ட நூல்களின் கட்டுரை எல்லாம் குமரிமலரில் வெளிவந்ததுதான். அது போலவே தன்னைக் கவர்ந்த சம்பவங்கள், பொன்மொழிகள், அறிஞர்களின் வாக்கு - என்று ஒவ்வொன்றையும் தேர்ந்தெடுத்து வெளியிட்டு உள்ளார்.

"நூறு பேர்கள் சேர்ந்து ஒரு முகாம் அமைக்கலாம். ஆனால் ஓர் இல்லத்தை இல்லமாக்க ஒரு பெண் வேண்டும்" என்ற சீனப் பழமொழியையும்,

"எவரும் உன்னைக் கேளாதபோது பதில் சொல்லாதே. இருவர் பேசிக் கொண்டிருக்கையில் இடையில் புகுந்து எதுவும்

சொல்லாதே. ஒருவரைப் பற்றி இன்னொருவருவரிடம் குறைவாக எதுவும் சொல்லாதே. கபடமாகவும், பொய்யாகவும் புனைந்து எவரிடமும் பேசாதே'' என்று மகாவீரர் மொழிந்ததையும்

"தீயோருடன் இருப்பதைவிடத் தனிமையில் இருப்பது மேல்

தனிமையில் இருப்பதைவிட நல்லோருடன் இருப்பது மேல்

மௌனமாக இருப்பதைவிட அறிவைத் தேடுவோருடன் உரையாடுவது மேல்.

தீய சொற்கள் பேசுவதைவிட மௌனமாக இருப்பது மேல்"

என்று முகமது நபி சொன்னதையும் எடுத்து வெளியிட்டார். வாழ்க்கைக்கு நெறியையும் - அர்த்தத்தையும் கற்பிக்க அறிஞர்களின் வாழ்க்கைக்குறிப்பு அவசியம் என்ற திடமான நம்பிக்கையோடே அவர் குமரிமலரில் பல பகுதிகளை வெளியிட்டார்.

குமரிமலர் ஒரு வித்தியாசமான மாத இதழாகவே கடைசிவரை இருந்து வந்தது. அதனுடைய சிறப்பு அம்சம் என்பது வேறு எந்த பத்திரிகையும் வெளியிடத் துணியாத அம்சங்களைத் தொடர்ந்து வெளியிட்டதுதான். அதுவும் செட்டியார் தேடிப்பிடித்து படித்து, மறுபடியும் தமிழ் மக்கள் படிக்க ஒரு வாய்ப்பைத் தமது பத்திரிகை மூலம் ஏற்படுத்திக் கொடுத்தார்.

புதுச்சேரியில் கவர்னரின் துபாஷியாக இருந்த ஆனந்த ரங்கம் பிள்ளை பேச்சு மொழியில் எழுதிய- அதாவது 1740ஆம் ஆண்டில் எழுதிய டைரிக் குறிப்புக்களை அப்படியே சில பகுதிகளை வெளியிட்டார். படிப்பதற்குச் சற்று சிரமப் படுத்தும், ஆனந்த ரங்கம் பிள்ளையின் டைரி குறிப்புக்கள் - புதுச்சேரி சென்னை அரசியல் நிகழ்வுகளை அறிந்து கொள்ள ஓர் ஆவணமாக இருக்கிறது என்பதை தற்போது காலம் தீர்மானித்து இருக்கிறது.

குமரிமலரில் ராஜாஜி, வ.வே.சு.ஐயர், ஆ.மாதவையா, எஸ்.சத்தியமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், க.நா.சுப்பிரமணியம் சிறுகதைகள் எல்லாம் வெளியாகி இருக்கின்றன. அதோடு வ.உ.சிதம்பரம் பிள்ளை தமிழ் நூல்கள் பற்றிய கட்டுரையும்,

சுதேசமித்திரன் நிறுவன ஆசிரியர் ஜி.சுப்பிரமணிய ஐயர் 1883ஆம் ஆண்டில் எழுதிய முதலாவது தமிழ் அரசியல் அரிச்சுவடியான வினா-விடை நூலும் மறுபிரசுரம் செய்யப்பட்டு உள்ளது.

குமரிமலர் சிறப்பு அம்சம் - அது ஒரு ஆவணமாக இருப்பதுதான். அதோடு ஏற்கனவே ஆவணம் மாதிரி இருந்த அம்சங்களையும் அவர் மறுபிரசும் செய்து, அதனை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். குமரிமலர் கட்டுரைகளைப் படிக்கையில், நமது நம்பிக்கைகள், நம்பிக்கைகளை உருவாக்கும் அம்சங்கள் பற்றிய கருத்துக்களைத் தெரிந்து கொள்வதோடு - தமிழ் வசனம் என்பது வளர்ந்து வந்து இருப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. அதுவும் சொந்த டைரி எழுதிய புதுச்சேரி ஆனந்த ரங்கம் பிள்ளை, சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி.சுப்பிரமணிய ஐயர், பேராசிரியர் எஸ்.வையாபுரிபிள்ளை, கப்பல் ஓட்டிய சிதம்பரம் பிள்ளையின் கட்டுரைகள், பாரதியார், வ.வே.சு.ஐயர், வெ.சாமிநாத சர்மா, தி.ஜ.ர. - என்று தமிழ் வசனத்திற்கு உயிரும் வளமும் அளித்த பலரின் கட்டுரைகள் குமரிமலரில் இடம் பெற்று இருக்கின்றன.

குமரிமலர் கட்டுரைகளில் எளிமை என்பது ஓர் அம்சம் என்றால் கருத்துக் தெளிவு என்பது இன்னொரு அம்சம். சிக்கல், புரியாத வார்த்தை, மறைத்து சொல்வது என்பது எல்லாம் குமரிமலர் கட்டுரைகளில் கிடையவே கிடையாது. நேரான தொனியில் ஒரு சொல்லுக்கு ஓர் அர்த்தந்தான் என்பது மாதிரியான கருத்தோடே செட்டியார் பத்திரிகையை நடத்தி வந்து இருக்கிறார். 1943ஆம் ஆண்டில், தொடங்கி 1983 ஆம் ஆண்டு வரை - அவர் உயிரோடு இருந்த காலம் முழுவதும் பத்திரிகையின் அடிப்படைக் கொள்கையாக தெளிவும், எளிமையும் இருந்தது. இதனை பத்திரிகைத் தமிழ் என்பதற்கு மேலாக பழகு தமிழ் என்றே குறிப்பிடவேண்டும். தி.ஜ.ர., வெ.சாமிநாத சர்மா ஆகியோரைத்தான் தமிழில் ஏ.கே.செட்டியாரோடு சேர்த்துச் சொல்ல வேண்டும். மஞ்சரி ஆசிரியராக பல ஆண்டுகள் பணியாற்றிய தி.ஜ.ர. என்று அழைக்கப்படும் தி.ஜ.ரங்கநாதன் ஏ.கே.செட்டியாரின் நெடுநாளைய நண்பர். குமரி மலர் இதழுக்கு சிறுகதைகளும், கட்டுரைகளும் எழுதியவர். வெ.சாமிநாத சர்மா ரங்கூனில் இருந்து வெளிவந்த ஜோதி பத்திரிகையின் ஆசிரியர்.

செட்டியார் வெளிநாடுகளுக்கு பயணம் சென்று இருந்த போது குமரிமலர் ஆசிரியராக இருந்தார்.

புகைப்பட கலையின் தேர்ச்சி பெற்று இருந்த ஏ.கே.செட்டியார் தான் பயணம் மேற்கொண்ட நாடுகளில் கண்ட காட்சிகளைப் புகைப்படமாகவும், எடுத்து உள்ளார். அவற்றில் சில குமரி மலர் ஆண்டு மலரில் வெளி வந்து உள்ளன. சில படங்கள் அவரின் பயண நூல்களில் இடம் பெற்று இருக்கின்றன.

நாற்பதாண்டுகள் வியாபாரம் என்பதை பிரதானமாகக் கொள்ளாமல், தனக்கு உகந்தது என்று கருதிய லட்சியத்தின் அடிப்படையில் ஏ.கே.செட்டியார் குமரி மலரை வெளியிட்டு வந்தார். அதில் அவரின் லட்சியம் என்பது பொது மனிதர்களின் லட்சியந்தான். நல்ல சிந்தனை, நல்லொழுக்கம் மேலான வாழ்க்கை என்பதுதான். அதில் அவர் சமரசமே செய்து கொள்ளவில்லை என்பது முக்கியமானது.

பிரயாணம் ஆரம்பத்தில் ஒரு கல்வி. பிற்காலத்தில் அது அனுபவம் என்று பேகன் சென்னதை ஓரிடத்தில் எடுத்துப் பயன்படுத்தி இருக்கும் செட்டியார் - அதை தனது குமரி மலர் கட்டுரைகளுக்கு அடிப்படையாகக் கொண்டு இருக்கிறார். பயணம் இல்லாதது என்று சொல்லக் கூடியது எதுவும் குமரி மலரில் இடம் பெறவே இல்லை என்று கூட சொல்லிவிடலாம். படிப்புக்கு பயன் உண்டு; கருத்துக்கு விளைவு உண்டு; பயணத்திற்கு மகிழ்ச்சி மட்டும் பிரதானமானது இல்லை; அதற்கும் பயன் உண்டு என்றுதான் குமரி மலர் ஸ்தாபித்துக் கொண்டு உள்ளது.

குமரி மலர் 1943ஆம் ஆண்டு மார்ச்சில் - அதாவது இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்து கொண்டு இருந்த போது எப்படி வெளி வந்ததோ - அதே மாதிரியான அமைப்பிலேயே கட்டுரைகள் மட்டுமே பலம் என்ற முறையில் தொடர்ந்து வெளிவந்தது. அரிய கட்டுரைகளை தேடிப்பிடித்து வெளியிட்டது மாதிரியே சிரிக்கக் கூடியதும் - சிந்தனையைத் தூண்டக்கூடியதுமான கருத்துகளையும் தேடிப் பிடித்து வெளியிட்டு வந்தார்.

அரசாங்கம் இல்லையானால் நம் நாட்டில் சிரிப்பதற்கு ஒன்றுமே இல்லை என்று பிரஞ்சு அறிஞர் சாம்பேள் வாக்கை

எடுத்து சொல்கிறவர், அடுத்தபடியாக அரசாங்கத்தின் மதிப்பு நாளடைவில் அதில் அங்கம் வகிக்கும் தனி நபர்களின் தகுதியேயாகும் என்ற ஜான் ஸ்டூவர்ட் மில்லின் வாக்கை எடுத்துக்காட்டுகிறார்.

ஏ.கே.செட்டியாரின் பல பிரயாணக்கட்டுரைகள் அவரின் குமரி மலரின் பத்திரிகையில் தான் வெளிவந்தன. குறைந்த அளவில் அவர் வேறு பத்திரிகைகளிலும் எழுதி இருக்கிறார். செட்டியாரின் நெடு நாளைய நண்பரும் பத்திரிகையாளரும், நாவலாசிரியருமான கல்கி ரா.கிருஷ்ண மூர்த்தி தொடங்கிய கல்கி பத்திரிகையின் முதல் இதழில் 1943ஆம் ஆண்டில் ஐரோப்பா வழியாக என்ற கட்டுரையை எழுதினார்.

குமரிமலர் ஒரு கட்டுரை பத்திரிகையென்றாலும், அது பலருடைய கவனத்தைக் கவர்ந்தது. குறிப்பாக ராஜாஜி - அதனால் வெகுவாகக் கவரப்பட்டு இருந்தார். குமரிமலர் முதல் இதழில் ராஜாஜி எழுதாவிட்டாலும், பின்னர் எழுதினார். அதன் பெயர் பண்பாடு. மூன்றாவது குமரிமலர் இதழில் வெளிவந்தது.

குமரிமலர் நாற்பதாவது ஆண்டு கொண்டாடிய போது ஏ.கே.செட்டியார் தனது குமரிமலர் பற்றி ஒரு கட்டுரையை அதில் எழுதினார். அநேகமாக அது குமரிமலர் சாதனையைச் சொல்வது மாதிரிதான் இருந்தது. அதோடு அப்பத்திரிகைக்கு வெளியில் இருந்து வந்த ஆதரவு - அன்பர்கள் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கு நன்றி சொல்வது மாதிரி இருந்தது. அதில் தமிழகத்தில் இருந்த எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் என்று பல்வேறு துறையினரும் தொடர்ந்து எழுதி வருவதை முக்கியமாகக் குறிப்பிட்டு இருந்தார். அதில் ராஜாஜி பெயர் சிறப்பாக இடம் பெற்று இருந்தது.

ராஜாஜி குமரிமலர் முதல் இதழைப் பார்த்துவிட்டு, 'வளர்ச்சியைக் கண்டால் மனிதனுக்குச் சந்தோஷமுண்டாகிறது. தாங்கள் கேட்காமலே இதை எழுதும்படி என் உள்ளம் தூண்டிற்று' என்று எழுதி அனுப்பினார்.

ஏ.கே.செட்டியாருக்கு ராஜாஜி மீது ஈடுபாடு இருந்தது போலவே, ராஜாஜிக்கு செட்டியார் மீது அன்பு இருந்தது. அவரின் பல கட்டுரைகளை தொடர்ந்து குமரி மலர்

வெளியிட்டு வந்தது. அவற்றை எல்லாம் ராஜாஜி தொடர்ந்து படித்து வந்தார். அவர் காலமாவதற்கு முன்னால் எழுதிய கடைசி கடிதத்தில், "குமரிமலரில் எனது பழைய கட்டுரை ஒன்றைப் பிரசுரித்திருப்பதைப் பார்த்தேன். மகிழ்ச்சியடைந்தேன். நன்றி செலுத்துகிறேன். படிக்கச் சொல்லி முற்றிலும் கேட்டேன் - இவ்வளவு நல்ல கட்டுரையை எழுதியது நான்தானா என்று வியப்படைந்தேன்" என்று எழுதி உள்ளார்.

குமரிமலர் புதிதாக எழுதப்பட்ட கதை, கட்டுரைகளுக்கு இடம் கொடுத்தது மாதிரியே ஏற்கனவே எழுதப்பட்ட கட்டுரைகளை - அவற்றின் தேவை கருதி தொடர்ந்து வெளியிட்டு வந்தது. அதில் முக்கியமானவை சுதேசமித்திரன் ஆசிரியர், சுதேசமித்திரனில் எழுதிய தலையங்கங்கள், கட்டுரைகள். ஐயாயிரத்திற்கு மேல் ஜி.சுப்பிரமணிய ஐயர் எழுதிய தலையங்கங்களில் இருந்து சிலவற்றைத் தேடி எடுத்து வெளியிட்டது. அதோடு ஜி.சுப்பிரமணிய ஐயருக்காக சிறப்பிதழ் ஒன்றையும் குமரிமலர் வெளியிட்டது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கவிதைகளோடு சமூக சீர்திருத்தக் கருத்துக்களோடு எழுதிய பல கட்டுரைகள் - அவ்வப்போது வெளிவந்த பத்திரிகைகளில் யார் கண்களிலும் படாமல் மறைந்து கிடந்தன. அவற்றைத் தேடிப் பிடித்து, குமரிமலரில் செட்டியார் வெளியிட்டார். குமரி மலர் சாதனைகளில் இதனையும் ஒன்றாகக் குறிப்பிட வேண்டும். கர்மயோகி, சக்ரவர்த்தினி - ஆகிய பத்திரிகைகளில் இருந்த பாரதியாரின் கட்டுரைகளை முதன் முதலாக குமரிமலர் மறுபிரசுரம் செய்தது.

1920 ஆம் ஆண்டில் சுதேசமித்திரனில் பாரதியார் பாபநாசம் சென்றது பற்றி எழுதிய பயணக்கட்டுரையையும், அதே ஆண்டில் சுதேசமித்திரன் அநுபந்தத்தில் வெளிவந்த சுவாமி விவேகானந்தரும் பெண்களும் என்ற ஆராய்ச்சிக் கட்டுரையையும் குமரி மலர் மறுபடியும் வெளியிட்டது.

அதோடு பெண்கள் பலர் குமரிமலரில் எழுதி வந்தார்கள். திருமதி அம்புஜம்மாள், சகோதரி சுப்புலட்சுமி அம்மாள், கி.சாவித்திரி அம்மாள், குகப்பிரியை - என்று.

குமரிமலர் சிறப்பாகக் கட்டுரையில் - அதுவும் பயண இலக்கியம் என்பதில் அதிகமான அக்கறை காட்டியது

என்றாலும் - அது தன் காலத்தில் திறந்த மனத்தோடே இருந்தது. பல சோதனை எழுத்தாளர்கள் எல்லாம் எழுதி வந்தார்கள். ஒரு லட்சியத்தோடு தொடங்கி, அதே லட்சியத்தோடு நடத்தப்பட்டு வந்த குமரி மலர் பத்திரிகையைப் பார்க்கையில், தமிழ் வசனம் என்பது வளர்ந்து வந்த விதத்தையும் காண முடிகிறது. அது குமரிமலரின் சிறப்பான பங்களிப்பு என்றே குறிப்பிடவேண்டும். திட்டமிடாத ஒரு விதத்தில் - சமூகத்தில் நிகழும் மாறுதல்கள் வழியாகவே நடைபெறும் நிகழ்வின் எதிரொலி என்ற இதனைச் சொல்லலாம். ஒரு நாற்பதாண்டு காலத்தின் தமிழ் வசனத்தின் ஆவணம். சமூக சிந்தனை எந்தத் திசையில் போய்க் கொண்டிருந்தது என்பதை - ஓரளவு அறியக் கூடிய விதத்திலும் இருக்கிறது. ஆசிரியரின் சொந்த ஆசைகள் எப்படிப் பட்டதாக இருந்தாலும் - சமூகம் என்பது தன்னைத் தானே எப்படிப் பிரதிபலித்துக் கொள்கிறது என்பதை அறிந்து கொள்ள பத்திரிகை ஒரு சாதனம் என்று பார்க்கையில் - குமரிமலர் தகவல் தரும் ஆவணமாகவே இருக்கிறது. அதுவும் அதன் சமூகப் பங்களிப்பு என்று குறிப்பிட வேண்டும்.

குமரி மலர் ஆசிரியரான ஏ.கே.செட்டியார் சிறுவயதில் இருந்தே பத்திரிகையில் ஈடுபாடு இருந்தாலும் புகைப்படதுறையில் பயிற்சி பெற்று இருந்ததாலும், உலகம் முழுவதும் சுற்றி வந்திருந்தாலும் பத்திரிகையின் வளர்ச்சி, அச்சு முறை - பத்திரிகை அமைப்பு என்பதை அதிகம் அறிந்தவராகவே இருந்தார். எனவேதான் தனது குமரி மலர் பத்திரிகையில், அப்பொழுதுதான் வந்த ஆப்செட் - முறையில் படங்கள் வெளியிட்டார். அதற்கு ஒரு சான்று 1944ஆம் ஆண்டில் வெளி வந்த சிறப்பு மலர். சிறப்பு மலரில் சில சிறப்பான கட்டுரைகள் இடம் பெற்றன. அதில் முக்கியமானது டி.கே. சிதம்பரநாத முதலியார் மகன் செல்லையா என்று அறிய பட்ட தீத்தாரப்பன் எழுதிய 'சங்கீதமும் சாகீத்தியமும்' என்ற கட்டுரை அவர் மரணத்திற்குப் பிறகு முதன் முதலாக வெளிவந்தது.

வெளி உலகத்திற்கு அதிகம் தெரியாமலும் - தகவல் தொடர்பு சாதனங்கள் போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்த ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் ஏ.கே.செட்டியார் நேபாளம் சென்று வந்தது பற்றிய நீண்ட கட்டுரை. கட்டுரை

நிறைய போட்டோக்களையும் கொண்டு இருக்கிறது. ஆனால் கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளவற்றில் மாறாமல் இருப்பது கடைசியில் இடம் பெற்றுள்ள வரிகளே என்று குறிப்பிடவேண்டும். அது இதுவே. நேபாளத்தைப் பற்றி நினைக்கும் போது பசுபதிநாதரின் ஆலையமும் பனி உறைந்த சிகரங்களுமே ஞாபகத்துக்கு வருகின்றன என்பதுதான்.

ஏ.கே.செட்டியார் பத்திரிகையாளர், புகைப்பட கலைஞர், டாக்குமெண்டரி தயாரிப்பாளர் என்பதோடு பழைய புத்தகங்கள் தேடி சேகரிப்பதிலும் அவற்றை மறுபடியும் பதிப்பித்து மக்கள் முன்னே கொண்டு வருவதிலும் அதிக ஆர்வமாக உழைத்தார். பழைய பத்திரிகைகளில் கண்டெடுத்த கட்டுரைகளை எல்லாம் மறுபடியும் குமரிமலரில் வெளியிட்டார். அவருக்குக் கட்டுரைகள் மட்டுந்தான் முக்கியம் என்பதில்லை. படங்களும் முக்கியந்தான். எனவே பழைய கட்டுரைகளோடு அதில் வந்த படங்களையும் கூடவே பிரசுரம் செய்தார். எந்த ஒரு சிறிய அம்சமும் விட்டுப் போகக்கூடாது என்பது அவர் குறிக்கோளாக இருந்தது. பல ஊர்களுக்குப் பிரயாணம் செய்து பரண் மீது கிடைந்த பழைய புத்தகங்களை எல்லாம் திரட்டிக் கொண்டு வந்தார். அவற்றில் இடம் பெற்று இருந்த சுவாரசியமான அம்சங்களை மறுபடியும் வெளியிட்டார். அவருக்கு யார் எழுதியது என்பது முக்கியம் இல்லை. வெளியிட உகந்தது, படிக்க சுவாரசியமானது - என்பதுதான் முக்கியமாக இருந்தது. பல ஆண்டுகள் சென்ற பின்னர் கூட குமரிமலர் தேடிப் படிக்கக் கூடிய ஒரு பத்திரிகையாகவே இருக்கிறது.

◉

# 4. மகாத்மா காந்தி டாக்குமெண்டரி

ஏ.கே.செட்டியார் ஒரு பத்திரிகை ஆசிரியர். பர்மாவில் ரங்கூனில் தனவணிகன் - என்ற தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். பின்னர் ஜப்பானுக்குச் சென்று போட்டோ பிடிக்கும் கலையைக் கற்றுக் கொண்டார். அது உலக மகாயுத்தம் எற்படுவதற்கு சற்று முந்திய காலம். அதாவது 1935-36. சினிமாவிற்கு ஏக மதிப்பு ஏற்பட்டு இருந்தது. அமெரிக்க ஹாலிவுட் படங்கள் உலகம் முழுவதும் திரையிடப்பட்டு வெற்றிக் கொடி நாட்டி வந்தன. பத்திரிகையாளரும், புகைப்படக்கலைஞருமான செட்டியார், அமெரிக்காவிற்கு சினிமா படம் பிடிப்பதைக் கற்றுக் கொள்ளச் சென்றார். படிக்கும் போது, நியூயார்க் வந்த பிரபல நாட்டிய நடிகர் உதயசங்கரை படம் பிடித்தார். அந்தப் படப்பிடிப்பை அவர் ஒரு சிறுகதைப் போல நேர்த்தியாக எழுதி இருக்கிறார். அநேகமாக செட்டியார் எழுத்துக்கள் காட்சி ரூபமாக இருப்பதற்கு அவர் புகைப்பட கலைஞராகவும் இருந்ததும் ஒரு காரணம் என்றுதான் சொல்ல வேண்டும்.

அறநூல்களையும், சுவாமி விவேகானந்தர் போன்றவர்களையும் படித்திருந்த செட்டியார் இளம் பருவத்திலேயே மகாத்மா காந்தி பக்தராகிவிட்டார். காந்தி என்ற பெயரே அவருக்கு மந்திரச் சொல் மாதிரியே இருந்தது. அந்த பக்தியோடே உலகத்திலேயே மகாத்மா காந்தி பற்றி முதன் முதலாக சினிமா எடுத்தவர். காந்தியைப் பற்றிய முதல் சினிமா என்பதோ - இந்தியாவில் தனிப்பட்ட ஒருவரைப் பற்றிய முழு நீள டாக்குமெண்டரி படமும் அவர் எடுத்ததே.

1937ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி சினிமா படம் எடுக்கத் தொடங்கிய ஏ.கே.செட்டியார் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு அதே வேலையாக இருந்து 1940ஆம் ஆண்டில் சென்சார் முடித்து, சினிமாவை தமிழ் விளக்க உரையுடன் வெளியிட்டார், பின்னர் ஆங்கிலம், தெலுங்கு மொழிகளில் வெளியிட்டார். மகாத்மா காந்தி சபர்மதி ஆசிரமக் காட்சிகளும் அதில் உண்டு.

மகாத்மா காந்தி பக்தரான ஏ.கே.செட்டியார் 1937ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி அமெரிக்காவில் நியூயார்க்கில் இருந்து, அயர்லாந்து டப்ளினுக்குச் செல்லும் சமரியா என்ற கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அது மகாத்மா காந்தி பிறந்த தினம். அதனை நியூயார்க்கில் செட்டியாரின் இந்திய நண்பர்கள் ஏற்பாடு செய்து இருந்தார்கள். அதில் கலந்து கொள்ள முடியாமல் போனதால் - என்ன செய்யலாம் என்று யோசித்த அவருக்கு காந்தி ஜெயந்தியை கப்பலிலேயே கொண்டாடலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. அந்தக் கப்பலில் அவரோடு இன்னொரு இந்தியர் மட்டும் இருந்தார். அவரிடம் இந்த யோசனையைத் தெரிவித்ததும் அவரும் சரி என்றார். மேலும் சில அமெரிக்கர்களும் காந்தி ஜெயந்தி கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள முன் வந்தார்கள். இந்திய உணவோடு சமரியா கப்பலில் காந்தி ஜெயந்தி கொண்டாடி முடித்த பின்னர் செட்டியாருக்கு, மகாத்மா காந்தி பற்றி ஒரு சினிமா எடுக்கும் எண்ணம் திடீரென்று தோன்றியது. அதனை எப்படி டாக்கு மெண்டரியாக தயாரிப்பது என்பது பற்றி இரவு முழுவதும் யோசித்து முடிவு செய்து கொண்டார். காலையில் எழுந்ததும், காந்தி ஜெயந்தியை கொண்டாட ஒத்துழைத்த இந்திய நண்பரிடம் கலந்து பேசினார். நீண்ட நேரம் விவாதித்து ஒரு திட்டம் தயார் செய்தார். அதை எல்லாம் சிறு காகிதத்தில் குறித்துக் கொண்டார். பின்னால் மகாத்மா காந்தி படம் முடிந்த பிறகு, அதைப் பற்றி நினைவு கூர்ந்து எழுதுகையில், அந்தச் சிறு காகிதம்தான் காந்தி சரித்திரப் படத்தின் மூலாதாரம் என்று குறிப்பிட்டு உள்ளார்.

மகாத்மா காந்தி பற்றிய ஒரு முழு நீள சினிமா படத்தை தயாரிக்க முடியும் என்று சினிமாவோடு சம்பந்தப்பட்ட யாரும் நினைக்கவில்லை. அதுவும் டாக்குமெண்டரி சாத்தியமே

இல்லை என்றுதான் நினைத்தார்கள். ஆனால் செட்டியார் தன் தீர்மானத்தில் உறுதியாக இருந்தார். உலக முழுவதும் அதற்காக அலைந்தார். பல சினிமா கம்பெனிகளுக்குச் சென்று பட லைப்ரரிகளில் தனக்குத் தேவையான படம் கிடைக்கிறதா என்று பார்த்தார். ஐரோப்பாவில் ஒரு சுற்றுச்சுற்றிவிட்டு, இந்தியாவுற்கு வந்தார். அப்பொழுது காங்கிரஸ் மாநாடு திரிபுராவில் நடைபெற்றது. அதற்குச் சென்றார். பின்னர் இந்திய சினிமா கம்பெனி முதலாளிகளைப் பார்த்து, தனது யோசனையையும், மகாத்மா காந்தி பற்றி டாக்குமெண்டரி சினிமா எடுப்பது பற்றியும் கூறினார். ஆனால் பலருக்கும் அது சரியான யோசனையாகப் படவில்லை. சென்னையிலும் கூட அவருக்கு ஆதரவு கிடைக்கவில்லை. வெளிநாடுகளில் படித்த இளைஞனின் கனவுக்கோட்டை என்றே அவர் யோசனைகளைப் பற்றி சினிமா தெரிந்தவர்கள் எண்ணினார்கள். ஆனால் செட்டியார் மகாத்மா காந்தி பற்றி முழு நீளபடம் எடுப்பது என்பதில் உறுதியாக இருந்தார். அது காரணமாகத் தனக்கு வந்த வேலைகளை கூட அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. முழுமூச்சாக டாக்குமெண்டரி சினிமா தயாரிப்பதில் இருந்தார். அதற்காக டாக்குமெண்டரி பிலிம்ஸ் என்ற கம்பெனி ஸ்தாபிக்கப் பட்டது. செட்டியாரோடு திரு.லெ.நடேசன், மு.அழ.அழகப்ப செட்டியார், க.சா.அ.அ. சம்பந்த செட்டியார், குண்டூர் நரசிம்ம ராவ், பி.வி.பதி, பி.சுப்பிரமணியம், சு.வீர.வீரப்ப செட்டியார் முதலியோர் காந்தி பட தயாரிப்பில் முக்கியமான இடம் பெற்றவர்கள் என்று, ஓரிடத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்.

டாக்குமெண்டரி பிலிம்ஸ் ஏற்படுத்தப்பட்ட பின்னர் அவர் பணிகள் தீவிரமடைந்தன. மகாத்மா காந்திய பற்றிய செய்திப்படங்கள் பம்பாய், கல்கத்தா, புனே - என்று செய்திப் படங்கள் தயாரிக்கும் இடங்களுக்கு எல்லாம் சென்று தேடினார். பின்னர் வெளிநாடுகளுக்கு கப்பலிலும், விமானத்திலும் ஐந்து மாதங்கள் சுற்றினார். பழைய செய்தி படங்களை அவர் தேடியபோது குப்பைகளை என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டுவிட்டு, சிலர் அவரை ஸ்டுடியோக்களுக்குத் தேடிக் கொள்ளவிட்டார்கள். ஆனால் அவர்கள் குப்பை என்று சொல்லியதில் அவருக்கு சில அபூர்வமான காட்சிகள் கிடைத்தன.

முதல் ஆண்டில் இந்தியாவிலும், பிறநாடுகளிலும் தேடி கண்டுபிடித்த மகாத்மா காந்தி படத்தைப் போட்டுப் பார்த்தார். அது ஒரு முழு நீள படத்திற்குப் போதுமானதாக இல்லை. எனவே மறுபடியும் மகாத்மா காந்தி பற்றி செய்திப் படங்களைத் தேடிக் கொண்டு ஐரோப்பாவிற்குச் செ...றார். இப்பயணத்தில் முப்பதுக்கு மேற்பட்ட படக் கம்பெனிகளில் இருந்து காந்தி படத்தோடு இணைந்து போகக்கூடிய காட்சிகள் கொண்ட செய்திப்படங்கள் கிடைத்தன.

தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தியோடு சேர்ந்து உழைத்த ஸ்ரீபோலக் என்பவரை, ஏ.கே.செட்டியார் லண்டனில் சந்தித்தார். அவரிடம் மகாத்மா காந்தி பற்றி ஒரு முழுநீள சினிமா படம் தயாரித்துக் கொண்டு இருப்பது பற்றி கூறினார். அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த ஸ்ரீபோலக் உள்ளே சென்று ஒரு பழைய தகரடப்பாவை எடுத்து வந்து 200 அடிகள் கொண்ட சினிமா படத்தின் பாசிட்டிவ் காபியைக் கொடுத்தார்.

1912ஆம் ஆண்டில் கோபாலகிருஷ்ண கோகலே தென்னாப்பிரிக்கா விஜயம் செய்த போது காந்தி அவரைச் சந்தித்து பேசினார். அதை சினிமாவாக எடுத்து வைத்திருந்தார்கள். அதன் ஒரு காபியை ஸ்ரீபோலக் பாதுகாத்து வைத்திருந்தார். அதுவே அவர் செட்டியாரிடம் கொடுத்தது. அதனை திரையிட்டுப் பார்த்தார்கள். படம் நல்ல நிலையிலேயே இருந்தது. அதை 27 ஆண்டுகளாக ஸ்ரீபோலக் பாதுகாத்து வைத்திருந்து இருக்கிறார். ஐரோப்பிய உடையில் காந்தி இருக்கும் காட்சிகளைக் கொண்ட படம் அது. அரிய பொக்கிஷம் கிடைத்தது மாதிரி மகிழ்ச்சியடைந்த செட்டியார், இப்படத்தை காப்பாற்றி இந்தியர்களுக்கு அளித்த ஸ்ரீபோலக்குக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம் என்று எழுதி இருக்கிறார். ஆனால் பிற பிரிட்டிஷ் சினிமா கம்பெனிகளில் இருந்து அவருக்கு போதுமான ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. மகாத்மா காந்தி படத்துடன் இணைந்து போகும்படியான காட்சிகளை வைத்திருந்த கம்பெனிகள், ஒன்று அதிகமாக விலை கூறின. அவர் அதிக விலை கொடுக்க தயாரான போது, விற்பனைக்கு இல்லையென கைவிரித்து விட்டன. காந்தியின் லண்டன் விஜயம் பற்றிய படங்களைத் திரட்டிக் கொண்டு போய் அவர்களுக்கு விரோதமாகக் காட்டிவிட கூடும் என்று பயந்தார்கள். எனவே காந்தியின்

லண்டன் விஜயம் பற்றிய படக்காட்சிகளை பிறநாடுகளில்தான் வாங்க முடிந்தது.

ஏ.கே.செட்டியாருக்கு மகாத்மா காந்தி படம் தயாரிப்பில் இங்கிலாந்தில் போதுமான ஆதரவு கிடைக்கா விட்டாலும், பிரான்சில் முழு ஒத்துழைப்புக் கிடைத்தது. அதுவும் பிரபலமான எக்லார் டிராஸ் என்ற செய்திப் படநிறுவனம் அவருக்குத் தேவையான படங்களை எல்லாம் கொடுத்து உதவியது. இந்த பிரான்ஸ் பயணத்தில்தான் அவர் புகழ் பெற்ற பிரஞ்சு எழுத்தாளரான ரோமன் ரோலந்தைச் சந்தித்தார். நோபல் பரிசு பெற்ற அவர் மகாத்மா காந்தியின் வாழ்க்கையை பிரஞ்சு மொழியில் எழுதியவர். அது பல ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு இருந்தது. செட்டியாருக்கு மகாத்மா காந்தி பற்றி பிரஞ்சு மொழியில் எழுதி இருக்கும் புகழ்பெற்ற எழுத்தாளரான ரோமன் ரோலந்து, சினிமா படத்தில் இடம் பெற வேண்டுமென்பது ஆசை. அதற்காக அவர் வீட்டிற்குச் சென்று பார்த்தார். ரோமன் ரோலந்துக்கு பிரஞ்சு மட்டுமே தெரியும். ஆங்கிலம் தெரியாது. பேச்சு அவர் மனைவி, சகோதரி மூலமாகவே நடைபெற்றது.

மகாத்மா காந்தி படத்தில் ரோமன் ரோலந்து தோன்ற மறுத்துவிட்டார். தன் உருவத்தைக் காட்டாமல் - குரலை மட்டும் பதிவு செய்து கொள்ளும் படி கூறிவிட்டார். அதற்குக் காரணம், சினிமாவில் தோன்றும் அளவிற்கு தனக்கு முகவெட்டு இல்லை என்று நினைத்தார்.

அவர் மனைவி, சகோதரி ஆகியோர் உதவியோடு ரோமன் ரோலந்து மனத்தை மாற்றி சம்மதிக்க வைத்து, பிரான்ஸின் பிரபலமான செய்திப் பட காமிராக்காரரான சார்லஸ் மேத்தானைக் கொண்டு, அவர், காந்தி பற்றி சொன்னைதைப் படம் பிடித்துக் கொண்டார்.

ஐரோப்பாவில் இருந்து, மகாத்மா காந்தி படம் பிடிக்கும் விவரங்களோடு நியூயார்க் சென்றார். இங்கு பலரின் ஒத்துழைப்பு தாராளமாகக் கிடைத்தது. நியூயார்க் நூலகத்தைச் சேர்ந்த பிரிஹாவர், காந்தி பற்றி பல்வேறு ஐரோப்பிய மொழிகளில் வெளிவந்துள்ள 200க்கு மேற்பட்ட நூல்களை திரட்டி வைத்திருந்தார். அவற்றை சினிமாவாக எடுத்துக் கொள்ள செட்டியாருக்கு அனுமதி கொடுத்தார். அதோடு

அமெரிக்க தலைநகரான வாஷிங்டனில் உள்ள நூலகத்தில் இருக்கும் காந்தி பற்றிய புத்தகங்களையும் படம் பிடித்துக் கொள்ள உதவி செய்தார்.

அமெரிக்காவில் மகாத்மா காந்தி சினிமா படப்பிடிப்பு வேலைகளை முடித்துக் கொண்டு ஏ.கே.செட்டியார் பிரிமென் என்ற பிரம்மாண்டமான ஜெர்மன் கப்பலில் இங்கிலாந்து வந்தார். அங்கிருந்து தென்னாப்பிரிக்கா செல்ல வேண்டும். ஆனால் அவருக்கு கப்பலில் டிக்கெட் கிடைக்கவே இல்லை. சில நாட்கள் காத்திருந்து, பிறகு ஒரு வழியாக டிக்கெட் வாங்கிக் கொண்டு தென்னாப்பிரிக்காவில் உள்ள கேப்டவுனுக்கு வந்தார்.

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில்தான் ஒரு சத்தியாகிரகியாக உருவானார். சுதந்திரப் போராட்டத்திற்கென அவர் ஸ்தாபித்த பீனிக்ஸ் குடியேற்றம் உள்ள ஜோகன்ஸ்பர்க் சென்றார். அங்கு காந்தியோடு சேர்ந்து உழைந்த பலர் இருந்தார்கள். அவர்களிடம் இருந்து முதல் சத்தியாகிரகப் போராட்டம் பற்றி தெரிந்து கொண்டார்.

மகாத்மா காந்தியை வெகுவாக பாதித்தவர்களில் ஒருவர் ரஷ்ய ஞானியான டால்ஸ்டாய். எழுத்தாளர் என்று புகழ் பெற்று இருந்த அவரை வெகு காலத்திற்கு முன்னாலேயே ஏழைகளின் பங்காளராக – துயருற்ற மக்களின் ஆதரவாளராகக் கண்டார் காந்தி. எனவேதான் தான் ஜோகன்ஸ் பர்க்கில் ஏற்படுத்திய பண்ணைக்கு டால்ஸ்டாய் பண்ணை என்று பெயரிட்டார். இருவருக்கும் இடையில் பல ஆண்டுகள் வரையில் கடிதத் தொடர்பு இருந்து வந்தது.

செட்டியார் மகாத்மா காந்தி படப்பிடிப்புக்காக ஜோகன்ஸ் பர்க், டால்ஸ்டாய் பண்ணைக்குச் சென்ற போது காந்தியின் தோழரான சிற்பி ஸ்ரீகாலன்பாக் உடன் இருந்து வேண்டிய உதவிகளைச் செய்தார். தென்னாப்பிரிக்காக் காட்சிகளை அவர் படம் பிடித்துக் கொண்டு இருக்கும் போது, இரண்டாவது உலக மகா யுத்தம் தொடங்கிவிட்டது.

ஏ.கே. செட்டியார் கப்பல் ஏறி இந்தியா திரும்பி வந்தார். காந்தி படச் சுருள் கிடைக்குமா என்று நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று தேடினார். கிடைத்தவற்றை பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டார். மகாத்மா காந்தி தண்டி யாத்திரையைப் பற்றி நேரடியாக படம் எடுத்த ஒருவர் ரொம்ப

பண நெருக்கடியான நேரத்தில் அதை கொண்டு வந்து செட்டியாரிடம் கொடுத்தார். அவருக்கு அதில் சில அடிகள் மட்டுமே தேவைப்பட்டது. அதை மட்டுமே பணம் கொடுத்து வாங்கிக் கொண்டு - மீதி படச் சுருளை வைத்துக் கொண்டு இருங்கள். நல்ல விலை கிடைக்கும் என்று சொல்லி அனுப்பினார். ஆனால் அவருக்கோ உடனடியாகப் பணம் தேவை. பணக்கஷ்டம் காரணமாக எந்த விலைக்கும் அபூர்வமான – கிடைக்காத படச்சுருளை விற்க அவர் தயாராக இருந்தார். 'நான் தான் அதை வாங்கிக் கொள்ளவில்லை. அவர் கஷ்டத்தை எனக்குச் சாதகமாக்கிக் கொள்ள விரும்பவில்லை' என்று பின்னால் ஒரு நாள் குறிப்பிட்டார்.

செட்டியாரின் மகாத்மா காந்தி பட தயாரிப்பில் பிரதான கேமிராமேன் பிரான்ஸில் படித்த பி.வி.பதி. சிறந்த ஒளிப்பதிவாளர். ஆந்திராவில் பிறந்தவர். சென்னையில் வாழ்ந்தவர். காவேரியைப் பற்றி பொன்னி என்ற பெயரில் ஒரு டாக்குமெண்டரியை தயாரித்து உள்ளார். அவரை அழைத்துக் கொண்டு காந்தி வசிக்கும் சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்றார். அங்கு படம் படிக்க அனுமதிக்கவில்லை. சில மாதங்கள் செட்டியார் காத்துக் கொண்டு இருந்தார். காந்தி இல்லாமல் எப்படி காந்தி படத்தை முடிப்பது அதுதான் அவர் கவலையாக இருந்தது.

மகாத்மா காந்தி காமிராவிற்காக நிற்பதே இல்லை. அதோடு சாதாரணமாக அவர் வேகமாக நடக்கக் கூடியவர். அப்புறம் அவரைச் சுற்றிலும் ஒரே கூட்டம். எப்பொழுதும் ஆட்கள் இருந்து கொண்டே இருந்தார்கள். காமிராவைக் கண்டதும், தாங்கள் வர வேண்டும் என்று முன்னே தலையை நீட்ட ஆரம்பித்தார்கள். அதனை எல்லாம் மீறி காந்தியை தனியாகப் படம் எடுப்பது பெரிய சாதனையாகவே இருந்தது.

சபர்மதி ஆசிரமத்தில் இருக்கும் போதெல்லாம் மகாத்மா காந்தி காலைப் பொழுதில் 'வாக்' வருவார். அதனை படம் பிடிக்கலாம் என்று தீர்மானித்த செட்டியார், படப்பிடிப்புக் குழுவோடு காலைப் பொழுதில் காந்தி, 'வாக்' வரும் வழியில் வசதியான இடத்தில் நின்று கொண்டார்கள்.

ஒளிப்பதிவாளர் பி.வி.பதியிடம் ஏ.கே. செட்டியார் காட்சியை விளக்கிச் சொன்னார். அதாவது மகாத்மா காந்தி

'வாக்' வருவதை தூரத்தில் இருந்தே படம் பிடித்துக் கொள்ள வேண்டும். பிறகு சிறிது அருகில் வந்ததும், நான் வணக்கம் என்று சொல்லுவேன். அதற்கு காந்தி பதில் வணக்கம் சொன்னால் - காந்தியை மட்டும் படம் பிடிக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் என்னைப் படம் பிடிக்கக் கூடாது என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்.

தொலைதூரத்தில் ஒரே பாபரப்பு. காந்தி 'வாக்' வருகிறார். அவர் கூட ஐந்தாறு ஆட்கள். வேகமாக நடந்து வரும் காந்தி எதிரில் வரும் ஆட்களைப் பார்த்ததும், அநேகமாக தயிர்க்காரிகள், குடியானவர்களை எல்லாம் பார்த்து பார்த்து முதலில் நமஸ்தே சொல்லிக் கொண்டே வருகிறார். கையெடுத்தும் அவரே கும்பிடுகிறார். காந்தி நடந்து வரும் காட்சியையும் - வணக்கம் தெரிவிக்கும் காட்சியையும் படம் பிடித்துக் கொள்கிறார்கள். அந்தச் சம்பவத்தைப் பற்றி ஏ.கே.செட்டியார், 'எனக்கு மகாத்மாவைப் பார்த்து சினிமாவுக்காக வணக்கம் என்று கையெடுத்துக் கும்பிட அவசியம் இல்லாமல் போய்விட்டது' என்றார்.

இத்தனை கஷ்டங்களுக்கு இடையில் தான் அவரின் மகாத்மா காந்தி சினிமா படம் தயாரிக்கப்பட்டது. அதில் சில அருமையான காட்சிகள் அமைந்துவிட்டது என்று அவரே சந்தோஷப்பட்டுக் கொள்கிறார். அதற்கு முற்றிலும் தகுதிவாய்ந்தவர் என்றே குறிப்பிட வேண்டும்.

1940ஆம் ஆண்டில் முடிவடைந்த மகாத்மா காந்தி சினிமா பற்றி ஏ.கே. செட்டியார் பின்வருமாறு எழுதி உள்ளார்:

"மொத்தம் எடுக்கப்பட்ட சுமார் 50,000 அடி நீளமுள்ள படங்களிலிருந்து சுமார் 12,000 அடி நீளமுள்ள ஒரு தொடர்ச்சியான படம் தயாரித்து இருக்கிறோம். படத்தை இத்தகைய நீளத்திற்குக் கொண்டு வர சுமார் மூன்று வருஷங்கள் ஆயிற்று. இவைகளைச் சேகரிக்க நான்கு கண்டங்களில் ஏறக்குறைய லஷம் மைல் பிரயாணம் செய்திருக்கிறேன். உலகம் முழுமையிலும் கடந்த 30 வருஷங்களாக சற்றேரக்குறைய 100 காமிராக்காரர்கள் எடுத்த படங்களின் சேகரிப்பு இது. செய்திப்பட சம்பிரதாயத்தைக் கொண்டு ஒரு தனிப்பட்ட மனிதரின் வாழ்க்கையை அவரது வாழ்க்கையின் சம்பவங்கள் மூலமாக சித்தரிக்கும் ஒரு முழு நீளமுள்ள சரித்திரப்படம் முதன்

முதலாக தயாரிக்க்ப்படுவது இதுதான் என்பது என் நம்பிக்கை. ஒரு மனிதரைப் பற்றி முழு நீளப் படம் தயாரிக்க வேண்டுமென்றால் இந்தியாவில் காந்திஜியைத் தவிர வேறு எவரைப் பற்றி தயாரிக்க முடியும்?"

ஏ.கே.செட்டியார் புதுமை விரும்பி. பத்திரிகை யாளரான அவர் புகைப்பட கலையைக் கற்றுக் கொண்டார். பின்னர் மகாத்மா காந்தி பற்றி ஒரு முழு நீள சினிமா படம் தயாரித்தார். சினிமா என்பது தோன்றி குறைந்த காலமே ஆகி இருந்தாலும் - அது மிகப் பெரிய சக்தி வாய்ந்த சாதனம் என்பதை அறிந்து கொண்டு செயல்பட்டவர்களில் ஒருவர் அவர். டாக்குமெண்டரி எடுத்து அதை நிலை நாட்டியது போலவே சினிமா பற்றியும் - குறிப்பாக டாக்குமெண்டரி பற்றியும் எழுதி இருக்கிறார். 'திரையும் வாழ்க்கையும்' என்பது 1943ஆம் ஆண்டில் வெளி வந்த நூல். அவரின் பிற நூல்கள் மாதிரியே சுருக்கமாகவும் சுவாரசியமாகவும் உள்ள கட்டுரைகளைக் கொண்டது. தன்னுடைய மகாத்மா காந்தி சினிமா படத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி உள்ளதோடு - அமெரிக்காவில் 1937ஆம் ஆண்டில் பிரபல பிரஞ்சு எழுத்தாளர் எமிலி சோலா வாழ்க்கையைச் சொல்லும் படத்தைப் பார்த்துவிட்டு விமர்சனம் மாதிரியும் - சினிமாவின் சக்தி என்பதைச் சொல்வது மாதிரியும் ஒரு கட்டுரை எழுதி உள்ளார். அதோடு சினிமா பற்றியும் சிறப்பாக எழுதி உள்ளார்.

"மக்களுடைய வாழ்க்கையில் சினிமா ஒரு நிரந்த ஸ்தானத்தைப் பெற்றுவிட்டது. நிரந்தரம் மட்டுமல்ல, முக்கியமான ஸ்தானத்தையும் பெற்றுவிட்டது.

"டெலிவிஷன் அபிவிருத்தியானால் சினிமா கலை மறைந்துவிடும் என்று சிலர் கருதுகிறார்கள். அது முற்றிலும் தவறு. டெலிவிஷன் அபிவிருத்தியினால் ஒரு வேளை சினிமாவின் முக்கியத்துவம் குறையலாம். ஆனால் சினிமாவின் நிரந்தர ஸ்தானம் ஒரு பொழுதும் பாதிக்கப்பட மாட்டாது.

"சினிமாவுக்குப் பதிலாக டெலிவிஷன் வராது. ஆனால் சினிமாவுடன் டெலிவிஷனும் வளரும்.

"சினிமாவினால் நாடக்கலை மறைந்துவிடவில்லை. அதைப் போல டெலிவிஷனால் சினிமா கலை மறைந்து

விடாது" - என்று திரையும் வாழ்வும் என்ற கட்டுரையில் சொல்லும் ஏ.கே.செட்டியார் மேலும் சொல்கிறார்.

"சினிமா லட்சக்கணக்கான மக்களுடைய கவலையை மாற்றுகிறது. கோடிக்கணக்கான மக்களுக்கு சந்தோஷமான பொழுதைக் கொடுக்கிறது. சம்பந்தப்பட்ட நூற்றுக்கணக்கான தொழில்களுக்கு ஆதரவளிக்கிறது. லட்சக்கணக்கான மக்களுக்கு வேலையைக் கொடுக்கிறது. பல கலைகளை வளர்க்க உதவுகிறது. ஒரு நாட்டுக் கலையை மற்ற நாடுகளுக்கு எடுத்துக் காட்டுகிறது.

சினிமா ஒரு கலையா? என்று சிலர் வினவக்கூடும். சினிமா நிச்சயமாக ஒரு கலைதான். சந்தேகமே கிடையாது. நான் ஒன்றை நேரில் பார்ப்பதற்கும் அதனை சினிமாவில் பார்ப்பதற்கும் ஒரு குறிப்பிட்ட வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசமே சினிமாவை ஒரு கலையாகச் செய்கிறது. இதனை நம்புங்கள். இல்லையானால் உலகிற் சிறந்த டைரக்டர்களில் ஒருவரான புதோவ்கின் என்ற ரஷ்யரைக் கேளுங்கள்" என்று 1943ஆம் ஆண்டிலேயே சொல்லும் மகாத்மா காந்தி செய்திப் படம் எடுத்த ஏ.கே.செட்டியார்க்கு அதை முடிக்க மூன்றாண்டுகள் பிடித்தது. அதாவது 1937ஆம் ஆண்டில் தொடங்கிய பணியை 1940ஆம் ஆண்டில் முடித்தார்.

மகாத்மா காந்தி முழு நீள செய்திப் படம். அதற்கு சென்சார் உண்டு. இரண்டு உறுப்பினர்கள் மகாத்மா காந்தி படத்தைப் பார்த்தார்கள். ஒருவர் பிரபல டாக்டரான யு.கிருஷ்ணா ராவ். இன்னொருவர் இந்து பத்திரிகை ஆசிரியர் கஸ்தூரி சீனிவாசன். சினிமா படத்தில் ஆட்சேபகரமான பகுதிகள் ஏதுமில்லை - அது எல்லோரும் பார்க்கக் கூடிய படம் என்பதற்காக யூ - சான்றிதழ் கொடுத்தார்கள்.

அது யுத்த காலமாகியதால், காங்கிரஸ் பிரிட்டிஸாரை எதிர்த்து, யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் - யுத்த எதிர்ப்பில் இருந்தார்கள். இந்த சமயத்தில் மகாத்மா காந்தி பற்றிய படம் வெளிவருவது பற்றி அரசாங்கம் விரும்பவில்லை. ஆனால் சென்சார் போர்டை ஒன்றும் செய்ய முடியாதால், மகாத்மா காந்தி படத்திற்கு வெட்டு எதும் இல்லாமல் திரையிட அனுமதி கொடுத்த இரண்டு சென்சார் போர்டு உறுப்பினர்களையும் பதவியில் இருந்து ஒதுக்கியடித்துவிட்டார்கள். பதவி

பறிக்கப்பட்ட இரண்டு சென்சார் போர்டு உறுப்பினர்களும் சந்தோஷப்பட்டார்கள். அதில் டாக்டர் யு.கிருஷ்ணாராவ், சிறிதளவு தேச சேவை செய்தற்காக அரசாங்கம் கொடுத்திருக்கும் வெகுமதியைப் பெற்றுக் கொள்வதாக பின்னால் குறிப்பிட்டார்.

மகாத்மா காந்தி சினிமா படம் முழுக்க முழுக்க ஏற்கனவே எடுக்கப்பட்ட படங்களின் தொகுப்பு இல்லை. அதில் பல காட்சிகளை செட்டியார் நாட்டின் சில பகுதிகளில் ஏற்பாடு செய்து, தன் படத்தில் சேர்த்துக் கொண்டார். கோயம்புத்தூரில் ராட்டையில் நூல் நூற்கும் காட்சி ஒன்றுக்கு, தான் ஏற்பாடு செய்து கொடுத்தாக தியாகி கோவை அய்யாமுத்து தனது சுயசரிதையில் எழுதி இருக்கிறார். "சினிமா, அதிர்ஷ்டவசமாக மனித சமூகத்துக்குக் கிடைத்த ஒரு நல்ல சாதனம். அந்தச் சாதனத்தை ஒரு சிலர் தீய வழிகளில் உபயோகிப்பதைப் பார்த்து சினிமாவே வேண்டாமென்று கூறுவது அறிவுடைமாயாகாது. மிக்க கேவலமான புத்தகங்கள் வெளியாவதால் புத்தகமே படிக்கக்கூடாது என்று கூறுவது நியாயமாகுமா?

"அதைப் போலவேதான் சினிமாவும். நல்ல சாதனத்தைச் சிறந்த வழியில் உபயோகித்துக் கொள்வது நமது கடமை" என்று எழுதி இருக்கும் ஏ.கே.செட்டியார் அப்படியே செயல்பட்டார். அதுவும் மக்கள் தலைவரும், சினிமா என்பதை பார்த்தே அறியாத மகாத்மா காந்தியைப் பற்றி சினிமா எடுத்து அதைச் சாத்தியமாக்கினார்.

ஏ.கே.செட்டியார் தயாரித்த மகாத்மா காந்தி டாக்குமெண்டரி படம் முடிந்து, 1940ஆம் ஆண்டில் சென்சார் சான்றிதழ் வழங்கப்பட்டது. அதாவது சினிமா திரையரங்குகளில் வெளியிடலாம் என்பது. ஆனால் அப்பொழுது இருந்த நிலவரம் நாட்டில் மகாத்மா காந்தி டாக்குமெண்டரி படத்தை வெளியிடக் கூடியதாக இல்லை. சில சினிமா திரையரங்குகளில் திரையிட செட்டியார் முயற்சி செய்து பார்த்தார். அதில் பலன் ஒன்றும் கிடைக்கவில்லை. என்ன செய்யலாம் என்று தனது அலுவலகத்தில் பல நாட்கள் அவர் யோசனையோடு காத்திருந்தார்.

ஒரு நாள் செட்டியார் திரைப்பட அலுவலகத்திற்கு வட இந்தியாவை சார்ந்த ஒருவர் வந்தார். தன்னை சென்னை

அயனாவரம் சயானி திரையரங்கு அதிபர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். பிறகு மகாத்மா காந்தி பற்றிய டாக்குமெண்டரி படத்தை தங்கள் திரையரங்கில் வெளியிட ஆவலாக உள்ளதாகவும் - அதற்கு படத்தைக் கொடுத்து உதவவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அதோடு பிற சினிமா அரங்கில் டாக்குமெண்டரி காட்டுவதை விட - தங்கள் திரையரங்கில் முதலில் காட்டும்படியாக படம் தரவேண்டும் என்றார். அவர் ஆர்வம் செட்டியாரை வெகுவாகக் கவர்ந்தது. என்ன விலை கொடுத்தாலும் சரி தங்கள் தியேட்டரில் படம் முதலில் வெளியாக வேண்டும் என்பதில் குறியாக அவர் இருந்தார். அதற்கான காரணம் பற்றி வினவிய போது அவர் சொன்னார்: நாங்கள் மகாத்மா காந்தி பிறந்த போர்பந்தர் நகரைச் சார்ந்தவர்கள். வியாபார விஷயமாக எங்கள் குடும்பத்தினர் சென்னை வந்துவிட்டார்கள். என் சகோதரி இன்னும் போர்பந்தரில் இருக்கிறாள். அவள்தான் மகாத்மா காந்தி டாக்குமெண்டரியைப் பற்றி பத்திரிகையில் படித்துவிட்டு எனக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதில் அவள் குறிப்பிட்டு இருக்கிறாள், மகாத்மா காந்தி பற்றிய படம் நமது தியேட்டரில் முதலில் வெளிவரவேண்டும். அதற்கு என்ன வேண்டுமானாலும் செய் என்று. அவள் போர்பர்ந்தரில் போலீஸ் அடக்குமுறையை எல்லாம் நேரில் பார்த்தவள். எங்களுக்கு சகோதரியின் வேண்டுகோளை மீற முடியாது" என்றார்.

மகாத்மா காந்தி டாக்குமெண்டரி படம் பிறகு தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் - ஆந்திராவிலும் காட்டப்பட்டது. இந்திய முதல் சுதந்திர தினமான ஆகஸ்ட் 15ஆம் தேதி அன்று மகாத்மா காந்தி டாக்குமெண்டரியை தேசிய தலைவர்களுக்குக் காட்ட வேண்டுமென்ற விருப்பம் கொண்டார் செட்டியார். எனவே படப்பெட்டியை எடுத்துக் கொண்டு டில்லிக்குச் சென்றார். அப்பொழுது தமிழ்நாட்டை சேர்ந்த காங்கிரஸ் தலைவர் கே.சந்தானம் முக்கியமான பிரமுகராக இருந்தார். அவரைப் பார்த்து, காங்கிரஸ் தலைவர்கள் மகாத்மா காந்தி படத்தைப் பார்க்க உதவி செய்யும்படி கோரினார். சுதந்திர தின விழா கொண்டாட்டத்தில் தலைவர்கள் எல்லோரும் இருப்பதால் - சினிமா படம் காட்டுவது சாத்தியமில்லை என்று சொல்லிவிட்டார். ஆனாலும் செட்டியார் நம்பிக்கை

இழக்கவில்லை. அவர் பெரும் தலைவர்களை எல்லாம் சென்று பார்த்தார்.

ஜவகர்லால்நேரு தன்னால் மகாத்மா காந்தி படம் பார்க்க நேரமில்லாததைப் பற்றி வருத்தத்துடன் குறிப்பிட்டுவிட்டு - தனது மகள் இந்திரா காந்தியை அனுப்பி வைத்தார். பிறகு ராஜேந்திர பிரசாத்தைப் போய்ப் பார்த்தார். செட்டியார் வேண்டுகோளை செவிமெடுத்த பிரசாத் தனது செயலாளரிடம் நேரம் ஒதுக்கி தருமாறு சொன்னார். ஆனால் செயலாளரோ நேரமே இல்லை என்று உறுதியாக சொல்லிவிட்டார். ராஜேந்திர பிரசாத் செயலாளரிடம் இருந்து டைரியை வாங்கி தனது கைப்படவே நேரத்தைக் குறித்துவிட்டு, 'மகாத்மா படம் பார்ப்பதை விட வேறு பெரிய வேலை ஒன்றும் இல்லை' என்று சொல்லி செட்டியாரை வழி அனுப்பி வைத்தார்.

புதுடில்லி ரீகல் தியோட்டர்க்குச் சென்றார் செட்டியார். அதன் உரிமையாளர்களைப் பார்த்து மகாத்மா காந்தி பற்றி ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கு தியேட்டர் கொடுக்க வேண்டும் என்றும் அதற்கு எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்றும் கேட்டார்.

அதற்கு தியேட்டர் உரிமையாளர், 'எங்களுக்கு பணம் ஒன்றும் வேண்டாம். இரண்டு பாஸ் கொடுத்தால் போதும். உட்கார இடம் இல்லாவிட்டாலும் - நின்று கொண்டாவது படம் பார்க்கிறோம். எங்கள் தியேட்டரில் மகாத்மா காந்தி திரையிடப்படுவதுதான் எங்களுக்குப் பொருமை. அதற்கு மட்டும் அனுமதி கொடுங்கள்' என்று சொல்லி தியேட்டரைக் கொடுத்தார்.

இந்திய தலைநகரில் கோலாகலமாக சுதந்திர கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது - அதன் ஒரு பகுதியாக செட்டியார் தயாரித்த மகாத்மா காந்தி பற்றிய டாக்குமெண்டரி படம் - பிரபல தலைவர்களுக்காக காட்டப்பட்டது. பெரும் தலைவர்கள் எல்லாம் மகாத்மா காந்தி படத்தைப் பார்த்தது அப்பொழுதுதான்.

மகாத்மா காந்தி எப்பொழுதும் வேகமாகத்தான் நடப்பார், அவரோடு மற்றவர்கள் நடக்க முடியாது. ஓடத்தான் வேண்டும். "ஆனால் தற்கால சினிமாவில் காட்டப்படுவது

மாதிரி அவ்வளவு வேகத்தில் அவர் நடப்பது இல்லை. அப்பொழுது சினிமா பிலிம் வேகம் அப்படி இருந்தது. அதைப் பார்த்துவிட்டு மகாத்மா காந்தி ரொம்ப வேகமாக நடப்பார் என்று முடிவு பண்ணிக் கொண்டுவிடுகிறார்கள்" என்று ஆட்டன்பரோ காந்தி பற்றிச் சொன்னார். ஆனால் அவர் அந்தப் படத்தைப் பார்க்கவில்லை. நண்பர்கள் சொல்லியதில் இருந்து சொல்வதாகச் சொன்னார். ஏன் என்று கேட்டதற்கு மகாத்மா பற்றி என்னுள் ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்டது. அது அப்படியே இருக்கட்டும் என்று நினைக்கின்றேன் என்றார். ஆனால் மகாத்மா பற்றி ஒரு படம் பெரிய அளவில் வெளிவந்திருப்பது தனக்கு மகிழ்ச்சியளிக்கிறது என்றார். புது முயற்சி என்பதை அவர் எப்பொழுதும் ஆதரிக்கக்கூடியவர். அது காரணமாகவே யாருமே நினைத்துப் பார்க்காத போதே மகாத்மா காந்தி டாக்குமெண்டரியை தயாரித்தார்.

கேமிராமேன் பதி, நாவலாசிரியர், மொழிபெயர்ப்பாளர் த.நா.குமாரசுவாமி, நாவலாசிரியை கோதைநாயகி அம்மாள், பிரபல பாடகி டி.கே. பட்டம்மாள் - என்று அவர் காலத்தில் முன்னணியில் இருந்தவர்கள் எல்லாம் மகாத்மா காந்தி டாக்குமெண்டரியில் சேர்ந்து உழைத்தவர்கள்.

ஏ.கே. செட்டியார் மகாத்மா காந்தி டாக்குமெண்டரி படம் 12 ஆயிரம் அடிகளைக் கொண்டு இரண்டரை மணி நேரம் ஓடினாலும் அதில் மகாத்மா காந்தி நேரடியாக எதுவும் பேசுவதாக இல்லை. அப்படி ஒரு காட்சியும் எடுக்கப் படவில்லை. உலகத்தின் பல பகுதிகளிலும், இந்தியாவிலும், போர்பந்தரிலும், சபர்மதி ஆசிரமத்திலும், மகாத்மா காந்தி அபிமானிகளையும், நண்பர்களையும் படம் எடுத்த செட்டியார் காந்தியை நேராக ஒன்றுமே எடுக்கவில்லை. அதற்கான காரணத்தை அவரே சொல்கிறார். "மகாத்மா காந்திக்கு சினிமா என்றால் பிடிக்காது. எனவே அவரிடம் - அவரைப் பற்றி படம் பிடிப்பதாகச் சொல்லி அதற்கு - அவர் மறுப்பதோடு - படமே எடுக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டால் என்ன என்கிற அச்சமே காரணம்" என்கிறார்.

ஏ.கே.செட்டியாரின் மகாத்மா காந்தி டாக்கு மெண்டரியில் பல தலைவர்களின் பேச்சும் படமும் இடம் பெற்று இருக்கின்றன. தமிழ்நாட்டுத் தலைவர்களில்

முக்கியமானவரும் - மகாத்மா காந்தியின் சகாவுமாக இருந்த ராஜாஜி படம் ஏதும் இடம் பெறவில்லை. அதற்கு ராஜாஜி ஒத்துழைப்புத் தராமல் போனதுதான் காரணம் என்று குறிப்பிடுகிறார். அதுபோலவே மகாத்மா காந்தி டாக்கு மெண்டரியில் வசனம் பேச இருந்த தேசபக்தர் எஸ்.சத்திய மூர்த்தியை பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போனது பற்றியும் வருத்தத்தோடே குறிப்பிட்டு உள்ளார்.

எல்லாவற்றையும் ஆவணம் மாதிரி பதிவு செய்யும் ஏ.கே.செட்டியார், மகாத்மா காந்தி டாக்குமெண்டரி உருவானது பற்றியும், அதில் இடம் பெற்றவர்களின் பங்களிப்புப் பற்றியும், அவருக்கே உரிய எளிய, ஆனால் சுவாரசியமான முறையில் அண்ணல் அடிச்சுவட்டில் - என்ற தொடர் கட்டுரையில் எழுதியிருக்கிறார்.

''ஆசார்ய கிருபளானி அறிமுகத்தின் பேரில் தம்மைப்படம் பிடிக்க நேரு இசைந்தார். "எப்படி போஸ் கொடுக்க வேண்டும்" என்று கேட்டார் நேரு.

''தங்களின் விருப்படி எப்படி வேண்டுமானாலும் நிற்கலாம்" என்றார் டாக்டர் பதி. இவர்தான் கேமிராமேன்.

"உடனே நேரு தமது பின்புறத்தைக் காமிராவுக்குக் காட்டிக்கொண்டு நின்றார். டாக்டர் பதி ஒன்றும் சொல்லாமல் நேருவின் முதுகைப் படம் பிடித்தார். சில விநாடிகளில் நேரு முன் பக்கமாகத் திரும்பி புன்முறுவல் பூத்தார். படத்தில் நேரு புன்முறுவல் பூக்கும் பகுதியைப் மட்டும் உபயோகித்தோம்.

"தாங்கள் நூல் நூற்க வேண்டும்" என்றார் டாக்டர் பதி.

''நீங்கள் பிலிம் எடுப்பதற்காக நான் நூல் நூற்க முடியாது! நான் நூல் நூற்கும் போது நீங்கள் படம் எடுக்கலாம்?" என்றார் நேரு.

"எப்பொழுது நூல் நூற்பீர்கள்?'' என்று தயங்கிக் கொண்டே கேட்டார் டாக்டர் பதி.

"மாலை நான்கு மணிக்கு" என்றார் நேரு.

"மாலை மூன்றே முக்கால் மணிக்கே டாக்டர் பதி ஆனந்த பவனம் சென்றார். வேலையாட்களை விசாரித்ததில் நேரு தூங்குகிறார் என்றனர். அவரை எழுப்ப யாருக்கும்

தைரியமில்லை. ஆனால் சரியாக நான்கு மணிக்கு நேரு உடையணிந்து, ஒரு பெட்டி சர்க்காவை எடுத்துக் கொண்டு கீழே அமர்ந்து நூல் நூற்கத் தொடங்கினார். அவரைப் பார்க்க வந்திருந்த டாக்டர் சையத் அகமது, அவருக்கு அருகில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

"சிலர் நேரில் பார்ப்பதைவிட படத்தில் நன்றாகத் தோற்றமளிப்பார்கள். அப்படிப் பட்டவர்களில் நேரு ஒருவர் என்று புகழ் பெற்ற அமெரிக்க எழுத்தாளர் ஜான் சுந்தர் எழுதியிருந்தார். அது முற்றிலும் உண்மை.

"நேரு நூல் நூற்றால் அந்த நூலிலிருந்து வேட்டி நெய்ய முடியாது; ஜமுக்காளந்தான் நெய்யலாம்.

"நூல் நூற்கும்போது அடிக்கடி நூல் அறுந்துபோகும். அதைச் சரிபடுத்துவார். நூல் அறுந்துபோகும் காட்சிகளை எல்லாம் விடாமல் படம் பிடித்தார் டாக்டர் பதி. அப்பொழுது நேரு முகத்தைச் சுளித்துக் கொண்டு காமிராவைப் பார்ப்பார். இந்தக் காட்சி படத்தில் வந்த போதெல்லாம் படம் பார்த்த மக்கள் சிரித்து மகிழ்ந்தார்கள்.

1927இல் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் பிலிம் அதிர்ஷ்டவசமாக கிடைத்தது. சி.என். முத்துரங்க முதலியார் வரவேற்பு குழுத் தலைவர். டாக்டர் அன்சாரி மகாநாட்டுத் தலைவர். இந்த காங்கிரஸ் மகாநாட்டிற்கு உயிர்நாடியாக இருந்தவர் 1926-ல் கௌகாத்தி காங்கிரஸ் மகாசபையில் தலைமை வகித்த மயிலைச் சீமான் எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார்.

காந்தியடிகளும் மௌலானா முகமதலியும் இந்தப் படத்தில் வருகிறார்கள்.

பண்டிதர் ஜவஹர்லால் நேரு முதன் முதலாக படத்தில் தேன்றுவது சென்னை காங்கிரஸில்தான். கவர்ச்சி மிக்க இளைஞராகத் தோன்றுகிறார்.

ஏ.கே. செட்டியார் படம் எடுத்து முடித்துக் கொண்டிருக்கும் போதே அதை அரசாங்கம் பறிமுதல் செய்யப் போகிறது என்ற பேச்சு அடிபட ஆரம்பித்துவிட்டது. எனவே அவர் படச் சுருள்களை தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பி மறைத்து வைக்க ஏற்பாடு செய்துவிட்டார். பெரிய

மனிதர்களின் வீடுகள், மடலாயங்களில் மறைத்து வைக்கப்பட்டது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர்தான் மகாத்மா காந்தி டாக்குமெண்டரி பறிமுதல் பற்றிய பேச்சு அடங்கியது.

சினிமா படம் என்பது எப்படித்தான் படப்பிடிப்பை முடித்தாலும் எடிட்டிங் அறையில் இருந்துதான் ஆரம்பமாகிறது என்று சொல்வது சர்வ சாதாரணம். அப்படித்தான் மகாத்மா காந்தியும் தொடங்கி இருக்கிறது. செட்டியார் படம் தொடங்கும் விதத்தைப் பற்றி இப்படித்தான் ஆரம்பிக்கிறார்.

மகாத்மா காந்தி படத்தை சரித்திரக் கண்ணோட்டத்துடன் தொடங்கவேண்டும் என்று முடிவு செய்தோம். தக்ஷசீலத்தில் உள்ள சேதமடைந்த பிரம்மாண்டமான புத்தர் கற்சிலையின் அருள் ஒழுகும் முகத்தை முதலில் காட்டினோம். அசோக சக்கரவர்த்தி ஸ்தாபித்த 'அசோகா தூண்', மொகலாய மன்னர்களின் அரண்மனைகள், நினைவுச் சின்னங்கள் முதலியவற்றைக் காட்டி பிரிட்டிஷார் வியாபாரிகளாக முதன் முதலாக வந்திறங்கிய சூரத் துறைமுகத்தையும் காட்டினோம் - தொடர்ந்து வருவது காந்தி யுகம்.

படத்தை எவ்வாறு முடிப்பது என்று திட்டமிட்டோம். காந்தியடிகளின் பெருமையை விளக்கும் வகையில் படத்தை முடித்தோம். Mahatma Gandhi the king of India, Delhi - என்ற விலாசத்துடன் வெளிநாட்டிலிருந்து வந்த தபால் கவரின் புகைப் படப்பிரதி ஒன்றை, புனாவில் இருந்த அன்பர் திரிவேதி கொடுத்தார். இம்மாதிரி பல புகைப்படங்கள் கிடைத்தன. அவற்றுள் முக்கியமான சிலவற்றைக் காட்டினோம்.

நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் இயற்றிய 'ஆடு ராட்டே', 'கத்தியின்றி ரத்தமின்றி'- முதலான பாட்டுக்களுக்கும் ஒரு தொகை செலுத்தி அவரிடம் அனுமதி பெற்றுக் கொண்டோம். 'ஆடு ராட்டே' என்ற பாட்டை மட்டுமே உபயோகித்தோம்.

டி.கே. பட்டம்மாளின் தந்தையாரை புரசை வாக்கத்திலிருந்த அவருடைய வீட்டில் சந்தித்தேன். 'ஆடு

ராட்டே'- என்ற பாடலை குமாரி டி.கே. பட்டம்மாள் பாடவேண்டும் என்று, எங்கள் பொருளாதார நிலை இடம் கொடாததால் சிறிய தொகை மட்டும் தருவதாகவும், கிராமபோன் ரிகார்டில் வரும் ராயல்டியில் அவர் பங்கைக் கொடுப்பதாகவும் கூறினேன். அவர் அன்புடன் சம்மதித்தார்.

செட்டியார், அண்ணலின் அடிச்சுவட்டில் என்று குமரி மலரில் மகாத்மா காந்தி டாக்குமெண்டரி பற்றி ஒரு சினிமா போலவே கட்டுரைகள் எழுதினார். அவை காட்சி ரூபமான கட்டுரைகள். இந்தத் தன்மையே. அவர் பிரயாண நூல்களிலும் அடிப்படையாக அமைந்தது.

டாக்குமெண்டரி சினிமாவை தமிழ்நாட்டில் முதன்முதலாக அறிமுகப்படுத்தி, செயல் வடிவம் கொடுத்தவர் அவர். அதுவும் ஒரு தனிப்பட்ட தலைவர் பற்றி. இரண்டரை மணிநேரத்திற்கு படத்தை முடிப்பதென்பது சிரமமான காரியந்தான். அதுவும் அவர் யார் பற்றி - மகாத்மா காந்தி பற்றி படம் எடுத்தாரோ அவரிடம் ஒரு கேள்வி - ஒரு பேட்டி கூட நேரடியாகப் படத்தில் இல்லை. அப்படிப்பட்ட ஒரு சினிமாவில் பின்னணி பாட்டு, இசை, விளக்கவுரை எல்லாம் இணைக்கவேண்டி இருந்தது. அதற்கு தமிழில் அவருக்கு வழிகாட்டிகள் யாருமில்லை. ஐரோப்பிய படங்களில் பார்த்ததை வைத்துக் கொண்டுதான் தன்னுடைய முதல் முயற்சியை அவர் செய்யவேண்டி இருந்தது. அது பற்றி ஏ.கே.செட்டியார் எழுதுகிறார்.

"காந்தியடிகள் ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் தோன்றும் காட்சிகள் 1500 அடி நீளம் இருக்கும். இதற்கு மேலைநாட்டு சங்கீதத்தைப் பின்னணியாகச் செய்ய முடிவு செய்தோம்.

"அந்த நாளில், உலகப் புகழ் பெற்ற தாஜ்மகால் ஓட்டலில், வயலின் வாசித்து வந்த பிரபலமான மெஹலி மேதா என்பவரை ஏற்பாடு செய்தோம். அவர் படத்தைப் பார்த்துவிட்டு, ஒவ்வொரு காட்சி நேரத்தையும் குறித்துக் கொண்டார். சங்கீதத்தைத் தொடங்கும் போது Fade in, முடிக்கும்போது Fade out காதுக்கு இன்பமளிக்கும் வகையில் மிருதுவாகச் செய்யவேண்டும். இதற்கு இயந்திர சாதனங்களை

உபயோகிப்பது வழக்கம். ஆனால் மெஹலி மேதா, 'இந்தச் சிரமங்கள் எல்லாம் உங்களுக்கு வேண்டாம். நானே வாசிக்கும் பொழுதே நோக்கத்துத்தக்கபடி முறைப்படி ஆரம்பித்து முடித்து விடுகிறேன்' என்றார்.

"கடிகாரத்தையே பார்க்காமல் இரவு முழுவதும் இருந்து அன்புடன் ஒத்துழைத்தார் மேதா.

அவர் விடைபெறும்போது, அவருக்குப் பேசிய தொகை ரூபாய் நூற்றைம்பதை ஒரு கவரில் வைத்து அவரிடம் கொடுத்தேன். அதனை வாங்கி உடனே தம் சட்டைப்பையில் வைத்துக் கொண்டார்.

''தயவு செய்து, சரியாக இருக்கிறதா என்று நோட்டுக்களை எண்ணிப் பாருங்கள்' என்றேன்.

"அப்பேர்ப்பட்டவர்களுடன் நான் பழகவில்லை' என்று கூறி விடைபெற்றார் மேதா."

மகாத்மா காந்தி டாக்குமெண்டரிக்கு இசை, பின்னணி பாடல், எல்லாம் போட்ட பிறகு விளக்க உரை எழுதுவது பற்றி ஏற்பட்ட பிரச்சினையைப் பற்றி ஏ.கே.செட்டியாரே எழுதுகிறார்.

''படத்துக்கு விளக்க உரை எழுதுவது பெரிய பிரச்சினையாகிவிட்டது. தமிழ்நாட்டில், ஏன் இந்தியாவிலேயே பிலிமுக்கு விளக்க உரை எழுதுபவர் - பிரபலமானவர் - யாருமே இல்லை. நம் நாட்டுக்கு அது அப்பொழுது புதிது.

''எனக்கு விளக்க உரை எழுதுவதில் அனுபவம் இல்லாவிட்டாலும் விளக்க உரையுடன் கூடிய ஏராளமான படங்களைப் பார்த்து இருக்கிறேன். எவ்வாறு எழுதவேண்டும் என்பது ஓரளவு தெரியும். ஆனால் நான் எழுதினால், அதிலுள்ள குறைகள் எனக்குத் தெரியாது. எனவே புதிதாக ஒருவரை நியமித்து அவருக்குத் துணை புரிவதுதான் சிறந்தது என்று முடிவு செய்தேன்.

பல அன்பர்களைக் கலந்து பேசி பிரபல எழுத்தாளரான த.நா. குமாரசுவாமி அவர்கள் பெயரைத் தீர்மானித்தோம். அவரை அணுகியபோது அவர் மிகவும் அடக்கத்துடன் அத்துறையில் தமக்கு அனுபவமில்லை என்று கூறினார்.

"கவலைப் படாதீர்கள். இந்தியாவுக்கே இத்துறை புதிது. இதில் யாருக்குமே இன்னும் அனுபவம் ஏற்படவில்லை. உற்சாகத்துடன் முயலுவோம்" என்றேன். அவரும் சம்மதித்தார்.

மகாத்மா காந்தி டாக்குமெண்டரி பற்றிய விவரங்களைப்பற்றி ஒரு டாக்குமெண்டரி போலவே எழுதி இருக்கும் ஏ.கே.செட்டியார் மகாத்மா காந்தி இந்தப் படத்தைப் பற்றி என்ன நினைத்தார் என்று, தனக்குச் சொல்லப்பட்ட ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்து அண்ணல் அடிச்சுவட்டில் கட்டுரையை முடிக்கிறார்.

"ஒருநாள் காலையில் எங்கள் காரியாலயத்திற்கு நடுத்தர வயதுள்ள ஆங்கிலேயர் ஒருவர் வந்தார். தம் விசிட்டிங் கார்டைக் கொடுத்தார். அப்போது லண்டனிலிருந்து Picture Post என்ற மிகப் பிரபலமான ஆங்கில சித்திரமாதப் பத்திரிகை வெளிவந்தது. அப்பத்திரிகைக்கு நம் நாட்டிலும் மிகச் செல்வாக்கு. எங்களைக் காண வந்த ஆங்கிலேயர் பிக்சர் போஸ்ட் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர். விஷயங்கள் சேகரிப்பதற்காக நம் நாட்டிற்கு வந்திருந்தார்.

"வர்தாவிலிருந்து நேற்றுதான் திரும்பினேன். அங்கு மகாத்மா காந்தியைச் சந்தித்து உரையாடினேன். நீங்கள் அவருடைய வாழ்க்கை வரலாறு டாக்குமெண்டரி பிலிம் எடுப்பது பத்திரிகையின் மூலமாக எனக்குத் தெரியும்.

"மகாத்மா காந்தியிடம் நீங்கள் பிலிம் தயாரிக்கும் விவரம் கூறி 'Would you like to see your own film? (உங்கள் வாழ்க்கைப் படத்தை நீங்கள் பார்க்க விரும்புவீர்களா?)' என்று கேட்டேன்.

"அதற்கு மகாத்மா, "I am eagerly looking forward to see it" ("அதைப் பார்க்க ஆவலாக இருக்கிறேன்" என்றார்) இந்த நல்ல செய்தியை உங்களிடம் சொல்லவே இங்கு வந்தேன் என்றார் ஆங்கிலேயர்.

"காந்தியடிகள் பிலிம் பார்ப்பது மிக அபூர்வம். அதிலும் நிச்சயமாகத் தமது படத்தை அவர் பார்க்க மாட்டார் என்பதில் சந்தேகமே இல்லை.

"என்றாலும், காந்தியடிகள் கூறியதாக ஆங்கிலப் பத்திரிகை நிருபர் கூறியபோது, காந்தியடிகளே தம் படத்தைப் பார்ப்பது போன்ற பிரேமை எனக்கு உண்டாயிற்று."

மகாத்மா காந்தி டாக்குமெண்டரி எடுத்து முடிப்பதில் ஏ.கே. செட்டியார் பக்தியுடனும், அளவற்ற ஈடுபாட்டோடும் உழைத்தார். படம் கிடைப்பதிலும் - அதில் தேவையானவற்றை தேர்ந்தெடுப் பதிலும் எவ்வளவோ சிரமங்கள் பட்டார். எங்கு படம் கிடைக்கும் என்று சொல்லப் பட்டதோ - அங்கெல்லாம் சென்றார். 1920ஆம் ஆண்டில் திலகர் காலமானபோது எடுக்கப்பட்ட படத்தை - அதாவது இந்திய சினிமாவின் தந்தை என்று கருதப்படும் தாதா சாகிப் பால்கே எடுத்த படத்தை பெற்று இணைக்க நேர்ந்ததை தனது பாக்கியம் என்றே கருதுகிறார். முயன்றால் முடியும் என்பதை ஏ.கே.செட்டியார் தனது மகாத்மா காந்தி டாக்குமெண்டரி மூலம் சாதித்தார் என்றே குறிப்பிட வேண்டும்.

ஏ.கே.செட்டியாரின் மகாத்மா காந்தி டாக்கு மெண்டரியில் காந்தியோடு பழகிய பலர் இடம் பெற்று இருக்கிறார்கள். அதில் சென்ற தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அதிகம். தற்போது காந்தி டாக்குமெண்டரி அரசின் ஆவணமாகி விட்டதால் படத்தில் என்னெனன் இருக்கிறது என்று ஏ.கே. செட்டியாரின் நெடுநாளைய நண்பரும், அவர் காலமான பின்னர் குமரிமலர் பத்திரிகையை பொறுப்பேற்று நடத்திய கோபாலன் 'புண்ணியர்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அண்ணல் வாழ்க்கைப் படத்தில் சேர்க்க பாரத நாட்டுச் சுதந்திரப் போராட்டத்தில் தலைமை தாங்கிய, பங்கு கொண்ட மாபெருந்த் தலைவர்களை நேரில் கண்டு படம் பிடித்தார்.

அன்று Prince among Beggers என்று அன்புடன் அழைக்கப்பட்ட பண்டித மதன் மோகன் மாளவியா,

சேலம் விஜய ராகவாச்சாரியார்

தீனபந்து சி.எப்.ஆண்ட்ரூஸ்

சர்.சி.வி.ராமன்

சபர்மதி ஆசிரமம்

மிருதுளா பென் சாராபாய்

சுராஜ்பவன் - பண்டித ஜவகர்லால் நேரு

டாக்டர் முகமது

ஆசாரிய கிருபலானி

மகாதேவ தேசாய்

ஜம்னாலால் பஜாஜ்

ஜே.சி.குமரப்பா

சேவாகிராம்

மாண்டிசோரி அம்மையார்

ஜப்பான் கவிஞர் நோகுச்சி

சுசீலா நய்யர்

பியரிலால்

அரிய நாயகம்

மதன்லால் காந்தி

மகன்வாடி மியூசியம்

ரவிசங்கர் சுக்கலா

தென்னாப்பிரிக்காவில் காந்தி அடிகளின் உற்ற நண்பராய் இருந்த போலக்கை லண்டனில் சந்தித்து,

தாதாபாய் நௌரோஜி

லோகமான்ய கங்காதர திலகர்

கோபால கிருஷ்ண கோகலே - ஆகியோரின் திரைப்படங்களைப் பெற்றார்.

டாக்டர் பீடர் பொய்க்கே

வி.கே.கிருஷ்ணமேனன்

கம்யூனிடி சர்ச் பாதிரியார் ஹோம்ஸ்

ஹெர்மென் காலன் பர்க்

தென்னாப்பிரிக்கத் தமிழர்களான

ஸ்ரீமதி பி.கே. நாயுடு

ஸ்ரீமதி தம்பி நாயுடு

ஏ.டி.லாஸ்ரஸ்

இந்திய அரசாங்கப் பிரதிநிதி பெனகல் ராமராவ். தென்னாப்பிரிக்கா செல்லும் முன் சென்னையில், தென்னாப்பிரிக்காவின் இந்திய அரசாங்கப் பிரதிநிதியாக

இருந்த ரைட் ஆனரபில் வி.எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி ஆகியோரைக் கண்டு பேசி தென்னாப்பிரிக்காவைப் பற்றி தெரிந்து கொண்டார்.

நாடு சுதந்திரமடைந்த நாளையொட்டி 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள், அண்ணலின் வாழ்க்கைப் படத்தை புதுடெல்லியில் பாரத நாட்டின் பெருந் தலைவர்களுக்குத் திரையிட்டுக் காட்டி தனிப்பெருமை பெற்றார்.

## மகாத்மா காந்தி 1940

*டாக்குமெண்டரியில் பங்குபெற்ற கலைஞர்கள்*

டெக்னிக்கல் டைரக்ஷன்

டாக்டர் பி.வி.பதி

கேமிராமேன்

டாக்டர் பி.வி.பதி

வசனம்

த.நா.குமாரசுவாமி

விளக்க உரையாளர்கள்

வை.மு.கோதைநாயகி அம்மாள்

டி.கே.ஜெயராமய்யர்

செருகளத்தூர் சாமா

சா.கணேசன்

(கம்பன் அடிப்பொடி)

பின்னணிப் பாட்டுப் பாடியவர்கள்

டி.கே.பட்டம்மாள்

சூரிய குமாரி

சி.ராஜரத்தினம்

பாய் சுந்தராபாய்

சென்சார் போர்டு உறுப்பினர்களாக இருந்து, மகாத்மா காந்தி படத்திற்கு சான்றிதழ் வழங்கியவர்கள்

டாக்டர் யு.கிருஷ்ணராவ்

இந்து பத்திரிகை ஆசிரியரான கஸ்தூரி ஸ்ரீனிவாசன்

1937ஆம் ஆண்டில் தொடங்கி 1940ஆம் ஆண்டில் முடிந்தது.

சென்சார் சான்றிதழ் பெற்றது 1940 ஆண்டு

மொழி: தமிழ், தெலுங்கு.

மொத்தம் தொகுக்கப்பட்ட படம் 50,000அடிகள்.

திரையிடப்பட்ட படம் 12,000 அடிகள்

1952 ஆம் ஆண்டில் அமெரிக்க அகாதெமி ஆப் ஏஷியன் ஸ்டடீஸ் என்ற அறக்கட்டளையோடு சேர்ந்து

ஆங்கிலத்தில் பின்னணி உரை சேர்க்கப்பட்டது.

மகாத்மா காந்தி டாக்குமெண்டரி தற்போது இந்திய அரசாங்கத்தின் உடைமையாக இருக்கிறது.

# 5. முடிவுரை

ஏ.கே.செட்டியார் காலமானதும் அவரின் நெடு நாளைய நண்பரும் குமரிமலர் வாசகரும், எழுத்தாளருமான கி.சந்திரசேகரன் பின்வருமாறு குறிப்பு ஒன்றை எழுதினார்.

''இன்று எத்தனையோ, விதப் பயண நூல்கள் வெளியாகின்றன. அவைகளுக்குப் பரிசுகளும் பெருமளவில் வழங்கப்படுகின்றன். ஆனால் இலக்கியமாக மதிக்கக்கூடிய பிரயாண நூல் வடிவெடுத்தது சந்தேகமின்றி ஏ.கே. செட்டியாரின் பேனாவினால் என்பதைப் பட்ச பாதமில்லாத நெஞ்சங்கள் ஒப்பும்.

"மனத்தில் உறுதிவேண்டும். செட்டியார் பயணம் செய்த காலத்தில் இன்றுள்ள பலவித செளகரியங்கள் இல்லை. இருப்பினும் எவ்வித எதிர்பாராத தடைகளையும் சிறிதும் ஆயாசமின்றித்தாண்டி மேலும் தமது விரதமெனப் பூண்ட 'டாக்குமெண்டரி' படங்களை எல்லா இடங்களிலும் சென்று காட்டி, முதல் முதலில் மகாத்மாவின் வரலாற்றை மக்களின் கண்களின் முன் படங்களாக வைத்தவர் அவரே. ஸர்.ஆட்டன்பரோ போன்ற பிரபுக்களுக்குக் கிடைத்த அரசாங்க உதவிகளொன்றும் கிடைக்காத நாட்களில், தான் ஒருவராகவே செய்த காரியம், அதுவே அவருடைய நினைவை என்றும் பரிமளிக்கச் செய்ய வல்லது.

"எல்லாம் வல்ல இறைவன் அவர் வாழ்ந்த காலத்தில் தேகத்தேம்பை அவரிடம் வேண்டியளவு கொடுத்திருந்தான் என்பதில் ஐயமேயில்லை. உலகம் முழுவதும் ஆங்காங்கே கிடைத்த வாகனங்களை உபயோகித்துக் கொண்டு ஒருவர்

பிரயாணம் செய்வதென்பது மற்றெவராலும் சாத்தியமில்லை. செட்டியார் ஒருவரே அதனைக் கொஞ்சமும் குறைகூறாமல் செய்து காட்டினார்.

"அவர் மற்றவருடன் பழகும் விதமே அலாதி. வீண் பேச்சு இருக்காது. பண்பாளரின் அடித்தளத்தில் உருவாகும் ஈகையும் அன்பும் எவ்விடத்திலும் தாராளமாய் அவருடைய பேச்சு நடவடிக்கைகளில் காணப்படும்."

–இது கி.சந்திரசேகரன் தனிப்பட்ட முறையில் எழுதியது என்றாலும், செட்டியாருடன் பழகியவர்கள், அவர் பயண நூல்களில் சிலவற்றைப் படித்தவர்கள், குமரிமலர் சில இதழ்களைப் பார்த்தவர்கள் – என்று எல்லோரும் எழுதும் மனந்திறந்த அஞ்சலி உரையாகவே அமைகிறது.

உலகமெல்லாம் சுற்றி வந்து பல பயண நூல்கள் எழுதி இருக்கும் ஏ.கே.செட்டியார் ஐரோப்பா வழியாக என்று 1961ஆம் ஆண்டில் வெளியிட்ட நூலின் முடிவுரையை வெகு நேர்த்தியாக எழுதியிருக்கிறார் என்பது அவரைப் புகழ்ந்துரைப்பதாகாது. அது எதுவாக வாழ்ந்து வந்தாரோ அதன் பிரதிபலிப்பாகவே முடிவுரை எழுதி இருக்கிறார். அவரை உருவாக்குவதில் சிறப்பான இடம் பெற்ற சிந்தனை வளம் முழுவதும் சிறிய அந்த முடிவுரையில் பிரதிபலிக்கிறது. பயணம் செய்வது ஏன்? அதனால் வாழ்க்கைக்கு ஏதாவது பயன் உண்டா? அறிஞர்களும், ஞானிகளும் வெகு காலமாகக் கேட்டுவரும் கேள்வி. அதற்கு பலவிதமாகப் பதில்கள் சொல்லப் படுகின்றன. ஆனால் ஒவ்வொரு தலைமுறையிலும் மறுபடியும் – மறுபடியும் கேள்வி கேட்கப்பட்டு வருகிறது. அது திருப்தி அளிக்காத ஒரு கேள்விக்குப் பதில் அளிப்பது மாதிரிதான் செட்டியார் முடிவுரை எழுதியிருக்கிறார்.

"மூன்றாண்டுகளுக்கு மேலாகப் பல நாடுகளில் சுற்றி அலைந்த நினைவுகள் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக மனக்கண்களில் தோன்றி மறைந்தன.

"உலகத்திலுள்ள முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று நிறவேற்றுமை. இது வெள்ளையருக்கும் கறுப்பு நிறத்தவருக்கும் உள்ள வேற்றுமையின் தன்மையை விளக்குகின்றது. ஆனால்

சில நாடுகளில் ஒரே நிறத்தினருக்குள் எவ்வளவோ இழிவான வேற்றுமைகள் இருக்கின்றன.

"மனித சமூகத்தின் வளர்ச்சிக்கு இடையூறாக நிற்கும் இந்த தீமைகள், யுத்தத்திற்குப் பின் சிறிது சிறிதாக்க் குறைந்து வருகிறது என்றே கூறலாம்.

"ஒவ்வொருவருக்கும் தாய்மொழிப் பற்றும், தாய் நாட்டுப் பற்றும் இருக்கவேண்டியது அவசியம். ஆனால் அந்தப் 'பற்று' 'வெறி' யாக மாறிவிடக்கூடாது. அன்றியும் அது சமுதாய வளர்ச்சியைத் தடை செய்யவும் கூடாது.

"மனித சமூகம் ஒன்றே. மனிதருக்குள்ள பெரும்பாலான பிரச்சினைகள் ஒன்றே. எங்கும் காணப்பெறும் புனிதமான மனித உணர்ச்சி ஒன்றே.

" இரத்தத்தில் அனைவரும் சகோதரர்கள்" என்பது வடமொழியில் உள்ள ஒரு திருவாசகம்.

" நான் ஒரு அதீனியன் அல்லன். ஒரு கிரேக்கன் அல்லன். ஆனால் உலகைப் பிரஜையே ஆவேன்" என்றார் ஸோக்ரதர், என்னும் கிரேக்க அறிஞர், தமது மரணப்படுக்கையில் இருந்தபடியே.

"டியன் சியா வாய் குங்" என்பது சீனத்தந்தை சன்யாட் சென்னின் திருமொழி. அதன் பொருள் "ஆகாயத்திற் கீழே அனைவரும் ஒன்றே"

"ஒருவன் தனது நாட்டைப் பற்றியன்று, தனது மனித இனத்தைப் பற்றிப் பெருமை கொள்ளவேண்டும்" என்பது காந்தி அடிகளின் அமுதமொழியாகும்.

இந்த உயர்ந்த கருத்துக்கள் பொதிந்துள்ள பண்டைக் காலத்துத் தமிழ்ப் பேரறிஞரின் அருளுரை

"யாதும் ஊரே; யாரும் கேளிர்"

**ப**த்திரிகையாளரான ஏ.கே.செட்டியார் இதர சகோதர பத்திரிகை ஆசிரியர்களோடு இணக்கமான உறவு வைத்துக் கொண்டிருந்தார், அவர் அந்த பத்திரிகைகளுக்கு அதிகமாக

எழுதாவிட்டாலும், ஆனந்தவிகடன் தொடங்கி வெளிவந்த போது அதன் ஆசிரியருடன் செட்டிநாடு, மற்றும் தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று சந்தா சேர்த்துக் கொடுத்தார். ஆனந்த விகடன் பொன்விழா சமயத்தில் தனது ஆனந்த விகடன் உறவு பற்றி ஒரு கட்டுரை எழுதினார்.

ஏ.கே. செட்டியார் தனது இறுதி மூச்சு உள்ள வரையில் எழுதிக் கொண்டும்; பழைய பத்திரிகைகள், புத்தகங்களில் உள்ள தரமான, சுவாரசியமான அம்சங்களைத் தொகுத்துக் கொண்டும் இருந்தார். அவர் அலசி ஆராய்ந்த பத்திரிகைகளில் முதலிடம் தினசரியாக வெளிவந்த சுதேசமித்திரன். அப்புறம் பாரதியாரின் இந்தியா இதழ்கள். தான் கண்டெடுத்தவைகளை காலவாரியாகத் தொகுத்து வைத்துக் கொண்டார். அந்த வகைத் தொகுப்புகளில் மகாத்மா காந்தி பற்றி சுதேசமித்திரனில் வெளிவந்ததில் முதல் பகுதி 'புண்ணியவான் காந்தி' என்ற பெயரில் வெளிவந்தது. இன்னும் இரண்டு பகுதிகள் வெளிவரவேண்டி இருக்கிறது.

எழுபத்திரண்டு ஆண்டுகள் வரை வாழ்ந்த ஏ.கே.செட்டியார் எழுதியவை அனைத்தும் குமரிமலர் இதழில் வெளிவந்து உள்ளன. அவற்றை அவரே தொகுத்து நூல்களாகவும் ஆக்கி இருக்கிறார். ஆனால் இன்னும் பல கட்டுரைகள் நூல் உருவம் கொள்ளத்தக்கது குமரிமலர், பத்திரிகையிலேயே இருக்கின்றன என்று குறிப்பிட வேண்டும்.

அவர் எழுதியவற்றில் பதினேழு அச்சாகி நூல்களாக வெளிவந்து இருக்கின்றன. அவை பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டு உள்ளன.

1. ஜப்பான்
2. உலகம் சுற்றும் தமிழன்
3. பிரயாண நினைவுகள்
4. திரையும் வாழ்வும்
5. அண்டை நாடுகள்
6. இட்டபணி
7. மலேயா முதல் கனடா வரை
8. அமெரிக்க நாட்டில்

9. கரிபியன் கடலும் கயானாவும்

10. ஐரோப்பா வழியாக

11. குடகு

12. ஔவையார்

13. உணவு - தொகுப்பு நூல்

14. பண்பு - தொகுப்பு நூல்

15. தமிழ்நாடு பயணக்கட்டுரைகள் - முதல் பாகம் தொகுப்புநூல்

16. புண்ணியவான் காந்தி - முதல் பாகம் தொகுப்பு நூல்

17. கொய்த மலர்கள் - தொகுப்பு நூல்

## அச்சில் கொண்டு வர வேண்டிய நிலையில் உள்ளவை

1. புண்ணியவான் காந்தி - தொகுப்பு (2, 3ம் பாகங்கள்)

2. அண்ணல் அடிச்சுவட்டில்

3. பஸ் பிரயாணம்

புண்ணியவான் காந்தி - என்பது ஏ.கே.செட்டியார் மகாத்மா காந்தி மீது கொண்ட ஈடுபாட்டினால் தொகுக்கப்பட்ட நூல். 1912 ஆம் ஆண்டில் இருந்து - தென்னாப்பிரிக்காவில் தனது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய மகாத்மா காந்தி பற்றி தமிழ்ப்பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள், தலையங்கள், காந்தி பற்றி கட்டுரைகள் ஆகியவற்றின் தொகுப்பாகும். மகாத்மா காந்தி பற்றிய தமிழில் வெளிவந்த எந்த ஒரு பகுதியும் விடுபட்டு போகக்கூடாது என்ற அக்கறையோடு அவர் பாடுபட்டு அவற்றைத் தொகுத்தார்.

புத்தகம் என்பது எப்பொழுதும் படிக்கக்கூடியது. ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்குச் செல்லக் கூடியது என்று திடமாக நம்பி எழுதியவர் அவர். அவர் எழுதிய நூல்களில் காணப்படுகின்ற தேசங்கள் வெகுவாக விஞ்ஞான வளர்ச்சிக் காரணமாக மாறி இருந்தாலும் -

மனிதர்கள் என்ற அளவில் அந்த நாடுகளில் வாழும் மனிதர்கள் அப்படியே இருக்கிறார்கள்.

'நீ எங்கு சென்றாலும் உன்னையே கொண்டு போகிறாய்' என்று சொல்லப்படுவது எவ்வாறு உண்மையாக இருக்கிறதோ - அது போலவே ஏ.கே.செட்டியார் எழுதிய பயண நூல்களும் உண்மையாக இருக்கின்றன.

ஆனந்த விகடன் பத்திரிகையை முதலில் தொடங்கி, அதனை எஸ்.எஸ் வாசனுக்கு எழுத்து ஒன்றுக்கு இருபத்தைந்து ரூபாய் என்று ஆனந்தவிகடனில் உள்ள எட்டு எழுத்துக்கும் இருநூறு ரூபாய்க்கு விற்றுவிட்டு 'ஆனந்த விஜய விகடன்' என்று ஒரு புது பத்திரிகைத் தொடங்கி அதற்கு சந்தா வசூலிக்க கோட்டையூர் சென்ற பூதூர் வைத்தியநாதையர் பற்றி ஒரு ரசமான கட்டுரையை 1980ஆம் ஆண்டில் எழுதினார்.

"நான்கு தினங்களுக்குப் பின்னர் வைத்தியநாதையர் என்னிடம் விடைபெற்ற போது எனக்கு மிக வருத்தமாக இருந்தது. கடைசி வரையில் அவர் என்னிடம் சந்தா கேட்கவே இல்லை. நானாகவே இரண்டு ரூபாய் கொடுத்து என்னைச் சந்தாதாரனாகச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன். அவர் தயங்கினார். உடனே புன்முறுவலுடன், 'மாணவர் சந்தா ரூபாய் ஒன்றுதான்' என்று சொல்லி ஒரு ரூபாய் மட்டும் பெற்றுக் கொண்டு ரசீது கொடுத்தார்."

—1928ஆம் ஆண்டில் நடைபெற்றதை, நிகழ்ந்தவாறே சொல்கிறார்.

இப்படி நிகழ்ந்தவாறு சொல்வது அவருக்கு இயல்பாக வந்து, படித்து அனுபவிக்கும் படியாக இருக்கிறது.

◉

# ஏ.கே.செட்டியாரின்
# முக்கியமான நூல்கள்

1. உலகம் சுற்றும் தமிழன், முதல் பதிப்பு 1940
   சக்தி வெளியிடு. சென்னை
2. திரையும் வாழ்வும், முதல் பதிப்பு 1943
   தமிழ்ப் பண்ணை தியாகராய நகர். சென்னை
3. கரிபியன் கடலும் கயானாவும், முதல் பதிப்பு 1957
   குமரிமலர் காரியாலயம் ஆழ்வார்பேட்டை. சென்னை
4. அமெரிக்கநாட்டில்
   சக்தி காரியாலயம், சென்னை
5. ஐரோப்பா வழியாக, முதல் பதிப்பு 1961
   குமரிமலர் காரியாலயம், ஆழ்வார்பேட்டை. சென்னை
6. குடகு, முதல் பதிப்பு 1967
   குமரிமலர் காரியாலயம், ஆழ்வார்பேட்டை. சென்னை
7. உணவு - தொகுப்பு
   குமரிமலர் காரியாலயம், ஆழ்வார்பேட்டை. சென்னை
8. தமிழ்நாடு பயணக்கட்டுரைகள் - தொகுப்பு
   முதல் பதிப்பு 1968
   வெளியிட்டாளர்கள்:
   ஆர். ராமச்சந்திரன், ஏ.வீரப்பன், சென்னை

**ஏ. கே. செட்டியார்** (1911–1983) உலகத்தின் பல நாடுகளுக்கும் பயணம் செய்து அந்த அனுபவத்தின் அடிப்படையில் 'உலகம் சுற்றும் தமிழன்' என்ற ஒரு நூல் எழுதினார். பின்னர் தமிழ் மக்கள் அவரை உலகம் சுற்றும் தமிழன் என்றே அன்புடன் அழைத்தார்கள். தமிழில் பயண இலக்கியத்தின் முன்னோடி அவர். ஏ. கே. செட்டியாரின் முழுப் பெயர் ஏ. கருப்பன் செட்டியார். இளம் பருவத்தில் பர்மா சென்று 'தனவணிகன்' பத்திரிகை ஆசிரியராக இருந்தார். பின்னர் ஜப்பான் சென்று புகைப்படத் துறையில் தேர்ச்சி பெற்றார். மகாத்மா காந்தியின் தீவிரமான பக்தர். அந்த பக்தி ஈடுபாட்டோடு 1940ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி பற்றி ஒரு டாக்குமெண்டரி படம் தயாரித்து வெளியிட்டார். மகாத்மா காந்தி பற்றிய முதல் சினிமா படம் அதுவே. நாற்பதாண்டுகள் 'குமரிமலர்' மாத இதழ் ஆசிரியர். வெளிநாட்டுப் பயணம் போலவே உள்நாட்டிலும் பயணம் செய்து சுவாரசியமாக எழுதியவர். அவர் பயண நூல்களின் பிரதான அம்சம் எளிமையும் அழகும்தான். அவர் பயண நூல்களில் சில உலகம் சுற்றும் தமிழன், அமெரிக்க நாட்டில், ஐரோப்பா வழியாக, மலேயா முதல் கனடா வரை. அவரது தொகுப்பு நூல்கள்: தமிழ்நாடு, பயணக்கட்டுரை, பண்பு, உணவு.

**சா. கந்தசாமி** சிறுகதை, நாவலாசிரியர். டாக்குமெண்டரி சினிமா இயக்குநர். உலகம் சுற்றும் தமிழன் ஏ. கே. செட்டியாரோடு சில ஆண்டுகள் பழகியவர். அந்தப் பழக்கத்தைப் பிரதானமாகக் கொண்டு ஏ. கே. செட்டியார் பற்றிய வரலாற்றை எழுதியிருக்கிறார். *விசாரணைக் கமிஷன்* நாவலுக்காக சாகித்திய அக்காதெமி விருது பெற்றவர்.

A. K. Chettiar (Tamil) Rs. 25

ISBN 81-260-0898-9

இருபத்திரண்டு மொழிகளில் நூல்கள் வெளியிடும் சாகித்திய அக்காதெமி உலகிலேயே மிகப் பெரிய வெளியீட்டகம்.